Deviyin KANMANI -Tamil Fortnightly JULY - 15, 2010 Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.



# என்னைப்பற்றி...


கண்மணியின் மூலம் அறிமுகமான நான் மீண்டும் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. 'நினைக்காத நேரமில்லை' என்ற இந்த நாவலில் அன்பு, நேசம், நட்பு, குடும்ப ஒற்றுமை என அனைத்தையும் சரிவிகிதமாக கலந்து தந்திருக்கிறேன். படித்துவிட்டு உங்கள் விமர்சனங்களை எழுதுங்கள். எனது முந்தைய நாவல்களின் கதாபாத்திரங்களான ஸ்ரீராம்-ஜானகி, கோதை-ரகுராம் போலவே இந்த மீராவும் கண்ணனும் உங்கள் மனதில் நிற்பார்கள் என்று நம்புகிறேன்.

எனது படைப்புகளை ஏற்று என்னையும் ஒரு எழுத்தாளராய் உங்களிடம் அறிமுகப்படுத்திய நம் ''கண்மணிக்கு'' எனது மனமார்ந்த நன்றி!

இப்படிக்கு

என்றும் அன்புடன்

சொ.கலைவாணி சொக்கலிங்கம்.



# நினைக்காத நேரமில்லை

## சொ. கலைவாணி சொக்கலிங்கம்

I

சின்னஞ்சிறு கூட்டுக்குள்ளே
சொர்க்கம் இருக்கு-அட
சின்னச்சின்ன அன்பில்தானே
ஜீவன் இன்னும் இருக்கு!

அப்பாவின் ஆரவாரமான சிரிப்பொலி அடுக்களை வரை எதிரொலித்தது. சமையலில் ஈடுபட்டிருந்த யசோதாவும் மீராவும் ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டனர். அப்பா இப்படி கலகலப்பாக பேசி சிரித்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன. நன்றாக சிரிக்கட்டும் பேசி கொண்டாடி மகிழட்டும். இந்த வீடு மீண்டும் பழையபடி குதூகலிக்கட்டும் கேலிப்பேச்சும் விளையாட்டும் செல்லமாய் போலிசண்டையுடன் மீண்டும் பழையநாட்கள் திரும்பட்டும்.

''ஏய் மீரா! தீயை குறைச்சுவை. அடிப்பிடிச்சிடாம. அப்புறம் இத்தினி நேரம் கஷ்டப்பட்டது வீணாகிடும்''- அம்மாவின் குரலில் வாய்வரை பொங்கிக்கொண்டிருந்த பாத்திரத்தின் மூடியை விலக்கிவிட்டு அடுப்பை சிம்மில் வைத்தாள் மீரா. மூன்று ஏலக்காய்களை எடுத்து துளிசர்க்கரையுடன் சேர்த்து பேப்பரில் வைத்து நசுக்கினாள். ''என்னம்மா! பாயாசம் ஆயிடுச்சா. சீதாராமன் பறக்கிறானே. உடனே போகணுமாம்''-அப்பா ஹாலிலிருந்து குரல் கொடுத்தார்.

''இதோப்பா ஒரே நிமிஷம்.''-என குரல் கொடுத்தவாறே ஏலப்பொடியை பாயாசத்தில் போட்டு அடுத்த அடுப்பை பற்றவைத்து சிறிய கடாயை அடுப்பிலேற்றி சிறிது நெய் ஊற்றி முந்திரி திராட்சையை வறுத்துக்கொட்டினாள் மீரா. பருப்பு பாயாசம் கமகமவென வாசல் வரை மணத்தது. அடுப்பை அணைத்துவிட்டு சிலிண்டரை மூடினாள். ஷெல்பில் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தடம்ளரில் இரண்டை எடுத்து சூடான பாயாசத்தை ஊற்றி தட்டில் எடுத்துக் கொண்டு ஹாலிற்கு வந்தாள்.

''என்னதான் சொல்லுடா. யசோதா கைமணம் தனிருசிதான். அது என்ன மீனுடா பிரமாதமா இருந்துதேப்பா இப்படி மீன்குழம்பு சாப்பிட்டு எவ்ளோ நாளாச்சி வயிறு நிறைய திருப்தியா சாப்பிட்டேனே இதுக்குமேலே பாயாசம் வேறா வயித்துல இடமே இல்லடா''- சீதாராமன் சொல்லிக் கொண்டிருக்க. ''ம்! இதோ பாயாசம் வந்திருச்சி கொண்டாம்மா'' என்றவாறு மகளிடமிருந்து தட்டைவாங்கி ஒரு டம்ளரை எடுத்து நண்பனிடம் கொடுத்தார் அனந்தராமன் ''டேய்! சீதாராமா! சமையல்ல யசோதாயோட கைமணம் அப்படியே மீராவுக்கு இருக்குதுடா எங்க வீட்டில் எந்த சின்ன விசேஷம்னாலும் அதுல கண்டிப்பா மீராவோட இந்த பருப்பு பாயாசம் இருக்கும். பச்சைபருப்பு வெல்லம் முந்திரி ஏலம் போட்டு பிரமாதமா பண்ணுவா சாப்பிட்டுப் பாரு. அப்புறம் இன்னும் ரெண்டுகிளாஸ் கேட்டு வாங்கிகுடிப்ப நீ பாரேன்''- மகளின் பெருமையை நண்பனிடம் சொல்லிபடியே வாய்விட்டு சிரித்தார்.

''அப்படியா சொல்றே. வாசனை தூக்கத்தான் செய்யுது ஆனா வயசு ஏற ஏற சாப்பாட்டை குறைச்சுக்கணும் இல்லியா. அதான் பார்க்கிறேன்.''

''அதெல்லாம் சும்மாடா வயிறுநிறைய சாப்பிடணும் முடியறவரை உழைக்கணும் நிம்மதியான தூக்கம் தூங்கணும் அப்படி இருந்தா ஒரு நோயும் நம்மை நெருங்காது சும்மா குடிடா''- என்றவாறு தனக்கும் ஒருடம்ளரை எடுத்துக் கொண்டு ரசித்து குடிக்கத் தொடங்கினார். அனந்தராமன்.

இரண்டுவாய் பருகிய சீதாராமன் அசந்துதான் போனார். ''அட! நிஜம்தான் ருசி அபாரம் ஏம்மா மீரா இது என்னபாயாசம், பருப்புபாயசமா நான் இதுவரை பால்பாயசம்தான் சாப்பிட்டிருக்கேன். இப்படி ஒரு பாயாசம் சாப்பிட்டதே இல்லை. ரொம்ப பிரமாதமா இருக்கும்மா. உன் அம்மாவோட கைம[illegible] டியே இருக்கு யசோதா இ[illegible] யினிங்கா'' என்றார் அம்மாவைப் பார்த்து.

''அப்படியெல்லாம் இல்லண்ணா படிச்சிட்டு வீட்ல சும்மாதானே இருக்கா. அவளே ஏதாவது செய்து செய்து பார்த்து பழகிடுவா எல்லாமே நல்லாத்தான் இருக்கும்''- என்றாள் யசோதா பெருமையோடு.

''சும்மாவா சொன்னார்கள் தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலைன்னு அது பொருத்தமாத்தான் இருக்கு''- என்றவாறே டம்ளரை காலி செய்து மேசை மேல் வைத்தார். ''சரிடா எனக்கும் நேரமாச்சு உன்னை பார்த்ததுல நேரம் போனதே தெரியல்ல. மணி நாலாகிருச்சே சரி ராதா எப்போ வருவா அவளையும் பார்த்திட்டு போகலாம்னு பார்த்தேன்''- என்றார் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே.

''அக்கா வர மணி அஞ்சாகும் மாமா ஸ்கூல் விட்டு பசங்களோடயே சேர்ந்து வந்திடுவா பக்கத்துலதானே ஸ்கூல் இருக்கு''

''ஓ இப்போ எப்படிம்மா இருக்கா இன்னும் அப்படியேதான் இருக்காளா?'' அப்பாவின் சிரித்தமுகம் மாறியிருந்தது. சீதாராமன் நண்பனின் தோளைத் தட்டிக்கொடுத்தார். ''ஸாரிப்பா! மறந்துபோனதை நினைவு படுத்திவிட்டேனோ''

''சேச்சே! இல்லடா மறந்தால் தானே நினைப்பதற்கு மறக்கும் படியாகவா செய்து விட்டு போயிருக்கிறான் நெருஞ்சிமுள்ளாய் சாப்பிட விடாமல் தூங்கவிடாமல் நடமாட முடியாமல் என் கண்மணியை முடக்கி விட்டானே சண்டாளன்.''-எத்தனை முயன்றும் தொண்டை அடைத்துக் கொண்டு கண்களில் நீர் சுரந்தது.

''அப்பா! இப்போ ஏன் அந்தப் பேச்செல்லாம். மாமா நல்ல விசயத்தோட வந்திருக்கிறப்போ இப்படியெல்லாம் கண்கலங்கலாமா?மாமா மனம் வேதனைப்படாதா''- மீரா தந்தையின் தோள்பற்றி உலுக்கவே சட்டென சுதாரித்துக்கொண்டார் அனந்தராமன்.

''அட ஆமா சரிடா சரோஜா எப்படி இருக்கிறா? அம்மா சௌக்யமா பார்த்தியா இவ்வளவு நேரமா குடும்பநலம் விசாரிக்கவே இல்லியே நான்?''-குறைபட்டுக் கொண்டார்.

''நமக்குள்ள என்னடா பார்மாலிட்டீஸ் எல்லாம்? சரோஜா அமோகமா இருக்கா. ஏழு குழந்தைங்களையும் மேய்க்கவே அவளுக்குநேரம்

''எது சொன்னாலும் மறுவார்த்தை பேசாம அதை உடனே செஞ்சு முடிச்சுடறீங்களே... எப்படி?''

''எனக்கு கல்யாணம் ஆயிடுச்சுசார்..!''

-ராஜிராதா





போதவில்லை. இல்லையின்னா எங்கூட வந்திருப்பா. தம்பதி சமேதரா வந்துதான் பத்திரிகை வைக்கணும்னு இருந்தேன் ஸாரிடா தப்பா நினைச்சுக்காதே அம்மாவுக்கு இப்போ முன்னமாதிரி நடமாட முடியலியா சரோஜாவாலயும் பார்த்துக்க முடியல்ல. அதான் உனக்கு பத்திரிக்கை வெச்சிட்டு தாம்பரத்தில் டாக்டர் சேஷகிரி இருக்காரில்ல அவரையும் பார்த்துட்டு போகணும்''- என்றார் சீதாராமன்.

''ஏண்டா! சேஷகிரியா வீட்டுக்கு வந்து அம்மாவை பார்க்கிறார்? அவரு ரொம்ப பிஸியா இருப்பாராமே'' டம்ளரை வைத்துவிட்டு மேல் துண்டால் வாயை துடைத்துக் கொண்டே கேட்டார்.

''இல்லப்பா! அம்மாவுக்கு ஒண்ணும் பெரிய நோயெல்லாம் இல்ல ஏற்கனவே இருக்கிற சுகர் பிராபிளம் தான். சரோஜா வேற இப்ப கல்யாண பரபரப்பு பேரன் பேத்திங்கன்னு பம்பரமா சுத்திகிட்டே இருக்கா..அடிக்கடி சோர்ந்து போயிபடுத்திடுறா அம்மாவை கவனிக்க வேளாவேளைக்கு சாப்பாடு, மாத்திரைன்னு கொடுக்க முடியல்ல. பாவம் அம்மாவும் அறையிலேயே அடைஞ்சு கிடக்கிறாங்க. அதான் ஒரு நல்ல நர்ஸா பாத்து வீட்டோட வேலைக்கு வெச்சிடலாம்னு ஒரு ஐடியா சேஷகிரி கிட்ட சொன்னேன் அவரும் நேர்ல வந்து பேசிட்டு உங்களுக்கு ஓ.கே.ன்னாகையோட கூட்டிட்டு போங்கன்னார். அதான் கிளம்பறேன்.''-என்றார் எழுந்தார்.

''அட! மீரா கூட நர்சுக்குத்தாம்ப்பா படிச்சிருக்கா''

''ஈஸிட்!? சொல்லவே இல்ல? தேங்க்காட் மீராவைவிட வேறயார் பொறுமையா கனிவா எங்க அம்மாவை பார்த்துப்பா?மீரா உடனே கிளம்பும்மா. இனிமே எங்க அம்மா உன்னோட பொறுப்பு பத்திரமா பார்த்துக்கணும். பாத்துப்பேல்ல?''-என்றார் மீராவிடம்

''ஐயோ மாமா! முதல்ல அப்பாவைக் கேளுங்க ஹாஸ்பிடல்லயே வேலைக்கு அனுப்பமாட்டேன்னு பிடிவாதமா மறுத்திட்டாங்க படிச்சபடிப்புக்கு சேவை செய்யணும். அந்த வருமானத்தை வெச்சு அப்பாவோட பாரத்தை கொஞ்சம் குறைக்கலாம்னு பார்த்தா அப்பா ஒத்துக்கவே இல்லையே''- மீராவின் குரலில் இயலாமை தொனித்தது.

''ஏண்டா. ஏண்டா முட்டாள்! குழந்தையை வேலைக்கு போக விடல்ல நீ''-எகிறினார் சீதாராமன்.

''அதில்லடா!பெரியவளையே வேலைக்கு அனுப்புறதில் எனக்கு விருப்பமில்ல. ஆனா வீட்டுக்குள்ளயே அடைஞ்சி கிடந்து மருகிகிட்டு கிடக்கிறாளேன்னு இவங்க ரெண்டு பேரும் பண்ணின தொந்தரவு தாங்காமத்தான் இந்த டீச்சர் வேலைக்கு அனுப்பினேன். பல குழந்தைங்களை பார்க்க பேசன்னு அவளும் இப்பத்தான் கொஞ்சம் தேறிட்டு வர்றா அதுவது காலையில போயிட்டு சாயந்திரம் வர்ற வேலை. ஆனா இவளுக்கு ஆஸ்பத்திரியில ஒரு வாரம் பகல்ல வேலையாம். ஒரு வாரம் ராத்திரி வேலையாம். அதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வருமா?. அதான் வேணாம்னு விட்டுட்டேன்''.

''ஏம்ப்பா! எத்தனை [illegible] எத்தனை நர்ஸ்ங்க வேலை பார்க்கிறாங்க அவங்கள்ல [illegible] கூடாது?''.



27/05/2011 15:25

''அப்படி இல்லம்மா ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு குடும்ப சூழ்நிலை உனக்கு என்னம்மா கஷ்டம்? அப்பா விவசாயம் பண்ணி கொண்டு வர்ற காசு நம்ம சாப்பாட்டுக்கு போதும். உனக்கு கல்யாணத்துக்குன்னு இருபது பவுன் சேர்த்து வெச்சிருக்கேன் பாத்திரம் பண்டம்னு அம்மா நிறையவே சேர்த்து வெச்சிருக்கா. நீ எதுக்கும்மா வேலைக்கு போகணும் வயசும் இருபத்திமூணு முடியுதே நல்லபடியா கல்யாணம் பண்ணி உன்னை புருஷன் வீட்டுக்கு அனுப்ப வேண்டாமா?''என்றபோது தந்தையின் குரலில் ஏக்கம் இழையோடியது.

''எந்த பேச்சை எடுத்தாலும் கடைசியில் கல்யாணத்தில் கொண்டு வந்து நிறுத்திடுங்க. இத்தனை மட்டும் ஏம்ப்பா உங்களுக்கு இப்படி ஒரு ஆசை. கல்யாணம் ஒண்ணு தான் எனக்கு குறைச்சல்'' சட்டென காலி டம்ளரை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

பரிதாபமாய் சீதாராமனை ஏறிட்டார். ''நான் என்னடா பண்ணுவேன் எத்தனை சொன்னாலும் இந்தப்பெண் ஒத்துக்கொள்ள மறுக்கிறாளே கல்யாணம் என்றாலே நெருப்பை கண்டாற்போல் ஓடுகிறாளே. நான் எப்படி என் பொண்ணை கரையேற்றப் போகிறேன். ஒரு பேரனையோ பேத்தியையோ? என்னால் கொஞ்சி மகிழவே முடியாதா. பெரியவள்தான் பட்டமரம் ஆகிவிட்டாள் என்றால் சின்னவள் திருமணபந்தம் என்ற ஒன்றையே அடியோடு வெறுக்கிறாளே. நான் எப்படி....'' மேற்கொண்டு பேச முடியாமல் துண்டால் வாயை பொத்திக் கொண்டு குலுங்கி அழஆரம்பித்தார்.பதறிப் போனார் சீதாராமன் .நண்பனை தோளோடு அணைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்து விட்டார்.

''பாருடா. இதுவரை நீ அழுததுபோதும் இனிமேல் அழக்கூடா[illegible] யசோதா நீயும் இப்படிவா. ஒரு முக்கியமான விஷயம்'' மெல்லிய கு[illegible]லில் அவர்களை அழைத்துக்கொண்டு வெளி முற்றத்திற்கு வந்தார். வேப்பமரக்காற்று சிலுசிலுத்தது. மரத்தில் கட்டப்பட்டிருந்த காக்கைக் கூட்டில் குஞ்சு ஒன்று பசியில் கரைந்து கொண்டிருந்தது. அதன் தாயோ தந்தையோ விரைந்து வந்து வாயோடு கொண்டு வந்திருந்த இரையை ஊட்டிவிட ஒரே குதூகலம் கூட்டில்.வீட்டினுள் பாத்திரங்களின் ஓசை மீராவின் கோபத்தை பறைசாற்றியது. சீதாராமன் அதே மெல்லிய குரலில் தொடர்ந்தார்.

''இதோ பாருடா! மீராவோட மனசுல உள்ள காயங்கள் ஆறணும் அது இன்னும் பச்சைபுண்ணாத்தான் இருக்குன்னு நினைக்கிறேன். பொறுமைய்யா இரு காலம் அவகாயத்தை ஆற்றும்னு அப்படியே நாம விட்டுட முடியாது. நாமதான் அதுக்கு மருந்து போடணும் இப்போ நான் சொல்றதை நீ கேட்டே ஆகணும் மறுக்கக் கூடாது.''

''இல்லடா நான் மறுக்கல்ல. நீ என்ன சொன்னாலும் கேட்பேன் சொல்லு'' விசும்பலோடு பதிலளித்தார்.

''பாருடா! நீ இப்படி வீட்டுக்குள்ளயே அடைச்சிவெச்சா எப்படி மீரா மனசு மாறும்.ராதாவை பார்த்து பார்த்து ரணம் அதிகமாகுமே தவிர குறையாது அதனாலதான் சொல்றேன். எங்க உமாவோட கல்யாணத்திற்கு இன்னும் முழுசா இருபது நாள் இருக்கு.நான் போகும் போது மீராவையும்



கூட்டிட்டு போறேன்.. இரு...இரு சொல்லி முடிச்சிடுறேன். விருந்தாளியா மட்டும் இல்ல அப்படி சொன்னா வரவும் மாட்டா வேலா அம்மாவுக்கு பார்த்துக்கிற நர்ஸா வரட்டும். எங்க வீட்ல தங்கி எம்பிள்ளைகளோட பேரன் பேத்தியோட பழகட்டும் எங்க கூட நாலு இடத்துக்கு போக வர இருந்தா அவ மனசு கொஞ்சம் லேசாகும் பாரதியும் அவளும் ஒத்த வயது தானே பழக பழக பழைய வேதனை கொஞ்சம் கொஞ்சமா மாறிடும்டா ஒருவேளை எங்கவீடு அவளுக்கு பிடிக்காமப் போச்சின்னா நீ கல்யாணத்துக்கு வரும்போது கூட்டிட்டு வந்திடு. அவளுக்கு பிடிச்சிருந்தா அவ எங்களோடயே இருந்துக்கட்டும்.காலம் பூரா. எம்மருமகனா''.

திக்கென நிமிர்ந்தார் அனந்தராமன் ''என்னடா சொல்றே?''

''ஆமாண்டா ராதாகிருஷ்ணனுக்கே ராதாவைக் கேட்டேன். நீ தான் அந்தஸ்து பணம் அது இதுன்னு கண்டதெல்லாம் சொல்லி தட்டிக் கழிச்சிட்டே. இப்போ நடக்கக் கூடாதது எல்லாம் நடந்து போச்சு சரி போனது போகட்டும் இப்போ கமலா இருக்கானே. ஒரு வேளை மீராவுக்கு அவனை பிடிச்சிருந்தா இவளாவது எங்க வீட்டுக்கு வாழவரட்டுமேடா என்ன சொல்றே''

சில நொடிகள் பேசவில்லை. பெருமூச்சு விட்டார் அனந்தராமன். நீ சொல்றது சரிதாண்டா முதல்லயே உன் பேச்சை நான் கேட்டிருக்கணும் கேட்டிருந்தால் என் குழந்தைக்கு இந்த கதி ஏற்பட்டிருக்காது. நான் தான் மடையன் என் குருட்டு நம்பிக்கையால் தான் நானே என் மகள் தலையில் தீயை வாரிக் கொட்டிவிட்டேன். இனி நீ சொல்வதை கேட்கிறேன் ஆனால்'' தயங்கி நிறுத்தினார்.

''என்ன? என்ன ஆனால்''தவிப்பாய் கேட்ட நண்பனின் கைகளைப் பற்றிக் கொண்டார். ''ஆனால் இது தப்பில்லையா சீதாராமா? வயது வந்த பெண்ணை எப்படி உன் வீட்டில் தங்கவைப்பது உன் வீட்டில் எல்லாரும் என்ன சொல்வார்கள்?. அதைவிட நீ சொல்வது போல் ஒரு வேளை சின்னஞ்சிறுசுகள் மனசுல ஆசையை வளர்த்துக் கொண்ட பிறகு உன் வீட்டு எஜமானி சரோஜா அதோடு உன் பிள்ளைகள் உன் தாயார் ஒப்புக்கொள்ளவில்லை யென்றால் நிலமை இன்னும் மோசமாகி விடுமே? அதன்பின் மீராவின் நிலைமை'' சொல்லும் போதே உடல் ஆடியது அனந்தராமனுக்கு.

''டேய் முதல்ல எதையும் நல்லதாவே நினை. நாம என்ன நினைக்கிறோமோ அதுதான் நடக்கும் நல்லதை நினை நல்லதே நடக்கும்.''

''நல்லதைத்தானே நினைத்தேன் ராதாவுக்கு. ஆனால் என்ன நடந்தது?. அதற்கு பிறகும் பயப்படாமல் இருக்க முடியுமா?''

''சரி.சரி மெல்லப்பேசு இப்போதைக்கு வேலைக்காகவே மீரா வரட்டும் வேற எதுவும் யாருக்கும் தெரியவேண்டாம். அதோடு சரோஜாவைப் பத்தி உனக்கு தெரியாதா? பெண்பிள்ளைகள் என்றால் அவளுக்கு உயிர் ராதாவை பெண் கேட்டுவரச் சொன்னதே அவள்தான் நீ மறுத்தால் அவளுக்கு இன்னமும் வருத்[illegible] மீரா[illegible]காமல் போகுமா அதன[illegible] கடவுளிடம் விடுவோம் மற்றதை அவர் பார்த்துக் கொள்வார் [illegible]



27/05/2011 15:25

என்னம்மா சொல்றே''

பொறுமையாக அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த யசோதா மெல்ல வாய்திறந்தாள். ''நான் என்ன சொல்றது அண்ணா. உங்கள் வீட்டுக்கு எனக்கு மகள் மருமகளாய் ஆவதில் என் பரிபூரண சம்மதம் உண்டு. ஆனால் நம் எண்ணம் தெரிந்தால் நிச்சயம் அவள் உங்களோடு வரமாட்டாள். அதோடு அவள் அங்கு தங்குவதில் எனக்கும் தயக்கம்தான் ஆண் பிள்ளைகள் நிறைந்த வீட்டில் இவளை எப்படி?'' தயங்கி நிறுத்தினாள்.

''இதோ பாரும்மா நான் இருக்கேன். சரோஜா இருக்கிறாள். பாரதி இருக்கிறாள். நாங்கள் பார்த்துக்கொள்வோம். அதோடு அம்மாவோடு தான் மீரா தங்கப் போகிறாள். அம்மா இன்னும் அப்பாவாழ்ந்த வீட்டை விட்டு வரமாட்டேன் என்று பழைய வீட்டில்தான் இருக்கிறாள். அதனால் மீரா சங்கோஜம் இல்லாமல் அங்கே இருக்கலாம். ஒரே காம்பவுண்டுக்குள்ளே தான் அந்த வீடும் இருக்கிறது என்பதால் பாதுகாப்பிற்கும் குறையில்லை. நான் போய் சேஷகிரியிடம் நர்ஸ் வேண்டாம் என தெரிவித்து விட்டு அவருக்கும் பத்திரிக்கை வைத்து விட்டு வீடு போய்விடுவேன். காலையில் வந்து மீராவை அழைத்து செல்கிறேன். அதற்குள் அவளிடம் இதமாக பேசி தயார் செய்து வையுங்கள் வேட்டாயிருச்சி. நான் வரட்டுமா மீராவுக்கு இன்னும் கோபம் போகல்ல போலிருக்கு. போய் சமாதானப்படுத்துங்க காலைல வர்றேன்''- என்றவாறு ஓரமாய் நின்றிருந்த காரை நோக்கிச் சென்றார் சீதாராமன்.

**நிலா காய்கிறது நிறம் தேய்கிறது**
**யாரும் ரசிக்க வில்லையே-இந்த**
**கண்கள் மட்டும் உன்னை காணும்!**

2

''அக்கா''- கொஞ்சலாய் அழைத்தாள் மீரா பரீட்சைபேப்பர் திருத்திக் கொண்டிருந்த ராதா தலையை நிமிர்த்தாமலே ''ம்'' என்றாள். இரண்டு வருடம் முன்னே பின்னே என்று பிறந்திருந்தாலும் உருவ ஒற்றுமை அச்சு அசலாய் ஒரே போல் அமைந்திருந்தது.

ராதாவிற்கு அலைஅலையாய் சுருள் கேசம் மீராவுக்கு தளர்வாய் பட்டுக்கூந்தல். ''அம்மா திணறக்கூடாதுன்னு தான் அப்பாவோட சுருள் முடியை ராதா வாங்கிண்டு வந்திருக்கா''- தலைவாரி விடும் போதெல்லாம் அம்மா சொல்லும் வார்த்தை இது. ''ஹீம் அது தான் எனக்கு பெரிய தலைவலியாப் போச்சி இல்லேன்னா நான் எது செய்தாலும் அக்காமேல பழியப் போட்டுட்டு தப்பிச்சிக்கலாம் உங்களாலயும் கண்டுபிடிக்க முடியாது''- வருத்தமான குரலில் மீரா சொல்ல அம்மா முதுகில் பட்டென போடுவாள்.

''எத்தனை குழந்தைங்க ஒரே மாதிரி இருந்தாலும் தாய் தன்குழந்தைகளை சரியா கண்டுபிடிச்சிடுவா அதுவும் உன்னை கண்டுபிடிக்க பெரிய திறமை எதுவும் வேணாம். இந்த ஒட்டைவாயே போதும். ஒரு நேரமாவது வாயை மூடிக்கொண்டு இருக்கிறாயா? உன்னோடு பிறந்தவள்தானே இவளும் இவ பேசுறது வீட்டை விட்டு வெளியே கேக்குதா. நீ பேசினா தெருவில நின்னாலே கேக்குது''

''போங்கம்மா. வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும் ஊமையா இருந்தா தலையில மொளகா அரைச்சிடுவாங்க ஏய் ராதா நீ ஊமைக்கோட்டானா இருக்கிறதுக்கும் எனக்குத் தானேடி திட்டு விழுது. வாயைத் திறந்து பேசேன்.''- ராதாவிடம் சீறுவாள் மீரா.

''அடிக்கழுதை! அவளை ஏண்டி மிரட்டுற. ஒரு வாயாடி போதாதா அவளாவது அமைதியா அடக்கமா இருக்கட்டும் அப்போதாண்டி புகுந்த வீட்ல போய் நல்லா குடும்பம் நடத்த முடியும் .நீயும் வாயைக் குறைச்சு அமைதியாக வாழ பழகிக்கோ. அப்பத்தான் வாழ்க்கை நல்லா அமையும்''

அம்மா சொன்னது போல் நடக்கவில்லையே. அமைதியாகவே இருந்த ராதா எதைச் சாதித்தாள். எல்லாவற்றையும் இழக்கத்தானே செய்தாள். ஜன்னல் வழியாக வந்த தென்றல் ராதாவின் கூந்தலை கலைத்துச் சென்றது. தலைபின்னி கூந்தலோடு பூவும் சூடாமல் அக்கா இருந்ததே இல்லை எனலாம். படிக்கும் போதே கிளம்பிய பிறகு போகும் அவசரத்தில் ஒற்றை ரோஜாவை பறித்து காதோரமாய் சொருகிவிட்டுப் போவாள் மீரா. ராதா அப்படி அல்ல காலையில் எழுந்து முற்றத்தில் படரவிட்டிருக்கும் ஜாதியையும், முல்லையையும், மல்லிகையும் பறித்து பொறுமையாக அவற்றை கட்டி சாமிபடங்களுக்கு போட்டுவிட்டு அம்மா தலையில் துளி சூட்டிவிட்டு தனது கூந்தலில் அம்சமாய் வைத்துக் கொண்டு தான் செல்வாள்.

''ராதா இந்த யெல்லோ புடவைக்கு மேட்ச்சாய் இந்த யெல்லோ ரோஸ் வெச்சிட்டு போயேன்'' எனும் மீராவிடம் புன்னகையாலே மறுத்துவிடுவாள். ''வாசனை இல்லாத பூ எதுக்கு மீரா? அதெல்லாம் அழகுக்கு

''உனக்கு குரு பார்வை கிடைச்சாச்சு! சீக்கிரம் கல்யாணம் நடக்கும்!''

சோதிடரே! என் காதலர் பெயர் 'குரு' ன்னு கரெக்ட்டா கண்டு பிடிச்சிட்டீங்களே!

-கு. அரு...



வளர்க்கலாம். ஆனா மல்லிகைப்பூ வெச்சாத்தான் தலையும் மணக்கும் அந்தப் பூவுக்கும் பெருமை'' என்று சொல்வாள்.

இன்று அந்த பூக்கள் எல்லாம் மாலையில் மலர்ந்து மறுநாள் வீணே உதிர்ந்து போகின்றன. உதிரும் முன் ராதாவிற்கு தங்கள் வாசனையை ஜன்னல் வழியே வாரிவழங்கி விடுகிறது. அதனாலேயே இரவு மணிக்கணக்காக உட்கார்ந்திருப்பாள் ராதா நிலவொளியும் மல்லிகை மணமும் பூந்தென்றல் காற்றும் அவள் காதோடு ஆயிரம் கவிதைகள் சொல்லும் தன்னை மறந்து அதில் லயித்துப் போய் விடுவாள். இன்று அந்த ரசனைகள் அனைத்தும் இந்த மலர்களைப்போல் வாடி உதிர்ந்துவிட்டதோ.

''என்னடி! கூப்பிட்டு அரைமணி நேரமாச்சு ஒன்னும் சொல்லாம இருக்கே'' பேப்பரை மடித்து மார்க் போட்டவாறே கேட்டாள். ராதா.

''ம்! ஆமாம் கூப்பிட்டேன் இல்ல? அக்கா! காலைல சீதாராமன் மாமா வந்திடுவாரு நான் போகட்டுமா இல்ல போகவேண்டாமா?'' கேட்டவளை திரும்பிப் பார்த்தாள் ராதா. அவளது கண்கள் கட்டிலின் மீதிந்த சூட்கேஸ் மீது சென்று மீண்டும் தங்கையின் முகத்தில் வந்து நின்றது.பின் அமைதியாக அடுத்த பேப்பரை பிரித்து திருத்த ஆரம்பித்தாள்.

''இப்படி ஒண்ணும் பேசாம இருந்தா நான் எப்படி போறதாம் ஒண்ணு போன்னு சொல்லு இல்லேன்னா போயிட்டு வான்னு சொல்லு'' வேகமாக தொடங்கியவள் தமக்கையின் பார்வையால் அடங்கினாள்,

ராதா பேனாவை மூடிவிட்டு பேப்பர் மீது நோட்டை எடுத்து அதை பறக்க விடாமல் தடுத்து விட்டு தங்கை புறமாக திரும்பி அமர்ந்தாள். ''இப்பச் சொல்லு என்ன ஆச்சு உனக்கு ''

''அக்கா ! உனக்கே தெரியும் நான் எவ்வளவு லைக் பண்ணி இந்த கோர்ஸ் எடுத்து படிச்சேன்னு ரெண்டு வருஷமா வீட்லயே கிடந்து ஐயோ படிச்சதெல்லாம் வீணாப் போச்சேன்னு தவிச்சுப்போயிட்டேன் தெரியுமா?. நல்லவேளை இன்னிக்கு அந்த மாமாவால அதுக்கு விடிவு வந்திச்சு அதே மாதிரி...''- நிறுத்தினாள்.

''அதே மாதிரி... சொல்லு''- முகத்தில் எந்த உணர்ச்சியும் இன்றி ராதா கேட்க எச்சில் விழுங்கினாள் மீரா. ''ம்...அதே மாதிரி உனக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமைஞ்சா...''

''வாயை மூடு'' -கத்தினாள் ராதா.

''இதோபார்! இந்த மாதிரி முட்டாள் தனமான பேச்சையெல்லாம் தூக்கி குப்பையில போடு உன் வாழ்க்கையை எப்படி அமைச்சுக்கலாம்னு பாரு அதை விட்டுட்டு கருகிப்போன கொடிக்கு பன்னீர் ஊத்தாதே. அது மீண்டும் துளிர்க்காது''-மூச்சுவாங்கியது கோபத்தால்.

''ஏன்? ஏன் ஊத்தக் கூடாது கொடிதான் கருகியிருக்கு நான் வேருக்கு நீரூற்றுவேன் நிச்சயமா துளிர்விடும். பூ பூத்து காய்கள் கனியாகும். நீ பூத்துக்குலுங்குவதை நான் பார்ப்பேன். அது மட்டும் தான் என் லட்சியம். என் வாழ்க்கையைப் பத்தியெல்லாம் எனக்கு கவலையே கிடையாது. நான் சொல்றது நடக்கும்''-மீராவும்

குரலை உயர்த்தினாள்.

''வேண்டாம் மீரா என் பொறுமையை சோதிக்காதே ஐஹேட்திஸ்



டாபிக் ப்ளீஸ் இட் லீவ் மீ அலான்.''-தலையைப் பற்றிக் கொண்டாள் ராதா.

''ம். இப்படியே விட்டுத்தான் மூனு வருஷமா நீ எதையும் மறக்காம ஒரே வேதனையில கழண்டுகொண்டே இருக்கே. அதைப் பாத்து பாத்து நாங்களும் துடிக்கிறோம். ஏங்கா! அந்த சண்டாளனைப் போய் இன்னும் நினைச்சி உன்னை நீயே வருத்திக்கிறே. ஒரு உத்தமனை நினைச்சி வாழ்ந்தாலும் சரி போகிறது என்று விட்டுவிடலாம். ஒரு ப்ராடு ஒரு குடிகாரநாய் பொம்பளைப் பொறுக்கி கேடுகெட்ட சாக்கடை புழு. அவனைப் போய் மறக்க முடியாமல் தவிக்கிறாயா? ச்சே என்னால் நம்பமுடியாது ஏன் இப்படிச் செய்கிறாய் சொல்''- ராதாவின் தோளைப் பற்றி உலுக்கினாள் மீரா.

''வேணாம்! என்னை விட்டுடு என்னால முடியல்ல. நான் மறக்கனும்னு நினைக்கிறதயெல்லாம் கிளறிவிடாதே என்னால தாங்க முடியாது''-அழுது துடித்தாள் ராதா.

''இல்லக்கா! புரையோடிப் போன புண்ணை கீறிகிளறிவிட்டாத்தான் சீழ் வெளியேறி புண்குணமாகும். ரணமும் போகும் அப்படியே விட்டா அது உயிருக்கே உலைவெச்சிடும் அவனும் அவன் நினைப்பும் வெளியேத்திடு. உன் வாழ்க்கை எங்களுக்கு முக்கியம் அக்கா நிச்சயமா நீ இன்னொரு நல்ல மனிதரை மறுமணம் பண்ணிக்கனும்''.

''நோ நோ. இன்னொரு கல்யாணமா எனக்கா ஐயோ அம்மா'' அடிவயிற்றை பற்றிக்கொண்டு தடாலென கீழே விழுந்தாள் ராதா அதற்குள் சத்தம் கேட்டு அனந்தராமனும் யசோதையும் வந்து விட மகளை கைப் பற்றி தூக்கி கட்டிலில் படுக்கவைத்தனர். செய்வதறியாது கையை பிசைந்து கொண்டிருந்த மீராவை தோள்பற்றி திருப்பினாள் யசோதா.

''என்னடி பண்ணினே. என்ன சொன்னே அவளை ஏன் அப்படித்துடிக்கிறா அவ சொல்லுடி.''

''அம்மா! நீங்க என்ன சொல்லனும்னு நினைச்சு புழுங்கி சாகுறீங்களோ அதைத்தான் நான் பேசினேன். அது இப்படி முடியும்னு நான் நினைக்கல்லம்மா.'' - மீராவின் கண்கள் நீரால் நிறைந்தது.

''ஏண்டி! அதைப்பத்திப் யெல்லாம் பேசற நேரமா இது. இந்த வேதனை தாங்காமத் தானே நாங்களே வாயை மூடிக்கொண்டிருக்கிறோம். நீ ஏன் இப்படி எல்லாம் பண்றே ச்சே'' - மீராவை உதறி விட்டு கட்டிலில் அமர்ந்து ராதாவின் தலையை வருடிவிட்டாள் அம்மா.

சட்டென தாவி அன்னை மடியில் தஞ்சம் புகுந்தாள் ராதா ''அம்மா! அம்மா நான் எப்படி இன்னொரு கல்யாணம்? ஐயோ எனக்கு பயம்மா இருக்கே. ஐயோ என் வயிறெல்லாம் வலிக்குதே அம்மாஎம் பக்கத்திலேயே இருங்க என்னை விட்டுட்டு போயிடாதீங்க எனக்கு ரொம்ப பயம்மா இருக்கும்மா அப்பா நீங்களும் எம்பக்கத்திலயே உட்காருங்கப்பா.''- தந்தையின் கையை இறுகப் பற்றிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு அழுதாள். உடல் முழுவதும் தடதடத்து வியர்த்துக் கொட்டிற்று இத்தனை நேரம் இதமாய் வீசிய [illegible] தன் வேலையை நிறுத்திக் கொ[illegible] ராதாவை அணைத்துக் கொள்ள உதடுகள் பயத்தில நடுங்க மெல்ல



27/05/2011 15:26

மெல்ல உறங்க ஆரம்பித்தாள்.

துக்கம் தொண்டையை அடைக்க வழிந்த கண்ணீரை சுண்டி எறிந்தாள் மீரா. "பயப்படாதே! அக்கா இனியும் நீ இப்படி பயந்து சாகக்கூடாது அம்மாவும், அப்பாவும் என் நல்வாழ்க்காகவே சீதாராமன் மாமா வீட்டிற்கு செல்ல அனுமதித்தார்கள். ஆனால் நான் உனக்காகத்தான் போகிறேன். உன்னை தன் மருமகளாக்க விரும்பிய அத்தை அங்கிருக்கிறார். அவரது மனம் இன்னமும் உன்னை ஏற்றுக் கொள்ள தயார் நிலையில் உள்ளதா எனத்தெரிந்து கொள்ள வேண்டும். அந்த எண்ணம் அவருக்கு இருக்குமானால் கடைசியாக திருமணம் செய்யாமல் இருக்கும் அந்த கமலாவோ விமலாவோ அவனிடம் பேசி தூயவளான உன்னை மணக்க சம்மதிக்க வைப்பேன். மாமாவும் அத்தையும் உன்னை தங்கமாய் பார்த்துக்கொள்வார்கள். மாமாவின் மகன் நிச்சயமாய் நல்லராய் உத்தமராய்த்தான் இருப்பார். இந்த இருபது நாட்களில் அவரைப் பற்றி முழுமையாய் தெரிந்து கொண்டு அவர் உனக்கேற்றவர் எனத் தெரிந்தால் என் உயிரையும் கொடுத்து உன்னை வாழவைப்பேன். அன்பானவர்களின் அரவணைப்பில் உன்பயம் மாயமாய் மறைந்துவிடும். நீ வாழ்வாய் எல்லா நலமும் பெற்று நீ வாழ்வதை நான் பார்ப்பேன். அது வரை எனக்கு ஓய்வே கிடையாது." கண்ணீரை துடைக்க மளமளவென தனக்கு தேவையான பொருட்களை எடுத்து பெட்டியில் அடைக்க ஆரம்பித்தாள்.

நம் மனம். நம் எண்ணம் எல்லாமே நினைக்கும் ஆனால் நினைப்பதெல்லாம் நடந்துவிடுமா என்ன? மனிதன் ஒன்றை நினைக்க இறைவன் வேறல்லவோ நினைக்கிறான். தன் தமக்கைக்கான துணையைத் தேடி செல்ல துணிந்தவள் அங்கு தனக்காக என்ன வெல்லாம் காத்திருக்கும்?. எப்படிப்பட்டவர்களை சந்திக்கப்போகிறோம். எத்தனை எதிர்ப்பைச் சந்திக்கப் போகிறோம் என எதையும் அறியவில்லை.

**ஆசை ஆசையாய் இருக்கிறதே**
**இது போல் வாழ்ந்திடவே**
**பாச பூ மழை பொழிகிறதே**
**இதயங்கள் நனைகிறதே**
**நம்மைக் காணுகிற நெஞ்சம்**
**நம்மோடு சேரக் கெஞ்சும்..!**

## 3

**போ**ர்டிகோவில் வந்து கார் நின்ற உடன் மீராவின் இதயம் பன்மடங்கு துடிக்க ஆரம்பித்தது. அவசரப்பட்டு வந்துவிட்டோமோ ? மாமாவை தவிர வேறுயாரையும் தெரியாதே பாரதியைக் கூட பார்த்து சிலவருடங்களாகிவிட்டதே?. என்னை எப்படி ஞாபகம் வைத்திருப்பாள்? இங்கு யாரிடம் எப்படிப் பேசவேண்டும். தன்னை எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்றெல்லாம் படபடத்தது மனம்?



சீதாராமன் கார்க்கதவை திறந்துவிட்டார். "என்ன தயக்கம் மீரா. இது தான் நம்ம வீடு." காரினின்று இறங்கியவள் அசந்து போனாள். அடேங்கப்பா வீடா இது சினிமாவில் காட்டப்படும் நட்சத்திர ஓட்டல் போல் அல்லவா இருக்கிறது?. ஹய்யோ நீச்சல்குளம் கூட இருக்கிறதே. என்ன தான் மாமா உரிமையாய் தன் வீட்டிற்கு பலமுறை வந்து இருந்தாலும் அப்பாவைத் தவிர தாங்கள் யாரும் இங்கு வந்ததே இல்லை. எந்த விசேஷம் என்றாலும் பால்யநண்பர் என்ற முறையில் தன் தந்தைக்கு முதல் அழைப்பு விடுப்பார் மாமா ஆனால் அப்பா எப்பவுமே உஷார்தான் தன் பிள்ளைகள் ஆடம்பர விழாக்களில் கலந்து கொள்ள விரும்பமாட்டார் அதன் காரணம் இப்போதல்லவா புரிகிறது. நாளுக்காக அவர்மட்டும் கலந்து கொண்டு திரும்பிவிடுவார். போர்டிகோவில் மட்டுமே நாலைந்து கார்கள் மூன்று பைக்குள் ஒரு ஜீப் என வரிசையாய் நின்றிருந்தன. கார்களை துடைத்துக் கொண்டு அதன் டிரைவர்கள் தயார்நிலையில் இருக்க பெரிய இரும்புகேட் அருகே தடிமனாய் உயரமாய் இரு காவலாளிகள் உயர்ந்த மதில் சுவரில் நிறைய வகை மலர்க்கொடிகள் படர்ந்து

பலவித நிறங்களில் பூத்துக் குலுங்கியது. சுவர் ஓரங்களில் அழகாய் பாத்திக் கட்டி விதவிதமாய் ரோஜாக்கள் சிரித்துக் கொண்டிருந்தது. ஓங்கி உயர்ந்த தென்னையும் நடு நடுவே யூகலிப்டஸ் மரங்களும் கம்பீரமாக நின்று காவல்காத்தன. போர்டிகோவின் இருமருங்கிலும் சிவப்பும் வெள்ளையுமாய் ஊசிமல்லி மரங்கள் அத்தனையும் பூவோடு கண்ணைப் பறித்தது.

மேலிருந்து பச்சை பாம்புகளாய் தொங்கும் கொடிகள் சீராக வெட்டப்பட்ட புல்செடிகள் என அத்தனையும் கண்ணை கவர்ந்தது.

பக்கவாட்டில் கொஞ்சம். சிறியதாய் ஒரு மாடிவீடு அதன் முற்றத்தில் பெரிய கொய்யாமரம். காய்களும் கனிகளுமாய் தொங்க அதில் அணில்களும் கிளிகளும் சுகபோகமாக பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அதையொட்டி அடர்ந்த புதராய் ஜாதிமல்லிக்கொடி. ஏராளமான பூக்

" என்? உன் புருஷன் உன் மேலே இவ்வளவு கோபமா இருக்காரு!"

"நான் படுகிற கஷ்டம் என்னுடைய தங்கச்சியும் படணும்மாம்!"

-தா முரு...
திருத்துறை...



27/05/2011 15:26

களை வாரியறைத்துக் கொண்டிருந்தது. இடதுபக்கமாய் ஓரத்தில் பெரிய நீச்சல்குளம், நீலநிற தண்ணீரில் கலர்கலராய் பந்துகளும் செயற்கை வாத்துகளும் மிதந்து கொண்டிருக்க சில வாண்டுகள் தங்களுக்கு தெரிந்த நீச்சல்களை தத்திதத்தி நீந்திக் கொண்டிருந்தனர். அவர்களைக் கண்காணிக்க நான்கு பேர். இலைக்குப்பைகளை பெருக்கிக் கொண்டும் செடிகளுக்கு நீரை பைப்பால் பீய்ச்சியடித்துக் கொண்டும் சில பேர்.

மொத்தத்தில் மாமா சொன்னது போல் இது வீடு அல்ல. அரண்மனை இங்கு வராமல் ஏதாவது சொல்லி தட்டிகழித்திருக்கலாமோ? ரொம்பவும் நல்ல உடைகள் எடுத்து வைக்கவில்லையே. திருமணத்திற்கு கட்டிக் கொள்ளள என்று கூட சிம்பிளான பனாராஸ் மட்டும் தானே எடுத்து வைத்தோம். வீடே இப்படி என்றால் இங்குள்ள பெண்கள் எப்படி இருப்பார்கள். தன்னை புழுவைப் பார்ப்பது போல் பார்ப்பார்களோ?தயங்கி நின்றவளை தோள்பற்றி வீட்டினுள் அழைத்துச் சென்றார் சீதா ராமன்.

''சரோஜா யார் வந்திருக்கா பாரு. அட பாரதி குட்டி கூட இன்னிக்கு சீக்கிரமே எழுந்து குளிச்சாச்சு போலிருக்கு. அதான் வானம் இருட்டறாப் போல இருக்கு'' -என்ற சீதாராமனின் சீண்டலில் முகம் சுருக்கிச் சிணுங்கினாள் அந்த அழகிய பாரதி.

தலைகுளித்து ஈரடவலை கூந்தலில் சுற்றியப்படி பூஜையறையில் கற்பூரம் காட்டிவிட்டு திரும்பிய சரோஜாவை பார்த்த உடன் கை கூப்பும் தோற்றம். மஞ்சள் பூசிய முகத்தில் குங்குமம் பெரிதாய் சுடர் விட்டது. அறையெங்கும் சாம்பிராணி மணம் கமழ சுடர்விட்டு பிரகாசித்த குத்து விளக்கின் பின்னணியில் கையில் தீபத்தட்டுடன் காட்சியளித்த சரோஜா அந்த அம்பிகையே நேரில் வந்தாற்போல் தோன்ற அனிச்சையாய் இருகரம் கூட்டி வணங்கினாள் மீரா.

கற்பூர ஜோதியை கணவரிடம் காட்டியவாறே ''யாருங்க இது. எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே? என்ற கேள்வியை கணவனிடம் வீசிவிட்டு பார்வையால் மீராவை அளந்தாள்.

அட துடைத்து வைத்த பொன் விளக்காய் இந்த பெண் எத்தனை அழகாய் இருக்கிறாள். திருத்தமான முகத்தில் எத்தனை சாந்தம்.

இவபேர் மீரா. நம்ம அனந்த ராமனோட பொண்ணு. அம்மாவுக்கு நர்ஸ் ஏற்பாடு பண்ண போனேன்ல. அப்பத்தான் மீராவும் நர்சிங் ஹோர்ஸ் பண்ணிட்டு வீட்ல இருக்கிறதா சொன்னான். அப்புறம் ஏன் வேற நர்ஸ் அதான் வாம்மானு கூட்டிட்டு வந்திட்டேன். நம்ம அம்மாவோடயே தங்கிப்பா. உனக்கு பிடிச்சிருக்கா சரோஜா''

எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குங்க எத்தனை அடக்கம் பணிவு இந்தக் காலத்தில் எந்த வயக பொண்ணு புடவை உடுத்தறது? சுடிதார் மிடின்னு தானே மாட்டிண்டு இருக்கா. ஆனா இந்தப் புடவையில் இந்தப் பொண்ணு மகாலட்சுமியாட்டமே இருக்கா. நம்ம வீட்டுக்கேத்த பொண்ணுதான். ஆனா எப்படி அனந்தண்ணா இவளை அனுப்பினார்.

எப்போ வந்தாலும் தனியாத்தானே வருவார். பொண்ணுங்களை நம்ம கண்ணுல காட்டுனதேயில்லையே,'' என்றவாறே மீராவிடமும் பாரதியிடமும் கற்பூரத்தட்டை நீட்ட இருவரும் கண்களில் ஒற்றிக்கொண்டனர்.



''அதெல்லாம் அவ்ளோ சீக்கிரம் விட்டுவானா. நான்தான் பேசி ஒருவழியா சம்மதிக்க வைத்தேன். அதை அப்புறம் சொல்றேன். வாக கிட்ட இருந்து நாலஞ்சுமுறை போன் வந்திடுச்சு. நான் உடனே பாக்டரிக்கு கிளம்பனும். லட்சுமி கிளம்பிட்டான்னா உடனே வரச்சொல்லு. அம்மாடி மீரா. இதுதான் எம்பொண்ணு பாரதி. ராதா கல்யாணத்துக்கு அழைச்சிண்டு வந்தேனே. ஞாபகம் இருக்கில்ல பாரதிம்மா. அப்பா அவசரமாக கிளம்பனும் நீ மீராவை சாப்பிட வைச்சுட்டு நம்ம வீட்டை சுத்திக்காட்டு. பாட்டிகிட்ட கூட்டிட்டுபோ. நான் அப்புறமா வந்து பார்க்கிறேன். பை'' பொதுவாய் அனைவரிடமும் சொல்லிவிட்டு அவர் விலகி நடக்க, ஏங்க! டிபன் ரெடியா இருக்கு. சாப்பிட்டு போங்க.'' என பின்னாலே சரோஜாவும் சென்றுவிட இளையவர்கள் இருவரும் தனித்து விடப்பட்டனர்.

பெரியய வீட்டுப்பெண் நம்மை எப்படி நினைவு வைத்திருப்பாளோ. அக்கா திருமணத்தின் போது பார்த்து பேசி சிரித்துக் கொண்டதோடு சரி. என்னை பேசுவது. தயங்கியவாறே நின்றவளை ஹலோ என்ன பேசுவது..தயங்கியவாறே நின்றவளை ''ஹலோ என்னைமறந்து விட்டதோ? நான் பாரதி''- என்றவாறு மீசையை முறுக்கிவிடுதாய் பாவனை காட்ட தன்னையும் மீறி பக்கென சிரித்து விட்டாள் மீரா.

இதுதான் இந்த சிரிப்புதான் எனக்கு பிடிக்கும். இது நம்ம வீடு. இதில என்ன பயம் உனக்கு? அப்பாவுக்கு எப்பவும் உன் வீட்டு புராணம்தான். உங்களைப் பத்தி பேசாட்டி தூக்கமே வராது. அப்பாவீட்டை சுத்திகாட்ட சொன்னாங்களே. முதல்ல சாப்பாடு அப்புறம் விசிட்டிங் ஓ.கே.? பல காலம் பழகியவளை போல் வெகு இயல்பாய் பேசுபவளை மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள் மீரா.

அதெப்படி பணக்கார வீட்டுப்பெண் என்றால் இப்படி துளியும் கர்வமோ திமிரோ இல்லாமல் இருக்கமுடியுமா? ஒரு வேளை புது பணக்காரர்கள்தான் அப்படி இருப்பரோ? பரம்பரை பணக்காரர்கள் இப்படித்தான் அடக்கத்துடன் நடந்து கொள்வார்களோ? படிக்கும் காலத்தில் கூட காரில் வந்து இறங்கும் பணக்கார பெண்களிடம் சிநேகம் வைத்துக் கொள்ள மாட்டாள் மீரா. காதிலும், கழுத்திலும் தினம் ஒரு தினுசாய் மாட்டிக் கொண்டு நவநாகரீக ஆடைகளோடு வருபவர்களிடம் நெருங்கி பேசக் கூடமாட்டாள். அவைகளைப் பார்த்து தனக்கும் ஆசையோ ஏக்கமோ வரக்கூடாது என்பதில் கவனமாய் இருப்பாள் அதுகள் ஆடும் அலட்டல்களை கண்டு கொள்வதே இல்லை.

ஆனால் இவளிடம்தான் நினைத்தது போல் ஆடம்பரம் இல்லை. காதிலும், கழுத்திலும் சிறிய முத்து செட். கைகளில் முத்து வளையல்கள். வெண்பட்டில் தங்கப்புள்ளிகள் இட்ட மிருதுவான புடவை. மெல்லிய நீளமான விரல்களில் கண்களை உறுத்தாத மெலிதான மோதிரங்கள். அதிக ஒப்பனை இல்லாமல் பளிரிட்ட தங்கமும், ஆளை அசத்தியது. புன்னகையை தேக்கி வைத்த முகம் [illegible]

''பார்த்தாச்சா. சுமாரா இருக் [illegible] ளிக்கு சஷ்டின்னு அம்மா அஞ்சு மணிக்கே எழுப்பி குளிக்க வைச்சு ஒரு



27/05/2011 15:27

காபி கூட தராம கந்தசஷ்டி கவசம் படின்னு பூஜையறைக்கு தள்ளிட்டு வந்துட்டாங்க. இப்போ மணி ஒன்பது. ஸோ. எனக்கு பயங்கர பசி. மிச்சத்த சாப்பிட்ட பிறகு பார்க்கலாம். முதல்ல வா டைனிங் ஹாலுக்கு'' என மீராவின் கைகளைப் பற்றி வெளியே இழுத்து வந்தான் பாரதி. ஐஸ் கட்டியை தொட்டதாற் போலிருந்தது அவளது பட்டுக் கரங்கள்.

பிரமிப்பு மாறாமலே மந்திரத்திற்கு கட்டுப்பட்டதாற்போல் அவன் பின்னே வந்தவள் அவன் சென்ற டைனிங் ஹாலுக்குள் நுழைந்ததும், இன்னும் பிரமித்துப் போனாள். திருமண வீட்டு விருந்து போல் அந்த பெரிய அறையின் நடுவில் உள்ள நீளமான கனத்த மேஜையின் மீது பலவகை உணவுகளும், பழங்களும் பரப்பி வைத்திருக்க அதைச் சுற்றிலும் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அனைவரும் அமைதியாய் சாப்பிடாமல் அமர்ந்திருந்தனர். அனைவரின் பார்வையும் பாரதியைக் கண்டதும் மகிழ்ந்து கூடவே நுழைந்தவளை யோசனையாய் ஏறிட்டது.

''குட்மார்னிங் எவ்ரிபடி. ஸாரி. ஸாரி. கொஞ்சம் லேட்டாச்சு. சாப்பிடலாமா. அண்ணி ரொம்ப பசிக்குது. சீக்கிரம்'' என அங்கிருந்த நாற்காலி ஒன்றில் மீராவை அமரவைத்துவிட்டு வயதில் மூத்தவனாய் தெரிந்தவனிடம் சென்றான்.

''ம் பொங்கல் கமகமன்னு இருக்கே. அண்ணா பொங்கல் வித் சட்னி. ஓ.கே.'' என்றதும் முகம் மலர அவன் பொங்கலை எடுத்து சட்னியில் தோய்த்து தங்கையின் வாயில் ஊட்டிவிட்டான். கண்களை மூடிக்கொண்டு ''ம்! சூப்பர்ப் அண்ணின்னா அண்ணிதான்'' ரசித்து சாப்பிட்டாள். ''சின்ன அண்ணி! மீராவுக்கு சாப்பாடு வையுங்க. அவ நம்ம கெஸ்ட்''.

''இதோம்மா'' -என்றவாறே மீராவிற்கு ஒரு தட்டு வைத்து இட்லி வடை பொங்கல் என நிறையவே வைத்தாள் அவள். ''மீரா நீ சாப்பிட்டுகிட்டு இரு. நான் எல்லோரையும் உனக்கு அறிமுகப்படுத்துறேன். ஏன்னா சாப்பிடும் போது மட்டும்தான் எல்லோரையும் மொத்தமா பார்க்க முடியும். அப்புறம் ஆளாளுக்கு கால்ல சக்கரத்தைக் கட்டிட்டு பறந்திடுவாங்க. சரியா. ம் சாப்பிடு'' என்ற பாரதியிடம் ''என்ன பாரதி! இதென்ன புதுப்பழக்கம். ப்ரெண்டெல்லாம் டைனிங் ஹாலுக்கு கூட்டிட்டு வர்ற. இது நம்ம பேமிலில உள்ளவங்க மட்டும் சாப்பிடும் அறை. அதனால தான் அத்தை வேலைக்காரங்களை கூட உள்ளே அனுமதிக்கமாட்டாங்க. நீ என்னன்னா சரிக்கு சமமா அவளை உட்கார வெச்சிண்டு'' -சிடுசிடுத்தாள் சுபத்ரா.

உடலும், உள்ளமும் கூசிப்போய்விட சட்டென எழுந்தாள் மீரா. அதற்குள் கையில் குருமா கிண்ணத்தோடு உள்ளே நுழைந்த சரோஜா, ''அவளும் நம்ம வீட்ல ஒருத்திதான். இனிமே நம்மகூடத்தான் இருந்து சாப்பிடுவா. இது மாமாவோட உத்தரவு. யார் என்னன்னு தெரியாம இப்படி வெடுக்குன்னு பேசாத சுபத்ரா. அது தப்பு. நீ உட்காரும்மா. மாமாவை அனுப்பி வர கொஞ்சம் தாமதமாச்சு. சங்கரி, மீராவுக்கு கொஞ்சம் சட்னி போடும்மா. எனக்கு ரெண்டு இட்லி வை'' என மீராவின் அருகில் உட்கார்ந்து கொள்ள சூழல் இதமானது. சாப்பிட மனமின்றி உட்கார்ந்திருந்தவனிடம் சாப்பிடும்மா! அத்தை சொல்றேனில்ல'' என்றான். இதமாக.



அதற்கு மேலும் சாப்பிடாமல் இருந்தால் அது அனைவருக்கும் வருத்தம் என அமைதியாக சாப்பிட ஆரம்பித்தாள்.

''பாரதிம்மா! அண்ணன் சீக்கிரமே ஆபீஸ் போகணும். வாடா'' என்றான் கையில் இட்லி விள்ளலுடன் கௌரிசங்கர். ம்.. ம்.. அவசரப்படாதே அண்ணா. நீ நம்பர் த்ரி. இரு வர்றேன். மீரா. இது என்னோட பெரிய அண்ணா லட்சுமி நாராயணன் எனக்கு அப்பா மாதிரி. இது அண்ணி விஜயலட்சுமி. இந்த மூனு குட்டீசும் இவங்க தயாரிப்பு.

''ஏய்! ''என செல்லமாய் கை ஓங்கினான் விஜயலட்சுமி, அவனிடமிருந்து நழுவி அடுத்தவனிடம் சென்றாள்'' வடை மட்டும் போதுண்ணா''. என்றதும் சிரித்துக் கொண்டே மெதுவடையை சாம்பாரில் முக்கி எடுத்து ஊட்டினான். ''இது என்னோட ரெண்டாவது அண்ணன் ஜானகிராமன் ரொம்பவும் அறிவாளி. இது சுபத்ரா அண்ணி. இந்த ரெண்டு வாண்டுகளும் இவங்கப்ராக்ட்.'' என்றவாறு அடுத்தவனிடம் வந்தாள்.

''சீக்கிரம் வா செல்லம்'' என்றவாறு மடமடவென இட்லி இரண்டு துண்டுகளை பிய்த்து வாய்க்குள் திணித்தான். கஷ்டப்பட்டு விழுங்கியவள் கொஞ்சம் தண்ணீர் குடித்து விட்டு தொடர்ந்தாள்.

''இது என் மூனாவது அண்ணன் கௌரிசங்கர். எங்க வீட்லேயே ரொம்ப பாஸ்ட்மேன். ரொம்ப சுறுசுறுப்பு. இது சிவசங்கரி அண்ணி. இந்த நாலு வாலுங்களும் இவங்களது. நான் தான் சொன்னேனில்ல அண்ணன் ரொம்ப பாஸ்ட்ன்னு'' -கண்ணடித்து சிரித்தாள் பாரதி. ''அடிக்கழுதை, அவன் உன் அண்ணன்டி'' -அதட்டினாள் சரோஜா.

சிரித்துக் கொண்டே அடுத்தவனிடம் சென்றாள். கையில் புத்தகத்தோடு நிமிர்ந்தும் பாராமல் இருந்தவன் தங்கையின் வாயில் பூரிக்கிழங்கை ஊட்டினான். இது நம்பர் ஃபோர் ராதாகிருஷ்ணன். எங்க வீட்லயே ரொம்ப சாப்ட் இவன்தான். சரியான புத்தகப்புழு. முற்றும் துறந்த முனிவர். புரியல்ல. சாமியாராகப் போறானாம். சம்சார சாகரத்தில இறங்க விரும்பவில்லையாம். எப்படியோ ஒரு பொண்ணு தப்பிச்சிட்டா-கலகலத்தவாறே அடுத்தவனிடம் வந்தாள்.

''இங்கே ஒருத்தன் கழுதை மாதிரி கத்திக்கிட்டு இருக்கேன்... எங்க போன?''
''உங்களுக்கு பேப்பர் வாங்க தான் போனேன்.''
-பி.பாலாஜி
கோவில[illegible]



27/05/2011 15:27

'இதுதான் எங்க வீட்லயே ரொம்ப வாலு. நம்பர் பைவ் உமாபதி. இதுகிட்ட வாயைக் கொடுத்தா மீளவே முடியாது. பொங்கல் கொடுண்ணா என்றவாறு வாயை திறந்தாள். போடீ. உனக்கு எதுவும் தர மாட்டேன். எல்லாரையும் நல்ல படியா அறிமுகப்படுத்திட்டு என்னை மட்டும் போட்டுக் கொடுத்தல்ல. இன்னிக்கு உனக்கு ஊட்டப்போற தில்லை' என்றவாறு முகத்தை திருப்பிக் கொண்டான் உமாபதி.

'ஸாரிடா அண்ணா. சும்மாதானே. பசிக்குதுடா' என்றதும் இளகி, பொங்கலை ஊட்டினான்.

'ரொம்ப நல்லவன். கலகலப்பானவன். ரொம்பவும் தைரியசாலி கூட. இப்போதைக்கு புது கல்யாண மாப்பிள்ளை இவன்தான்'- என்றான் மேலும்.

அனைவரும் மொத்தமாய் 'ஹாய்' சொன்னார்கள். மீராவும் கூச்சத் தோடு ஹாய் சொன்னாள்.

இன்னும் ஒன்று குறைகிறதே. எங்கே அவன். என் அக்காவிற்கான இணை. மீரா கண்களை சுழற்றி தேடினாள். கிட்டத்தட்ட அனைவருமே ஒன்றிற்கு ஒன்று சளைக்காமல் உயரமாய் கம்பீரமாய் அழகாய்த்தான் இருந் தனர். உமாபதியின் முகத்தில் கூடுதலாய் குறும்பும் கல்யாணக்களையும் கூத்தாடியது.

அவன் எப்படி இருப்பான். ராதாகிருஷ்ணன் போல் அமைதியாகவா இல்லை கவுரி சங்கரை போல் சுறுசுறுப்பாகவா இல்லை உமாபதியைப் போல்...

அவளது சிந்தனையை கலைத்தான் பாரதி. இன்னொரு முக்கியமான ஆளு ஒன்று இருக்கு. அவரு தற்சமயம் ஊட்டி எஸ்டேட் வரை சென்றுள்ளார். ரொம்ப பிஸிமேன். இன்னிக்கு நைட் வந்திடுவார். என்னோட ஆறாவது அண்ணன் கமலக்கண்ணன். ரொம்ப ஹேண்ட்சம். ரொம்ப கோபக்காரன். ஆனா ரொம்ப பாசக்காரன். புல்நேம் சொன்னா அவனுக்கு அப்படித்தான் கோபம் வரும். கண்ணன்னு மட்டும்தான் கூப்பிடனும். கமலான்னு அம்மா கூப்பிட்டா போதும் காச்மூச்சுன்னு கத்துவான். எங்கே காபி. மூச்சு வாங்குது -என்றவாறு காலியான நாற்காலியில் அமர்ந்தான் பாரதி.

'அதெல்லாம் சரி. இவங்க யார்னு சொல்லவே இல்லையே. வாண்டூஸ் மொத்தமாய் கேட்க, சொல்றேன். சொல்றேன். இவங்கதான் இனிமே நம்ம லட்சுமிபாட்டியை கவனிக்கப் போற நர்ஸ். அதோட நம்ம பேமிலி பிரெண்ட். என்னா இவங்க இனிமே நம்ம வீட்லதான் தங்குவாங்க'' என பாரதி சொல்லவும் அனைவரும் கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

''ஒரு நர்ஸுக்கா இத்தனை பில்டப். நானும் யாரோ என்னவோனு நினைச்சேன். சரி. சரி. நீங்கள்லாம் ஸ்கூலுக்கு போக வேண்டாமா. ரெடியாகனும். சீக்கிரம் வாங்க'' சத்தமாய் முணுமுணுத்துவிட்டு சென்றாள் சுபத்ரா. மற்றவர்கள் புன்னகையுடன் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு செல்ல உமாபதி அருகில் வந்தான்' எங்க அண்ணியில இவங்க கடுகு மாதிரி. பட்பட்னு வெடிச்சிடுவாங்க. மத்தபடி நல்லவங்கதான். தப்பா நினைச்சுக்காதீங்க. பாரு. பாட்டிகிட்ட அழைச்சிட்டு போ. ஈவ்



னிங் பார்க்கலாம்'' பாரதியின் நெற்றியில் முத்தம் தந்துவிட்டுச் சென்றான்.

எத்தனை அண்ணன்கள், எத்தனை இனிமையான குடும்பம். அன்பு. நமக்கும் அண்ணன் இருந்தால். இத்தனை கூட வேண்டாம். ஒரே ஒரு அண்ணன் இருந்தால் கூட போதும். எத்தனை இன்பமாய் இருந்திருக்கும். கடவுள் தந்தார்தான். ஆனால் அதையும் பிறந்து மூன்று மாதம் முடியுமுன்னரே பறித்துக் கொண்டாரே. அடிக்கடி தன் தலைமகனை எண்ணி அம்மா அழுவதுண்டு. பாரதி கொடுத்து வைத்தவள். அன்பை பொழியும் ஆறு அண்ணன்கள். வாழ்ந்தால் இப்படித்தான் வாழ வேண்டும். ஏக்கமாய் பெருமூச்சு வந்தது மீராவிற்கு.

## 4

யாரிந்த தேவதை யாரிந்த தேவதை
ஒரு கோடி பூக்கள் உலகெங்கும் பூக்கும்
இந்தப் பெண் போல் அழகான
பூ ஒன்று உள்ளதா?

தூக்கம் வராமல் புரண்டு படுத்தாள் மீரா. பழக்கமற்ற ஏசியின் விர் ஓசை இடைஞ்சலாய் தோன்றியது. இலவம் பஞ்சு மெத்தைதான். இருந் தும் உடம்பை உறுத்தியது. ஜன்னலை திறந்து விட்டு காற்றாடியை சுழலவிட்டு நார்க்கட்டிலில் படுத்தால் விடிந்து அம்மா வந்து எழுப்பும் வரை விழிப்பே வராது. அந்த சுகமான உறக்கம் இன்று வரமறுத்தது. பழக்கமற்ற இடம் என்பதாலா? அனைவரும் நன்றாக பழகுகிறார்கள்தான். லட்சுமி பாட்டி கூட வந்த ஒரே நாளில் தங்கமாய் தாங்குகிறார்தான். பாட்டியின் உடல்தான் சற்று தளர்ந்திருக்கிறதே தவிர மனம் பழங்கதைகளை அசைபோட்டுக் கொண்டு அதை அடுத்தவரிடம் பகிரவும் ஆசைப்படுகிறது.

காலை சாப்பாடு முடிந்து பாட்டியிடம் தன்னை அறிமுகப்படுத்தி விட்டுப் போன பாரதி மதியசாப்பாட்டிற்கு அழைத்துப் போக வந்தாள். ''இல்ல பாரதி. பாட்டி இங்க தனியாத்தானே சாப்பிடுவாங்க. நானும் இனி பாட்டி கூடவே சாப்பிடுறேனே. பாட்டிக்கும் கம்பெனி கொடுத்த மாதிரி இருக்கும்''- என நாசூக்காய் மறுத்தாள் மீரா. பாரதியின் முகம் வாடிப்போயிற்று''சுபா அண்ணி பேசுனதை மனசுல வெச்சுகிட்டு தானே அப்படிச் சொல்ற? ஸாரிமீரா. வா சாப்பிடலாம்'' என மீண்டும் அழைக்க,

''இல்ல பாரதி! வீட்ல அமைதியாகவே சாப்பிட்டு பழகிட்டோம். உங்க மொத்த பேமிலியோடயும் இருந்து சாப்பிட சங்கோஜமா இருக்கு. வேற எந்த காரணமும் இல்ல [illegible] னிச்சுக்க வந்தேன். நான் இங் [illegible]

துக்கிறேன். அம்மாகிட்ட சொல்லிடு பிளீஸ்' என அவளை சமாதானப்படுத்தி அனுப்பியபோது லட்சுமிபாட்டி மீராவை நெட்டி முறித்தாள்.

''அம்மாடி எத்தனை எளிமை. என்ன பணிவு. நீயும் எனக்கு ஒரு பேத்திதாம்மா. உனக்கும் இங்க எல்லா உரிமையும் உண்டு. உன் அப்பனும் எனக்கு புள்ள மாதிரிதான்'' என்றவர் நன்றாகவே ஒட்டிக் கொண்டார்.

எத்தனை முயன்றும் உறக்கம் வராமலே எழுந்து அமர்ந்தாள். குளிர் வாட்டியது. பேசாமல் ''ஏசியை நிறுத்திவிட்டால் என்ன? பாட்டியின் கட்டிலைப் பார்த்தாள். பாட்டியும் தூங்கவில்லை என தெரிந்தது. போர்வையால் போர்த்தியிருந்த போதும் பாட்டியின் உடல் குளிரில் நடுங்கியது. லேசான முனகல் வேறு. அவசரமாய் எழுந்து பாட்டியின் அருகில் சென்று நெற்றி மீது கைவைத்தாள். ஏசியை ஆப் பண்ணட்டுமா. வேற எதுவும் பண்ணுதா'' பதட்டமாய் கேட்டாள் உடம்புக்கு ஒன்னுமில்லம்மா. இந்த மிஷின் குளிருதான் தாங்க முடியல்ல. எனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லியே. அதான் நடுங்குது'-என்றார் பாட்டி குரல் நடுங்க.

''இதெல்லாம் பழக்கம் இல்லியா. அப்புறம் ஏன் பாட்டி இதை வெச்சிருக்காங்க.''

''இன்னிக்கு காலையிலதாம்மா எம்மகன் சொன்னதா வந்து மாட்டினாங்க. நீ இங்கே தங்குற இல்ல. உனக்குன்னுதான் ஏற்பாடு பண்ணினான். வேலைக்கு போகும்போதே எங்கிட்ட சொல்லிட்டுத்தான் போனான். சரி உன்னை தொந்தரவு பண்ண வேண்டாம்னு தான் சமாளிச்சப் பார்த்தேன். வயது ஆகிப்போச்சில்ல. அதான் குளிர் தாங்கல்ல.''

கண்களில் நீர் முட்டிற்று. அப்படி ஒன்றும் வசதியில் கொழித்தவள் அல்ல தான் என்பது மாமாவுக்கு தெரியும்தான். இருந்தும் தனக்காக எத்தனை வசதிகள் செய்து தந்து.. பணம் இருந்தால் மட்டும் போதுமா? அடுத்தவர்களுக்கென வாழும் மனம் எத்தனை பேருக்கு வரும்? ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள் மீரா. இரவு விளக்குகளின் ஒளியில் லட்சுமிபேலஸ் ஜொலித்தது. வீடு மட்டும் பெரியது அல்ல. இங்குள்ளவர்களின் மனசும் விசாலமானது தான்.

அக்கா கொடுத்து வைத்தவள். இந்த அன்பான அரண்மனையில் வாழப்போகிறாளே. பாட்டியிடம் பேசிப்பார்க்கலாமா? ட்ரை பண்ணலாம் முடிவுடன் ஏ.சியை அணைத்தாள். பேனை சுழலவிட்டாள். ஜன்னலின் வழியாக இதமான தென்றல் வந்தது. கூடவே முற்றத்து ஜாதிமல்லியின் மணமும். மீராவின் மனம் தன் வீட்டிற்கு சென்றது. அம்மாவும், அக்காவும் தூங்கி இருப்பார்களோ. என் நினைவில் தூக்கம் வராமல் என்னைப் போலவே விழித்துக் கொண்டிருப்பார்களோ. தாயைப் பிரிந்து தனியே இருப்பது இது தான் முதல் முறை. தாயை நினைத்ததும் கண்கள் குளமாகியது.

''என்னம்மா! வீட்டு ஞாபகம் வந்திடுச்சா''- பாட்டியின் பரிவான குரல் நீண்ட சட்டென கண்களை துடைத்துக் கொண்டாள்'' ம். இல்ல பாட்டி'' சமாளித்தாள்.

''இருக்கும்மா. பெண் குழந்தையில்லியா நீ. அந்த பாசம் இல்லாம போகுமா. எனக்குத்தான் பெண் குழந்தைங்களே கிடைக்காமல் போச்சு. ம். அதுக்கும் கொடுப்பினை வேணும்''

''அடப்போங்க பாட்டி! பெண் குழந்தைங்க பிறந்தாலே சாபம் செலவு கஷ்டம்னு வெறுத்து ஒதுக்கிடுறாங்க. இன்னும் சிலபேர் கள்ளிப் பால் கொடுத்து கொலையே பண்ணிடுறாங்க. நீங்க கொடுப்பினை வேணும்றீங்க. நல்லா காமெடி பண்றீங்க பாட்டி!''

''அடி அசடே! அதெல்லாம் பெண் குழந்தைங்களோட அருமை தெரியாத மடையன்க செய்யுற வேலை. பெண் குழந்தைதான் மகாலெட்சுமி அம்சம். வீட்டிற்கு வரம். வீட்டிற்கு மங்களமே பெண்கள் தானே. அவளைப் போய் வெறுப்பாங்களா? எங்க குடும்பத்தில யாருக்குமே பெண் குழந்தைகள் கிடையாது. எங்க வீட்டுக்காரர் ஒரே பையன்.

எம்புள்ளையும் ஒரே பையன் தான் எம்மாமனரும் ஒரே பையன் தான். பெண் குழந்தைங்களே இல்லை. அந்தக்குறை தெரியாம இருக்கத்தான் எம்பையனுக்கு பெண் குழந்தைங்க பேரையும் சேர்த்தே வெச்சி கூப்பிட்டு சந்தோஷப்பட்டுக்குவோம். சரோஜாவுக்கும், பெண் குழந்தைங்கன்னா அவ்ளோ பிரியம். அதனாலதான் எத்தனை குழந்தை பிறந்தாலும் சரின்னு வரிசையா ஆறும் பையனா பொறந்தும் சளைக்காம கோவில் குளம்னு சுத்தி ஏழாவது பாரதி பொறந்தா. அவதான் இந்த வீட்டுக்கே இளவரசி. அவ சாப்பிடாம ஒருத்தனும் சாப்பிட மாட்டானே. அத்தனை பாசம். மாப்பிள்ளை கூட வீட்டோட மாப்பிள்ளையாத்தான் பார்க்கணும்னு முடிவோட இருக்காங்க. இவளுக்கேத்த ராஜகுமாரன் இன்னும் கிடைக்கல்ல. அவ என்னன்னா ஆறு அண்ணிகளும் வந்த பிறகுதான் கல்யாணம் பண்ணுவேன் என்கிறாள். ஆனால் கண்ணன் விடுவதாக இல்லை. இப்பக்கூட அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கத்தான் வெளியூர் போறதா சொல்லிட்டு போயிருக்கான். உண்மையைச் சொன்னா இவ ஒத்துக்கமாட்டா. ஆனா அவன் நீ கல்யாணம் பண்ணினாத்தான் எனக்குக் கல்யாணம்னு உறுதியா சொல்லிட்டான். ஒரு வழியா கொஞ்சம் இறங்கி வந்திருக்கா பாரதி. இந்த ... உடனே மாப்பிள்ளை பார்க்க ஆரம்...

நமக்கு தூரத்து உறவுல ஒரு பையன் பெரிய கோடீஸ்வரரா இருக்

''கபாலியை சினிமாவில் சேர்த்து விட்டது தப்பா போச்சு''
''ஏன்?''
''சூட்டிங் போகலாம்னு சொன்னா துப்பாக்கி எங்கேன்னு கேட்கிறான்''

-செல்வராஜா
சேலம்







27/05/2011 15:27

காங்களாம். மாப்பிள்ளை மட்டும் நம்ம நாட்டைவிட்டு போகமாட்டேன்னு இங்க ஏதோ பெரிய கம்ப்யூட்டர் கம்பெனி வெச்சு நடத்துறாராம். பையன் நம்ம கண்ணனோட தோழனாம். அதனால் நேர்ல பார்த்து பேசி முடிஞ்சா கையோட கூட்டிட்டு வந்துடுறேன். பாரதிக்கு பிடிச்சு போச்சுன்னா மத்தத அவன் பேரன்ட்ஸ் வந்த உடனே பேசிக்கலாம்னு சொன்னான்.

இப்ப கொஞ்ச நேரம் முந்திதான் கண்ணனோட கார் வந்தது. அநேகமா மாப்பிள்ளையோடயே வந்திருப்பான்னு நினைக்கிறேன். விடிஞ்சதும் பார்க்கலாம். படுத்துக்கோம்மா'' பேச்சு வாக்கில் கொட்டாவி விட்டவாறே படுத்துக் கொள்ள, மீராவும் அமைதியாக தன் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டாள்.

மனம் முழுக்க இனம் புரியாத ஒரு பரவசம். அவன் எப்படி இருப்பான்? கோபக்காரன் என்றானே பாரதி. ராதா பயந்தாங்குளி ஆயிற்றே. நான் நினைப்பது நிறைவேறுமா? இது சாத்தியமா? அக்காவை ஏற்றுக் கொள்வானா அவன்? கானல் நீரில் மீன் பிடிக்கப் பார்க்கிறேனோ நான்? எனவே இன்னாருக்கு இன்னார் அப்படின்னு இருந்தா அதை யாரால் மாற்ற முடியும்? மெல்ல உறங்கிப் போனாள்.

**எனக்கென ஏற்கனவே**
**பிறந்தவள் இவளோ**
**இதயத்தை கயிறு கட்டி**
**இழுத்தவள் இவளோ..!**

## 5

ஆதவனின் வரவால் சூழ்ந்திருந்த பனி மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருந்த இனிய காலைப் பொழுது. பறவைகளின் கீச்கீச் ஒலி அனைவரையும் எழுப்பிக் கொண்டிருக்க, மொட்டை மாடியின் வெயிலில் கண்ணனும் கவுதமும் மூச்சிரைக்க உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். உடல் முழுவதும் வியர்வையில் குளித்திருக்க பஸ்கிஎடுத்துக் கொண்டிருந்த கண்ணனையும் கையையும் காலையும் வளைத்துக் கொண்டிருந்த கவுதமையும் பார்த்து அந்த அழகான கௌஷிக் கோபமாய் கத்திக் கொண்டிருந்தான்.

அவனது சிவந்த முகம் மேலும் சிவப்பேற, '' அண்ணா! திஸ் இஸ் டூ மச். இந்த கொட்டுற பனியில காலங்காத்தாலே இந்த எக்ஸர்சைஸ் தேவையா. அதுவும் நீங்க பண்ண என்னை ஏன் எழுப்பிட்டு வந்தீங்க. நைட் வந்ததே லேட். அதுவும் இன்ட்ரட்யூஸ் பண்ணி முடிக்கவே ட்டு ஹவர்ஸ் ஆயிடுச்சு. மிட் நைட்ல படுத்தவன இப்படி அதிகாலையில் கூட்டிட்டு வந்து மொட்டை மாடியில நிறுத்தி வெச்சிட்டு நீங்க பாட்டுக்கு எக்ஸர்சைஸ் பண்ணிட்டு இருந்தா என்ன அர்த்தம்?''-காச் மூச் என கத்



தினான்.

அவனையே பிரதி எடுத்தாற் போலிருந்த கவுதம் இரு கைகளையும் சுழற்றிக் கொண்டே, 'ஏன்டா இது அதிகாலையா. வெயில் கன்னுன்னு ஏறுது. உனக்கு உறைக்கலையா. லண்டன்ல இப்படித்தான் தூங்கிட்டே இருப்பியா. சோம்பேறி. காலையில எழுந்த உடனே ஒருமணிநேரமாவது இப்படி உடற்பயிற்சி செய்யணும்டா. அப்பத்தான் உடம்பும் மனசும் ஆரோக்யமா இருக்கும். உடம்புல உள்ள வியர்வையெல்லாம் வெளியேறி புது உற்சாகம் கிடைக்கும். அதோட காலை வெயில் உடலுக்கு இதம் தெரியுமா. பேசாம எங்கூடவே இருந்து நம்ம கம்பெனிய பார்த்துக்கடா. உன்னை ரொம்ப மாத்தணும்''-பேசிக் கொண்டே அடுத்த பயிற்சியைத் தொடங்கினான் கவுதம்.

''ஏன் ஏன் என்னை மாத்தணும்? நீயும் அப்பாவும் எக்கச்சக்கமா சம்பாதிக்கிறீங்க. யார் செலவு பண்றதாம்? அதான் நம்ம இஷ்டத்துக்கு செலவு பண்ணி என்ஜாய் பண்றேன். அது பொறுக்கலியா உனக்கு. உன் கூட இருக்கிறத விட நான் அந்தமான் ஜெயில்லயே இருந்துக்குவேனே. பாரு. அம்மாவும் அப்பாவும் அண்ணி எப்படி இருப்பாங்கன்னு பார்த்திட்டு வரசொன்னதாலதான் வந்தேன். நேத்து நைட்டே பார்த்தாச்சே. மேக்கப் இல்லாமலே நல்லாத்தான் இருக்காங்க. நீ ஜொள்விட்டதைப் பார்த்தே உனக்கு ரொம்ப புடிச்சுப் போச்சுன்னு புரிஞ்சுபோச்சு. என்னை இங்கேயே இருக்கணும்னு சொன்னே அம்மாவுக்கு போன் போட்டு பொண்ணு ரொம்ப சுமார். இது வேணாம். வேற பாருங்கன்னு சொல்லிடுவேன்''-மிரட்டினான் கௌஷிக்.

''அடப்பாவி! அப்படி எதுவும் செய்திடாதே. நான் உன்னை ஒன்னும் சொல்லமாட்டேன். என் ராஜா இல்ல நீ. அம்மா போன்பண்ணினா நல்ல விதமா சொல்லுடா செல்லம். ஐ லைக் பாரதி. ப்ளீஸ். ப்ளீஸ்''-எழுந்து வந்து தம்பியை கொஞ்சினான் கவுதம்.

''ம்! அப்படி வா வழிக்கு. அந்த பயம் இருக்கட்டும். சரி எனக்கு காபி வேணும். முடிஞ்சுதா. எவ்வளவு நேரம் இப்படி வெயில்ல காயுறதாம்''-முகம் சுருக்கி சிணுங்கினான்.

''இன்னும் பத்தே நிமிஷம் கௌஷிக். இப்ப முடிஞ்சிடும். ஸாரிப்பா. நீயும் எக்ஸர்சைஸ் பண்ணுவேன்னு நினைச்சுத்தான் உன்னையும் எழுப்பிட்டு வந்தோம். நீ எப்பவுமே பண்றதில்லையா''-கண்ணன் கேட்டான்.

''அடப்போங்கண்ணா! நான் காலையில எழுந்து சூர்ய உதயம் பார்த்ததேயில்லை. எப்படியும் பத்து பதினொரு மணி ஆயிடும்.''

''அப்படியே கவுதமுக்கு ஆப்போசிட்னு சொல்லு''

''பின்னே! கம்பெனி கம்பெனின்னு கட்டிகிட்டே அழணுமா. நமக்கு அதெல்லாம் சரிவராது. லண்டன் முழுக்க சுத்தவே டயம் போதாது எனக்கு''

''பார்த்துப்பா. சும்மாவே சுத்தினா எப்போ பொறுப்பு வர்றதாம்''

''போச்சு! எங்க அண்ணே [illegible]

இனிமே ஒரே அட்வைஸ்தான் [illegible]

27/05/2011 15:28

வாறு கீழிறங்கி திரும்பியவன் ஆணியடித்தாற் போல் நின்றான்.

கீழே தோட்டத்தின் மலர்களிடையே புதுமலராய் ஊதா நிற புடவையில் பெரிய ஊதாப்பூவாய் பூத்திருந்த மீரா அவனது பார்வையில் விழுந்தாள். பட்டுக்கூந்தல் காற்றில் பறந்து கவிதைபாட ஒவ்வொரு பூவையும் நுகர்ந்து பார்த்து முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். சிறு குழந்தையின் குதூகலமும், குமரிப் பெண்ணின் ரசனையுமாய் லயித்து போயிருந்தவளை பார்த்து பிரமித்துப் போனான் கௌஷிக்.

மொத்த பூக்களின் அழகையும் அவள் ஒருத்தியே குத்தகைக்கு எடுத்தாற்போல் என்னவொரு அழகு? அன்றலர்ந்த அல்லி போல். ''வாட்! வாட் எ பியூட்டிஃபுல் ஏஞ்சல். ஏன் கண்ணன் சார். யார் இந்த ஏஞ்சல். எத்தனை கொள்ளை அழகு. இந்தப் பெண்ணை ஏன் நேத்து இன்ட்ரயூஸ் பண்ணல நீங்க?''

கீழே நோக்கிய விழிகளை விலக்காமலேயே அவன் கேட்ட விதம் மற்ற இருவரையும் எழுந்து வந்து எட்டிப்பார்க்கச் செய்தது.

'அட ஆமாம்! யார் இவள்? இத்தனை உரிமையாய் நம் வீட்டிற்குள்? ஏதேனும் உறவினரா இத்தனை காலையில் யாரும் வந்ததாய் தெரியவில்லையே? நேற்றே வந்திருக்க வேண்டும். தலை குளித்து கூந்தலை உலரவிட்டுக் கொண்டிருக்கிறாளே. ஒரு வேளை பாட்டியை பார்த்துக் கொள்ள வந்திருக்கும் தாதியோ. அப்படியாகத்தான் இருக்க வேண்டும். மிகவும் எளிமையாய் ரசனையாய் ஒவ்வொரு மலர்களாய் வருடிவிட்டுச் செல்லும் அவளை கண்ணன் வெகுவாய் ரசித்தான்.

வீட்டின் முன் எத்தனை விதமான மலர் பூத்துக்குலுங்கினாலும் நம் வீட்டில் யாரும் நின்று ஒரு கணம் கூட ரசித்ததில்லை. சாமிக்கு என அம்மா சில பூக்கள் பறிப்பதுண்டு. மற்றபடி பாரதி கூட இப்படி ரசிக்க மாட்டாள். இப்படி ரசிக்கவும் ஒரு ஆர்வம் ரசனையுள்ள மனம் வேண்டும். கண்ணனின் முகத்தில் தெரிந்த புன்னகையைப் பார்த்த கௌஷிக், ''ஓ ஸாரி. இந்த ஏஞ்சல் உங்களுக்கென பேசி வைத்துள்ள பெண்ணா? நான் அது தெரியாமல் கொஞ்சம் உளறி விட்டேனே''- என்றான் மன்னிப்பு கோரும் பாவனையோடு.

''நோ. நோ. அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. இது பாட்டிம்மாவை கவனித்துக் கொள்ள வந்திருக்கும் நர்ஸ் என நினைக்கிறேன்.''



''ஜோசியரே என் மாமியாருக்கு என்ன கல் போட்டா மோட்சம் கிடைக்கும்.

''குழவி?'' கல்லை போடுங்க மோட்சம் கிடைக்கும்.

-பி.பாலாஜி
கோவிலாம் பூண்டி



''யூ மீன் ஸர்வண்ட். வாவ் இந்தியாவில் சர்வெண்ட் கூட இத்தனை அழகா' ஆச்சரியமாய் கேட்டவனிடம் 'என்னப்பா இப்படிக் கேட்டுவிட்டாய். எங்கள் இந்தியப் பெண்கள் எல்லோருமே எப்போதுமே அழகு தான்'' பெருமையாய் ஒலித்தது கண்ணன் குரல்.

''ஓ! வெரிநைஸ். அண்ணா அந்தப் பொண்ணை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குது. நான் போய் டூமினிட்ஸ் பேசிட்டு வரட்டுமா''-என்றவனை முறைத்தான் கவுதம்.

''டேய்! இது பொண்ணு வீடு. இங்க உன் சேட்டையெல்லாம் காட்டாதே. அப்பாகிட்ட சொல்லிடுவேன். அதோட நாம நிக்கிறது மூணாவது மாடி. இங்கே இருந்து பார்த்தே முடிவு பண்ணிடாதே. அப்புறம் பக்கத்துல போய் முகத்தை பார்த்துட்டு ஷாக்காகிடுவே. கிளம்பு. போய் குளிக்கலாம்''-என்றவாறே டவலால் முகத்தை பற்றிக் கொண்டே கவுதம் சொல்ல, தன் ஷார்ட்ஸில் கையை நுழைத்து செல்போனை எடுத்தான் கௌஷிக். சரியான கோணம் பார்த்து நின்று கொண்டு செல்லின் திரையில் அவள் பிம்பம் விழுந்ததும் அப்படியே தயார் நிலையில் வைத்துக் கொண்டே'' ஹலோ மேடம் கொஞ்சம் மேலே பாருங்க''-என குரல் கொடுக்க யாரோ அழைக்கும் குரல் மேலே திரும்பினாள் மீரா. சரியான க்ளிக் செய்து கொண்டான் கௌஷிக்.

''நோ. கௌஷிக். இது தப்பு. ஒரு பெண்ணோட அனுமதி இல்லாமல் அவளை போட்டோ எடுக்கிறது தப்பு. அதை எரேஸ் பண்ணிடு''-கண்ணனின் முகம் கடுத்ததைக் கண்டு கவுதம் அவசரமாகத் தம்பியின் கையிலிருந்த செல்போனை பறித்து அதில் பதிவாகியிருந்த உருவத்தை அழித்தான். கண்ணனை நோக்கி, ''ஸாரிடா! ஏதோ விளையாட்டுத்தனமா எடுத்துட்டான். வெரிஸாரி''-என்றான்.

''இட்ஸ்! ஓ.கே. வாங்க போகலாம்''-என்றவாறு டவலால் உடம்பை போர்த்திக் கொண்டு கீழே இறங்கிவர அந்தப்பெண் இவர்கள் மூவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டே நிற்பது தெரிந்தது. 'என்ன பெண் இவள்? மூன்று ஆடவர்கள் பனியனும் அரைக்கால் டவுசருமாய் வருவதை இப்படியா வெறித்துக் கொண்டு நிற்பாள்? பிறகேன் கண்டவனும் போட்டோ எடுக்க மாட்டான்? இந்த அப்பா எப்படி இந்த மட்டரக பெண்ணை வீட்டிற்கு வரவைத்தார்.

எதையும் பார்த்து பார்த்து ஆராயும் அப்பா எப்படி இந்தப் பெண்ணை தேர்ந்தெடுத்தார். பார்வையைப் பார்? சரியான ஆம்பிளை பொறுக்கியாய் இருப்பாளோ? இதில் கௌஷிக் வேறு ஜொள் விட்டுக் கொண்டு திரிவான். கவுதம் பாரதிக்கும் பிடித்துப் போனால் அடுத்த வாரம் நிச்சயதார்த்தம் என்று பேசி முடிவாகியிருக்கிறது. அப்படியானால் நிச்சயம் அதுவரை கௌஷிக்கும் இங்குதான் இருப்பான்.

முதலில் இவளை அப்பாவிடம் சொல்லி வெளியேற்ற வேண்டும். இவள் பார்வையே சரியில் [illegible] டவள் என்று நினைத்தோ [illegible] டின் அளவை கணக்கிட்டாளோ? எந்தப் புற்றில் எந்த பாம்பு இருக்

குமோ?' அருகில் வந்ததும் தான் அவள் அழகு மொத்தமும் தெரிந்தது. வெறுப்பாய் நோக்கியவனின் கண்கள் நெருப்பைக் கக்கின. யாரை மயக்க இத்தனை அழகு? எந்த நோக்கத்தோடு இங்கே வந்தாய்? பார்வையாலே எரித்தான்.

இந்த மூவரில் யார் கமலக்கண்ணன்? மாடியிலிருந்து இறங்கி வந்த மூவரையும் மாறிமாறி பார்த்தாள் மீரா. மற்ற இருவரும் ஒரே போல் தோன்ற நிச்சயமாய் முதலில் வருபவன்தான் கண்ணனாக இருக்க வேண்டும். நடையின் கம்பீரமும் திருத்தமான முகமும் அதை அடித்துக்கூறியது. அதோடு பாரதியின் கூரான நாசியும் காந்தக் கண்களையும் அப்படியே தன்னில் கொண்டிருக்கிறானே? நிச்சயம் இவன்தான் கண்ணன். ஆனால் ஏன் இந்தக் காந்தக் கண்கள் தன்னை இத்தனை வெறுப்பாய் முறைக்கின்றது?

ஐயோ என் நோக்கம் தெரிந்துவிட்டதோ. அதனால்தான் வெறுப்பை கக்குகிறானோ? இல்லையே தன் எண்ணம் தன்னைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? என நினைத்தவளுக்கு அப்போதுதான் மூளையில் உறைத்தது.

ச்சே! என்னகாரியம் செய்து கொண்டிருக்கிறோம். அந்நிய ஆடவர்களை இப்படியா வெறித்துக் கொண்டு நின்றோம். ஐயோ முதல்நாள் இப்படி பார்த்தால் என்னை என்னவென்று நினைத்துக் கொள்வார் இவர்? உணர்வுக்கு மீண்டவள் சட்டென பாட்டியின் வீட்டை நோக்கி திரும்ப, ''ஹாய் ஐயாம் கௌஷிக்! யூ லுக் ஸோ ப்யூட்டிபுல். யுவர் குட் நேம் ப்ளீஸ்'' என்றவாறே கைநீட்டினான். ஒரு கணம் தடுமாறி 'ஐயோ'-என்றவாறு விடுவிடுவென ஓடினாள். சிறு தோள் குலுக்கலோடு கௌஷிக் செல்ல, நிம்மதியாய் மூச்சை விட்டான் கண்ணன்.


அந்தப் பார்வையில் உண்மையான மிரட்சி இருந்ததோ' 'மீரா' என்ற பாட்டியின் அழைப்பிற்கு ''இதோ வந்துட்டேன் பாட்டி'' -என பதறி ஓடினாள் அவள்'

'மீரா! நைஸ் நேம்'- கௌஷிக் புன்னகையோடு சொல்ல கண்ணனுக்கு ஏனோ எரிந்தது. என்ன இது? இன்று ஏன் எனக்கு தேவையின்றி இத்தனை கோபமும் எரிச்சலும் வருகிறது. இது தனது இயல்பு அல்லவே? கண்ணனின் பார்வை அவனை அறியாமலேயே பாட்டி வீடு சென்று மீண்டது ஏமாற்றமாய்.

## 6

**முதல்நாள் என் மனதில்**
**விதையாய் நீ விழுந்தாய்**
**மறுநாள் பார்க்கையிலே**
**மரமாய் ஆகிவிட்டாய்-நாடித்**
**துடிப்போடு உயிராகி நீ வாழ்கிறாய்!**
**என்னில் நீ வாழ்கிறாய்!**

''ம்! மாப்பிள்ளை ராஜாவாட்டம் லட்சணமாய்த்தான் இருக்கி



றான். பாரதி குட்டி உனக்கு புடிச்சிருக்கா'' -லட்சுமி அம்மாள் கேட்க, ''ஐயோ போங்க பாட்டி ''என்றவாறு மீராவின் முதுகில் முகத்தை புதைத்துக் கொண்டாள் பாரதி. கவுதமும் வெட்கமாய் தலை குனிந்து கொள்ள கண்ணனின் பார்வை மீராவை கூர்மையாய் ஆராய்ந்தது. தவறிக்கூட அவனை நேராய் பார்ப்பதை தவிர்த்தாள் மீரா. காலையில் அவன் முறைத்த முறைப்பு இன்னும் நடுங்க வைக்கிறதே. காலையில் பரந்து விரிந்திருந்த கூந்தலை அழகாய் பின்னலிட்டு அதில் பூச்சூடி இருந்தாள்.

உடம்பை பாந்தமாய் தழுவியிருந்த புடவை. மெலிதாய் செயின், காதுகளில் சிறிதாய் குட்டி ஜிமிக்கி. கைகளில் பொன் வளையல்கள் என வெகு எளிமையாய்த்தான் இருந்தாள்.

தன்னை ஏறெடுத்தும் பார்க்காமல் தவிக்கும் கண்கள். தளிர்மேனி கூட கொஞ்சம் நடுங்குகிறதோ, நாமும் தான் அப்படி பார்த்திருக்கக்கூடாது. புதியவர்கள் என்ற முறையில் இந்தப் பெண் பார்த்திருக்கலாம். அதற்கு நாம் ஆயிரம் அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டோமே. முதன் முறையாய் பார்வை கனிந்தது.

''உங்களுக்கு எங்க வீடு பிடிச்சிருக்கா மீரா''-தன்னை நோக்கி வந்த கேள்வியில் அதிர்ந்து நிமிர்ந்தவள் மீண்டும் தலையை குனிந்து கொண்டாள். இவன் கண்களை நேராக சந்திப்பது அபாயம். இந்தப் பார்வை தன்னையே தடுமாற வைக்கிறதே'



''நான்தான் எமன் வந்திருக்கேன் ''

''நல்ல வேலை நான் டாக்டர்ன்னு நினைச்சி பயந்துட்டேன்.''

-பி.பாலாஜி
கோவிலாம்பூண்டி

''இல்ல. பாட்டியோட இருக்க சிரமம்னா நம்ம வீட்லயே பாரதியோட அறைக்கு பக்கத்திலேயே உள்ள அறையை ஏற்பாடு பண்ணிடலாம்''-மீண்டும் அவன் சொல்ல அவள் அவசரமாய் மறுத்தாள்.

''வேண்டாம் சார். இதுவே போதும். பாட்டியோடவே நான் இருந்துக்கிறேன். அப்போதான் பாட்டிக்கு வேளாவேளைக்கு சாப்பாடு மருந்து எடுத்துதர வசதியா இருக்கும். அதோட பாட்டியோட பேசிட்டும் இருக்கலாமே. பாவம் பாட்டிக்கும் போரடிக்குமே''

''உண்மைதான் மீரா. நாங்க எல்லோரும் வேலை வேலைன்னு வெளியே போயிடுறோம். அம்மாவுக்கும் எங்களை கவனித்து அனுப்பவும். அப்பாவைக் கவனிக்கவும் வேலை சரியாக இருக்கும். அதோடு அம்மாவின் உடல் நிலையும் முன்னைப் போலில்லை. பாட்டியும் தாத்தா வாழ்ந்த இந்த வீட்டை



விட்டு அங்கே வருவதில்லை. அம்மாவால் இங்கும் அங்கும் அலைய முடிவதில்லை. அதனால இந்த ஏற்பாட்டை செய்தோம். மற்றபடி பாட்டி என்றால் எங்களுக்கு உயிர். ஞாயிறு முழுவதும் இங்கேதான் இருப்போம். பாட்டிக்காக அதிக நேரம் ஒதுக்க ஆசைதான். ஆனால் நேரம்தான் கிடைப்பதில்லை''-பாட்டியின் கையைப் பற்றி வருடியவாறே சொன்னான்.

''அதனால என்ன ஸார். காலையில வேலைக்குப் போகும் போது ஒரு பார்வை பார்த்துட்டு போங்க. ஈவ்னிங் வந்தப்புறம் ஒரு வாட்டி சாப்பிட்டாச்சா பாட்டின்னு விசாரிங்க. அதுவே பெரிய டானிக் அவங்களுக்கு.''

''ஏன் எப்பவும் அப்படித்தான் செய்வேன். நேற்று வீட்டுக்கு வர ரொம்ப தாமதமானதால வரமுடியல்ல. பாட்டியோட தூக்கம் கெடுமே. மற்றபடி எப்பவும் வர்றதுண்டு''-இந்த பதிலில் மீரா மனம் ரொம்பவே துள்ளியது. அப்படியானால் தினமும் இருமுறை இவனைப் பார்க்கலாமா?

''ம். அப்புறம் மீரா. பாட்டியோட மெடிசன் காலியாகும் முன்பே சொல்லிடுங்க. வாங்கிட்டு வந்துடுவேன். கல்யாண வேலைன்னு ரொம்ப பிஸியா இருப்போம். ஸோ. எதுவேணாலும் தயங்காம கேளுங்க. சரியா''. தலையாட்டினாள். எழுந்தான்.

''சரி பாட்டி. கிளம்பட்டுமா. உமாவோட பத்திரிகை அச்சாகியிருக்கும். வாங்கிட்டு வந்திடுறேன். அம்மா ராத்திரி சாமிகும்பிடணும்னு சொன்னாங்க. ஏதோ பூஜையாம். நீங்களும் மீராவும் ஆறு மணிக்கு அங்கே இருக்கணுமாம். நாங்களும் அதுக்குள்ள வந்திடுவோம். வரட்டுமா. வர்றோம் மீரா. டேய் பார்த்தது போதும் எழுந்திருடா. பாரிக்குட்டி பை''-என்றவாறு வெளியேறினான். பார்வையாலேயே பாரதியிடம் விடைபெற்றுக் கொண்டு பாட்டியின் காலில் விழுந்து வணங்கினான் கவுதம்.

மீராவிடமும் சொல்லிவிட்டு கிளம்ப சற்று நேரத்தில் கண்ணனின் பால்நிற ஸ்கார்பியோ கார் போர்டிகோவை விட்டு வெளியேறியது.

பல ஆண்டுகளாக கூடவே வாழ்ந்து வந்த உறவு தன்னை விட்டு பிரிந்தது போல திணறிப்போனாள் மீரா. இதென்ன விந்தை. பார்த்த ஒரே நாளில் மனம் இப்படி மாறிவிடுமா. ஐயோ! அப்படியானால் நான் பாவி ஆயிற்றே. தன் அக்காவிற்காகத்தானே இங்கு வந்தோம். இப்போது இந்த மனம் குரங்காகி விட்டதே. பார்த்த மறுகணமே இவன் பின்னால் ஓடும் மனதை என்னவென்று சொல்வது? தப்பு. இது தப்பு. மனதை ஒருமுகப் படுத்த வேண்டும்.

பாட்டியிடம் சொல்லிக்கொண்டு உள் அறைக்குச் சென்றாள். சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டு தியானம் செய்ய ஆரம்பித்தாள். ஒரு நிமிடம் இரண்டு நிமிடம். நிமிடங்கள் செல்ல செல்ல அலைபாய்ந்த மனது தன் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. எழ மனமில்லாமல் அப்படியே அமர்ந்திருந்தாள். மணிக்கணக்கில். பாரதி வந்து எழுப்பும் வரையில் அசையவே இல்லை.

''என்ன மீரா! மணி [illegible] இன்னும் நீ ரெடியாக

27/05/2011 15:29

லையா. பூஜைக்கு நேரமாச்சு''-அசைத்தாள் பாரதி. விழித்துக் கொண்ட மீரா, 'பாரதி! இது உங்க வீட்டு விசேஷ பூஜை. இதில நான் எதுக்கு. பாட்டியக் கூட்டிட்டு போ. நான் இங்கேயே இருந்துடுறேனே'-தயங்கினாள்.

''என்ன நீ எப்பப்பார்த்தாலும் பிரிச்சே பார்க்கிற. நம்ம வீடுன்னு சொல்லிப்பழகு''

ஆசைதான் அப்படிச் சொல்ல. ஆனால் அது பேராசை அல்லவா.

''இதோ பாரு மீரா. பாட்டி கூட ரெடியாகிட்டாங்க. சீக்கிரமா கிளம்பிவா என்ன? ஐயர் வந்திட்டாரு. அதை எடு இதை எடுன்னு ஏவிகிட்டே இருப்பாரு. நான் வரட்டுமா. சீக்கிரம் வா''-என எழுப்பி குளியலறை வரை விட்டுச் சென்றாள். அரை குறை மனதோட உடல் கழுவி தலைவாரினாள். இருப்பதில் நல்ல தாய் உள்ள மாம்பழநிற இலேசான ஜரிகை புடவையை கட்டிக் கொண்டாள்.

இலேசான பவுடர் பூச்சுடன் கிளம்பினாள்'' இந்தாம்மா! பாரதி பூ வெச்சிட்டு போயிருக்கிறா. தலையில வெச்சிக்க''-கை நிறைய பூவை தந்தாள் பாட்டி ''இவ்ளோ பூவா. கொஞ்சம் போதுமே''

''அய்யோ! பொம்பளை புள்ள பூவுக்கும் பொட்டுக்கும் கஞ்சத்தனமே பார்க்கக்கூடாது. தாராளமா வெச்சுக்கணும். வெச்சுக்க'' என்றார் பாட்டி. பூவைச் சூடியபின் கண்ணாடி முன் நின்று பார்த்தால் பிரமாதமாய் இருந்தது. ஆனால் சாதாரண பூஜைக்கு இது அதிக அலங்காரமோ. சற்று சங்கோஜமாக சென்றவள். அந்த வீட்டு பெண்களின் அலங்காரத்தில் அசந்து தான் போனாள்.

அனைவரும் பட்டும் வைரமுமாய் தலை முழுவதும் பூக்காடாய் ஜொலிக்க தன் மீதே வெறுப்பாய் இருந்தது' பெரிய வீட்டுக்குப் போறே. இந்த முத்துமாலையும் லாங் செயினையும் கொண்டு போ. எங்காவது வெளியே போகும்போது போட்டுக்க. அப்பதானே கொஞ்சம் மதிப்பா இருக்கும்'-என அம்மா எடுத்து வைத்த நகையை வேண்டாம் என்று பிடிவாதமாய் மறுத்ததை எண்ணி இன்று வருத்தப்பட்டாள். சிம்பிளாக இருப்பது அழகுதான். ஆனால் சபையில் மற்றவர்கள் நடுவில் நாமும் அப்படி

''என் மனைவியை நான் இது வரையிலும் கை நீட்டி அடிச்சதே இல்லை!''

''ஏன். அவ்வளவு நல்லவங்களா?''

''அதெல்லாமில்லை! நான் அடிக்கிறதுக்குள்ளே அவளே அடிச்சிடுவாள்!''

-என். குணசீலன்,
பட்டுக்கோட்டை.





இருந்தால் தானே மதிப்பு.

சொல்லி வைத்தாற்போல் வந்த சுபத்ரா ஒரு புழுவை பார்ப்பது போல் பார்த்தாள். தங்கத்தால் உடல் மொத்தமும் மூடியிருந்தாள்.

'இப்படி பிச்சைக்காரி வேஷம் போடத்தான் இங்க வந்தியா. நிறைய பெரியவங்க எல்லாம் வருவாங்க. போ. போய் ஓரமா நில். கூப்பிட்டா உடனே வந்திடணுமோ என்ன ஜென்மமோ?'-அடுத்தவர் காதில் விழாமல் தேளாய் கொட்டிவிட்டுச் சென்றாள். நெருப்பின் மீது நிற்பதைப் போல் உணர்ந்தாள் மீரா. கண்ணோரம் கரித்தது.

தான் நினைத்து வந்ததைப் போல் இது சிம்பிளான பூஜை அல்ல போலும். நிறைய விருந்தினர் வந்து கொண்டிருந்தனர். ஒரு புறம் சமையல் ஜரூராய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வீடு முழுவதும் ஹோமப் புகை. பாட்டி நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

வேறு யாரும் தன்னை கவனிக்கவில்லை என்பதை உணர்ந்து வேகமாய் திரும்பி வெளியேறினாள். படியிறங்கும் போது அப்பாவின் தோளில் கைபோட்டு அழைத்து வந்து கொண்டிருந்தார் சீதாராமன். அப்பாவைக் கண்டதும் கண்ணீர் சொரிய தந்தையைக் கட்டிக் கொண்டாள்.

''அட என்னம்மா குழந்தையாட்டம்! அழாதே. எல்லோரும் பார்க்கிறாங்க பாரு. வா உள்ளே போலாம்''- சீதாராமன் இருவரையும் அழைத்துச் சென்றார். சரோஜா வந்து வரவேற்று காபி கொடுத்துவிட்டு வந்திருந்த பெண்மணியை வரவேற்கச்செல்ல, 'அம்மாடி! இப்படிவா' - என சற்று ஓரமாய் அழைத்துச் சென்றார் அப்பா.

பனியனுக்குள் கையைவிட்டு ஒரு துணிப்பையை எடுத்தார்'' அம்மா உன் நகையை கொடுத்துவிட்டா. விருந்து விசேஷம்னா போட்டாத்தானே நல்லா இருக்கும். போட்டுக்க''-என்றதும் பேச்சே வரவில்லை. பூரிப்புடன் வாங்கிக் கொண்டாள். முத்தும், பவளமும் சேர்ந்து இழைந்திருந்த அட்டிகையை போட்டுக் கொண்டு நீளமான செயினையும் போட்டுக் கொண்டாள். நான்கு வளையல்களும் கரைக்கு ஒன்றாய் வெள்ளைநிற கற்கள் பதித்த வளையல்களும் போட்டுக் கொண்டாள்

''போதும்ப்பா. மத்ததை பத்திரமா வெச்சிட்டு வர்றேன். நீங்க மாமா கிட்ட பேசிட்டு இருங்க' - உற்சாகமாய் பாட்டி வீட்டிற்கு சென்று தனது பெட்டியில் நகையை பத்திரப்படுத்திவிட்டு கண்ணாடி முன் நின்று ஒரு முறை பார்த்துக் கொண்டாள். கம்மல் சிறியதாக இருக்கிறதே. உடனே கழற்றினாள். கழுத்தணிக்கு ஏற்ற பவளமும், முத்துமாய் கோர்த்திருந்த கம்மலை மாட்டிக் கொண்டாள். ம். பெர்பெக்ட்.

கதவை பூட்டிவிட்டு பெரிய வீட்டின் உள்ளே சென்றாள். அப்பா மாமாவோடு பிசியாக இருக்க பேசாமல் பாட்டியின் அருகில் சென்று நின்று கொண்டாள்.

ஹோம குண்டத்தில் அவல்பொரி சிலபல வேர்களை போட்டு நெய் ஊற்றிக் கொண்டிருந்த ஐயர் அவளை அழைத்தார். கையில் செம்பு நிறைய நீரையும் ஒரு மா ... எல்லா அறையிலேயும் ... வில் தெளித்துவிட்டு வாம்மா' 'என்றார்.



27/05/2011 15:29

''நானா... நான்.. எப்படி '' தயங்கினாள்.

''வாங்கிட்டு போம்மா' 'லட்சுமிபாட்டி சொல்ல மறுக்காமல் வாங்கிக் கொண்டு அவர் சொன்னதைப் போலவே ஒவ்வொரு அறையாக தெளித்துக் கொண்டே வந்தாள். மாடியில் மூன்றாம் அறையில் தெளித்த போது அவன் துள்ளி எழுந்தான்' யாரது படுக்கையில் தண்ணீர் தெளிக்கிறது. ஸ்டுப்பிட்'-கோபமாய் எழுந்த ராதாகிருஷ்ணன் ஒரு நிமிடம் இமைக்க மறந்தான். எல்லோரும் குளித்து முடித்து பட்டு வேட்டி சகிதமாய் ஹாலில் உலவ இவன் மட்டும் அறையில் அடைந்து என்ன செய்கிறான்.

''ஹய்யோ! ஸாரி. நான் கவனிக்கவில்லை. நீங்க பூஜைக்கு வரவில்லையா?'' அவசரமாய் மன்னிப்பு கோரினாள்.

ஆனால் அவன் அவள் பேசுவதை காதில் வாங்கினாற் போலில்லை. அவளை தலைமுதல் கால்வரை பார்வையால் அளந்தான். அந்தக் கண்களில் ஆயிரம் வால்ட் மின்சாரத்தின் பிரகாசம். காணக்கிடைக்காத அரிய பொக்கிஷத்தை கண்டுவிட்டதைப் போல் ஒரு பரவசம். சரியாய் மழிக்கப் படாத முகமும் சோர்ந்திருந்த முகமும் பரிதாபமாய் இருந்தவன் தன்னை பார்த்து ஏன் இப்படி உணர்ச்சி வசப்படுகிறான். அறையில் வேறுயாரும் இல்லாதது கொஞ்சம் பயத்தை வரவழைக்க மெல்ல விலகி வாசலை நோக்கி நடக்க முயல குறுக்கே கைநீட்டி தடுத்தான்'

''நீ..நீ..ராதாதானே'' ஆச்சர்யமாய் அவளை பார்த்தான்.

''என்ன கேட்டீங்க?''

மீண்டும் அவன் கேட்டான்''. நீ ராதா தானே?'' லேசாய் சிரித்தாள், ''இல்ல நான் மீரா. அவளோட தங்கை'' சரேலென விலகிக் கொண்டான். அவன் முகத்தில் இருந்த அத்தனை பிரகாசமும் மறைந்து முகம் இருளாய் மாறியது.

''ஓ. ஐ'ம் ஸோ ஸாரி! ஐ'ம் வெரி ஸாரி. நான் ராதான்னு நினைச்சிட்டேன். ஸாரி. நீங்க போலாம்'' -வேறுபுறமாய் திரும்பிக் கொண்டான். தயக்கமாய் நின்றாள்' ஏன் சார்! உங்களுக்கு என் அக்காவைத் தெரியுமா. எப்படித் தெரியும்' -கொஞ்சம் பதட்டமாய் கேட்டாள்.

''பிளீஸ்! என்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். நான் கொஞ்சம் தனியா இருக்கணும். கொஞ்சம் வெளியே போறீங்களா? வீட்ல எல்லோரும் கீழே இருக்கும் போது நீங்க மட்டும் என் கூட தனியா பேசினா அது வீண் பேச்சுக்களுக்கு இடமளிக்கும். தப்பா நினைச்சுக்காதீங்க. அப்புறமா பேசலாமே. நான் ரொம்ப அப்செட்டா இருக்கேன் பிளீஸ்'' -அவனது கைகள் வாசலைக் காட்ட வேகமாக வெளியேறியவள் அங்கே தீப்பொறி பறக்கும் கண்களோடு நின்ற கண்ணனைக் கண்டதும் சர்வமும் நடுங்கிப் போனாள். ''ஓஹோ. இவனை கவிழ்க்கத்தான் இந்த நர்ஸ் வேஷமா. அந்த வேஷத்தை விட இந்த அலங்காரம் அற்புதம். இதைப் பார்த்துமா அவன் மயங்கவில்லை.''

அருகில் வந்து உறுமலாய் கேட்க கையிலிருந்த செம்பு கிடுகிடுக்க நிற்க முடியாமல் தள்ளாடினாள் மீரா.



# 7

என் கண்களின் இமைகளிலே
உன் ஞாபகம் சிறகடிக்கும்
நான் சுவாசிக்கும் மூச்சினிலே
உன் ஞாபகம் கலந்திருக்கும்...

மேலே மேலே என்ன வார்த்தைகளையெல்லாம் அள்ளி வீசி இருப்பானோ. அதற்குள், ''ஹாய் மீரா! வாவ் பெண்டாஸ்டிக். ரியல்லி சூப்பர்யா. அப்படியே மல்கோவா மாம்பழம் மாதிரியே இருக்கீங்க. நீங்க மட்டும் உம்முனு ஒரு வார்த்தை சொல்லுங்க. இப்பவே உங்களை லண்டனுக்கு அள்ளிட்டு போயிடுறேன்'' -சமயம் தெரியாமல் இடையில் புகுந்தான் கௌஷிக்.

''ம். இதோ இந்த கௌஷிக் வேறு இருக்கிறானே. இவன் ஒன்றும் சாதாரணன் அல்ல. கோடிகளில் புரள்பவன். நீ கேட்டால் லண்டனையே விலை பேசுவான். என்ன கௌஷிக்?''-கண்ணனின் வார்த்தைகள் மீராவின் கோபத்தை நெய்யூற்றி எரிய வைத்தது. இவை எதையும் அறியாத கௌஷிக் மிகவும் இயல்பாய், ''ஷ்யூர். மீராவுக்காக எதையும் செய்யலாமே. லண்டன் என்ன உலகத்தையே கொடுக்கலாமே. என்ன மீரா. அம் ஐ கரெக்ட்'' - கண்ணடித்து சிரித்தான்.

''ஸ்டாப் த நான்சென்ஸ். அறிவில்ல உனக்கு. மேனர்ஸ் இல்ல. டீசன்ஸின்னா என்னன்னு தெரியாதா உனக்கு. உன் இஷ்டத்துக்கு பேசிட்டு போறியே''. கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளை துப்பினாள். அவமானத்தில் முகம் சிவந்து போனான் கௌஷிக்.

''ஸாரி மீரா. நான் ஒன்றும் தப்பாக பிஹேவ் பண்ணவில்லையே. நிஜமாகவே உங்களை எனக்கு மிகவும் பிடிச்சிருந்ததாலதான்''

''பிடிச்சிருந்தா என்ன வேணா பேசுவியா. பார்க்கிறவங்களையெல்லாம் உனக்கு பிடிக்கலாம். ஆனால் உன்னை மற்றவர்களுக்கு பிடிக்க வேண்டாமா?' 'சீறினாள்.

''ஏன் மீரா உங்களுக்கு என்னை பிடிக்கலியா'' கௌஷிக்கின் குரலில் வலி தெரிந்தது.

''பணமும் அழகும் இருந்தா மட்டும் உங்களை எல்லோருக்கும் பிடிக்காது மிஸ்டர்' '-கண்ணனையும் பார்த்தே சொன்னாள். ''மனசு நல்ல மனசு வேணும். எதையும் ஆராய்ந்து யோசிக்காம அடுத்தவங்களை தாக்குறைவா பேசுறது. பணம் மட்டும் இருந்தா போதும். எல்லாப் பெண்களும் உங்க காலடியில விழுந்திடுவாங்கன்னு நினைக்காதீங்க.''

பதறி தடுத்தான் கௌஷிக். ''ஐயோ மீரா என்னல்லாமோ பேசுறீங்களே. பிளீஸ். இங்கே என்னவோ விசேஷம் நடக்குது. நாம அப்புறம் பேசலாமே''.

''எப்பவுமே எனக்கு [illegible]
மாதிரி ஆண்களை கண்ட[illegible]

27/05/2011 15:29

மேலயும் என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க. நீங்கள்லாம் சொந்தமாக போறவங்க. சந்தோஷமாகல்யாணம் வரைக்கும் இருப்பீங்க. நான் உங்களுக்கு இடைஞ்சலா தோணுனா சொல்லிடுங்க. போயிடுறேன். அதுக்காக கண்டதையும் சொல்லி எம்மனசை கூறுபோடாதீங்க''- விடு விடு என படிகளில் இறங்கிப் போனவளையே பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

''ஏன் ஸார்! நான் என்ன சொல்லிட்டேன்னு அவங்க இத்தனை கோபமா பேசிட்டு போறாங்க. எனக்கு ஒன்னுமே புரியல்ல''- தலையைப் பற்றிக் கொண்டான் கௌஷிக்.

மெல்ல சிரித்தான் கண்ணன். ''எனக்கு புரியுது கௌஷிக். இது லண்டன் இல்ல. இந்தியா. இங்கெல்லாம் இப்படி சட்டுன்னு ஒரு பொண்ணு கிட்ட போய் இப்படி பேசக்கூடாது சரியா. ஏதோ மீரான்றதால சரியாய்ப் போச்சு. இல்லேன்னு வைவி பெரிய பிரச்சனை ஆகிடும். சரி வா. முதல்ல ராதா அண்ணனை கூட்டிட்டு பூஜைக்கு போவோம். அதுக்குத்தான் மேலே வந்தேன்''- என்றவாறு ராதாகிருஷ்ணன் அறைக்குச் சென்றான்.

வாரம் ஒன்று உருண்டோடியும் மீராவிற்கு விடை தான் தெரிந்தபாடில்லை. இந்த ராதாகிருஷ்ணனுக்கு எப்படி அக்காவைத் தெரியும்? அவன் முகத்தில் எத்தனை ஆர்வம்! சாதாரண விசாரிப்பு அல்ல அது. ஏதோ ஒன்று இருக்கின்றது. யாரிடம் என்னவென்று கேட்பது? யோசித்து யோசித்து தலைவலி வந்தது தான் மிச்சம். விடை தான் தெரியவே இல்லை. பாரதியிடம் கேட்கலாம் என்றால் அவளை தனியே பார்க்கவே முடியவில்லை. இன்னும் இரண்டு நாளில் நிச்சயதார்த்தம் என்பதில் புடவை எடுக்கவும், நகை வாங்குவதுமாகவும் எப்போதும் உறவினர் புடைசூழ பிஸியாகவே இருந்தாள். தனியாக இருக்கும் போது மொபைல் கவுதமோடு கிசுகிசுத்துக் கொண்டே இருப்பாள். இவளிடம் போய் எப்படி பேசுவது?

உமாபதியின் திருமணமும் நெருங்கி வரவே விருந்தினர்கள் வருவதும், போவதுமாய் இருக்க பாட்டியும் தனிமையாய் இல்லை. ஒரு நாள் இரவு, ''ஏம்பாட்டி! உமாபதிக்கே கல்யாணம் முடியப்போகுதே அப்புறம் ஏன் மூத்தவரான ராதாகிருஷ்ணன் கல்யாணம் பண்ணாமலே இருக்காரு? அவருக்கு என்ன? ''சாதாரணமாகவே கேட்பது போல் கேட்டாள்.

''சேச்சே! அவனுக்கென்ன சிங்கக்குட்டி, ரொம்பப் படிப்பான், எதையாவது ஆராய்ச்சி பண்ணிட்டே இருப்பான். ரொம்ப புத்திசாலிம்மா அவன். கவுரிசங்கர் கல்யாணம் முடிஞ்சதுமே இவனுக்கும் வரன் வந்தது. கொஞ்ச நாள் போகட்டும் போகட்டும்னு சொல்லி நாளைக் கடத்தினான். அப்புறமா தகப்பன்கிட்டே சொல்லி பொண்ணு பார்க்கச் சொன்னான். பிறகு என்ன ஆச்சுன்னே தெரியலம்மா. எனக்கு கல்யாணமே வேண்டாம். உமாபதிக்கு பாருங்கன்னு சொல்லிட்டான். நாங்க எல்லாருமே கெஞ்சிப் பார்த்தோம். நான் முடிவு எடுத்தா எடுத்தது தான். நீங்க ஒத்துக்கிட்டா இங்கேயே இருப்பேன். தொந்தரவு பண்ணினா எங்காவது கண் மறைவா போயிடுவேன்னு சொல்லிட்டான்மா. அதோட அந்தப் பேச்சை நாங்க விட்டுட்டோம். ஆனா பெத்த மனசு கேட்குமா? சரோஜா தான்



அப்பப்போ கண்ணீர் விடுவா. ஆனா அவன் அசைஞ்சு கொடுக்க மாட்டான். என்ன சாபமோ? '' என்ற பெருமூச்சோடு பாட்டி நிறுத்தி விட்டார்.

மீராவின் ஆவல் இன்னும் அதிகரித்தது. ராதாகிருஷ்ணனையே நேரில் பார்த்து கேட்டால் என்ன? எப்படிக் கேட்பது? அந்த வீட்டுக்கு போனால் கண்ணனின் முகத்தில் விழிக்க வேண்டுமே என்று பயந்து தான் வெளியே தலைகாட்டாமல் இருக்கிறாள். பிறகெப்படி அங்கு செல்வது? தலையை பிய்த்துக் கொண்டிருக்கும் போது தான் வேலையாள் வந்து நின்றான்.

'' அம்மா உங்களுக்கு போன் வந்திருக்கு. பெரிய ஐயா கூட்டிட்டு வரச் சொன்னாக. '' என்றான். துள்ளி எழுந்து ஓடினாள். அக்காவா இருக்குமோ? ஹாலிலேயே அனைவருமாய் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க தயங்கி வாசலிலேயே நின்றாள் மீரா.

'' இதோ வந்துட்டாப்பா மீரா. உம்பொண்ணு கிட்டயே பேசு. '' என்றவாறு மீராவை அழைத்து அவளிடம் ரிசீவரை கொடுத்து விட்டு நகர்ந்தார் சீதாராமன். பக்கத்திலேயே அமர்ந்திருந்த கண்ணனின் பார்வையிலிருந்து தப்ப முடியாமல் தவித்து மெலிதான குரலில் '' அப்பா '' என்றாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் போனில் வந்த செய்தியைக் கேட்டு மீரா தடுமாறவும் சட்டென எழுந்து அவளது தோள் பற்றி மெதுவாய் சோபாவில் அமர வைத்தான். கைகள் நடுங்கி ரிசீவரை நழுவவிட்டாள் மீரா. கப்பென அதைப் பற்றி காதில் வைத்தான்.

''சீதாராமன் கல்யாண சந்தோஷத்தில் இருப்பான். அதான் அவன் கிட்ட எதுவும் சொல்லல. நீயும் ஏதாவது காரணம் சொல்லிட்டு வந்திட்டு போம்மா. அக்கா நிலமை ரொம்ப மோசமா இருக்கு. உம்பேரைத் தான் முணுமுணுத்துக் கொண்டே இருக்கா. எனக்கு ரொம்ப பயம்மா இருக்கு வர்றியாம்மா? '' என்றார் அனந்தராமன் அழுகுரலில்.

'' ஒன்றும் வருத்தப்பட வேண்டாம் மாமா. மீரா இப்போதே கிளம்பிடுவாள். நானே அழைத்து வருகிறேன். வைக்கட்டுமா? '' மிகவும் மென்மையாய் பேசிவிட்டு ரிசீவரை அதனிடத்தில் வைத்தான்.

அதற்குள் உடல் மொத்தமாய் வியர்த்து விட அரை மயக்கத்திற்கு

''ஏம்பா பஸ்ல சில்லரை உள்ள ஆள் மட்டும் ஏறுப்பா!''

''அப்படின்னா உங்க வண்டியில வெறும் பிச்சைக்காரனை மட்டும் தான் ஏத்துவீங்களா?''

-பி.பாலாஜி
கோவிலாம்பூண்டி



27/05/2011 15:30

சென்றாள் மீரா. அனைவரும் ஒரு கணம் பதறிப்போக உமாபதி ஓட்டமாய் தண்ணீர் கொண்டு வந்து மீராவின் முகத்தில் தெளித்தாள். இந்த கலவரத்தில் ராதாகிருஷ்ணன் தன் அறையை விட்டு வெளியேறி ஓடிவந்தான் '' கண்ணா! என்னடா ஆச்சு? அனந்து என்ன சொன்னான்?'' பதறினார் சீதாராமன்.

அதற்குள் விழித்துக் கொண்ட மீரா, '' நான் உடனே போகணும். அக்காவைப் பார்க்கணும். '' குழந்தையாய் அழ ஆரம்பித்தாள். ''சூ ஏன் அழறே? சாதாரணக் காய்ச்சல். இதுக்கெல்லாமா அழுவாங்க?'' ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தான் கண்ணன்.

'' அப்பா இவங்க அக்காவுக்கு காய்ச்சலாம். இவளைப் பார்க்கணும்னு சொல்றாங்களாம். அதான் மாமா கூப்பிட்டாங்க. அதுக்குள்ள இத்தனை ரகளை பண்ணிட்டா. நான் போய் விட்டுட்டு வரட்டுமாப்பா?'' என்றான் பார்வையாலே மீராவை அடக்கியவாறே. அவளும் கட்டுப்பட்டு வாயைத் திறக்கவில்லை.

'' அனந்து ரொம்ப பயப்படுவானே! நானும் வர்றேம்மா. '' சீதாராமன் எழுந்தார். '' அப்பா வீட்ல பெரியவங்க நீங்க இல்லேன்னா எப்படி? இதோ இருக்கிறது மதுராந்தகம் தானே. நான் போய் விட்டுட்டு வர்றேன். நீங்க டென்ஷனாகாம இருங்க. போலாமா மீரா '' அவன் வார்த்தைக்காகவே காத்திருந்தது போல உடனே எழுந்தாள்.

'' கண்ணா நானும் வரட்டுமா ஏதாவது ஹெல்ப் தேவைப்படும் இல்லியா?'' எனக்கேட்ட ராதாகிருஷ்ணனை ஆச்சரியமாய் ஏறிட்டான். அவன் கண்களில் தெரிந்த தவிப்பு புதிதாய் இருந்தது. பொதுவாக எங்கு அழைத்தாலும் வராதவன், மறுப்பவன் இன்று தானாகவே கேட்கிறான் என்றால், ஒரு நிமிடம் யோசித்தவன் '' சரி வா. அப்ப நாங்க போயிட்டு வரோம். '' என்றவாறே சுவரில் மாட்டியிருந்த கார்ச் சாவியை எடுத்துக் கொண்டான். சீதாராமன் அருகில் வந்து கை நிறைய ரூபாய் நோட்டுகளை அள்ளி கண்ணனிடம் கொடுத்தார். ''செலவுக்கு வெச்சிக்க. பெரிய ஹாஸ்பிடலுக்கு வேணும்னாலும் கூட்டிட்டுப் போ. அனந்து ரொம்ப பயந்தவன். நீங்க ரெண்டு பேருமா பார்த்துக்கங்க. எதுனாலும் எனக்கு போன் பண்ணுங்க. மீரா அழறதைப் பார்த்ததுமே பயமாகிப் போச்சு. கிளம்புங்கப்பா. அம்மாடி தைரியமா போய்ட்டு வா.'' என்றார்.

'' மீரா என் நிச்சயதார்த்தம் நாளை மறுநாள். கண்டிப்பா வந்திரு என்ன? முடிஞ்சா அக்காவையும் அழைச்சிட்டு வந்திடு சரியா? ''

பாரதி சொல்ல கண்ணீரோடு தலையசைத்தாள் மீரா.

'' அம்மா மீரா! உங்க அக்கா உன்னை பார்க்கத்தான் காய்ச்சல் வந்து படுத்திட்டா போலிருக்கு. டாக்டரைப் பார்த்து ஊசியைப் போட்டுட்டு உங்க கூடவே நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டு வந்திடுங்க. நம்ம பேமிலி டாக்டர்கிட்ட காட்டி குணமாக்கிடலாம். உன்னை பார்த்தாலே சரியாகிடும்னு நினைக்கறேன். அப்பாகிட்ட சொல்லி எப்படியும் கூட்டிட்டு வந்திடு. கல்யாணம் வரைக்கும் இங்கயே இருக்கட்டும். தைரியமா போ ராதா பத்திரம் '' காரில் ஏறும் வரை கூடவே நின்றாள் சரோஜா. கண்ணீர் பார்வையை மறைக்க அமைதியாய் தலையசைத்து விட்டு காரில் ஏறிக் கொண்



டான்.

'' அம்மா! வந்திருக்கிறவங்களை கவனிங்க. கொஞ்சம் முன்ன பின்ன ஆனாலும் போன் பண்றேன் சரியா? ராதா ஏறிக்கோ. '' என்றவாறு ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து காரைக் கிளப்பினான் கண்ணன். அது வரை அடக்கி வைத்திருந்த விம்மல் தெறிக்க முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள் மீரா.

'' ஐயோ! மீரா ஏன் இப்படி அழுகிறாய்? ராதாவுக்கு என்ன தான் ஆயிற்று? என் ராதாவுக்கு என்ன ஆயிற்று?'' தன்னையும் மீறி ராதாகிருஷ்ணன் கூவிவிட மீராவும், கண்ணனும் திக்கென அதிர்ந்தனர்.

**அன்பே என்னை கனவில் கூட**
**மறக்கக் கூடாது - உயிரே**
**உன்னை உறங்கும் போதும்**
**பிரியக்கூடாது!**

## 8

“ராதா அண்ணா! என்ன சொன்னாய் இப்போது? உன் ராதாவா? அப்படியானால் ராதாவை உனக்குத் தெரியுமா? எப்படி எப்படி தெரியும் சொல்? ''

'' நான் அப்புறமா சொல்கிறேன். முதலில் நீ காரை ஏன் நிறுத்தினாய்? ராதாவுக்கு என்ன ஆயிற்று என்று சொல்லுங்கள். எனக்கு தலையே வெடித்து விடும் போலிருக்கிறது. மீரா நீயாவது சொல்லேன். ''

யாசிப்பவன் போல பின்னால் திரும்பிக் கேட்டான் ராதாகிருஷ்ணன்.

'' அக்கா சூஸைட் அட்டெம்ட் பண்ணியிருக்கா. '' சொல்லும் போதே கண்களில் நீர் நிற்காமல் வழிந்தது. அப்பட்டமாய் அதிர்ந்து போனான் ராதாகிருஷ்ணன். '' மை காட்! எதற்காக என்ன காரணத்திற்காக தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றாள். ஏன் மீரா? '' நெஞ்சம் படபடக்க கேட்டான். கண்ணன் அமைதியாக காரை கிளப்ப அது வேகமாக சீறியது.

'' அக்கா இப்ப கொஞ்ச நாளா நம்ம வீட்டுக்கு அடுத்த தெருவில் உள்ள நர்சரி ஸ்கூல்ல வேலை பாக்குறா. அப்படி போகும் போது தெருவில் இருக்கிற ஏதோ காலிப்பசங்க அசிங்கமா பேசி கலாட்டா பண்ணினாங்களாம். சும்மாவே அக்கா ரொம்ப பயந்தவள். எதற்கும் உடனே அழுதுடுவாள். அவனுங்க என்ன சொன்னாங்கன்னு தெரியல்ல. அப்பா வயலுக்கு வாங்கி வெச்சிருந்த மருந்தை குடிச்சிட்டாளாம். உடனே பார்த்தால் உயிருக்கு ஆபத்தில்லன்னு டாக்டர் சொல்லிட்டாராம். இன்னிக்குத்தான் நினைவு திரும்பியதாம். உடனே என்னைப் பார்க்க வேண்டும் என்று சொல்லியதால் அப்பா போன் பண்ணினாங்க. மத்ததை நேர்ல போய் பார்த்தாதான் தெரியும். பாவம் அக்கா! எத்தனை துயரம் அவளுக்கு? என்ன தவறு செய்தாள் அவள் [illegible]

27/05/2011 15:30

பவிக்கிறாள். விதவையாய் வாழ்வது எத்தனை கொடுமை? எத்தனை பார்வைகளை எத்தனை சொற்களை தாங்க வேண்டியுள்ளது? பாவம் செய்தவன் அவன். பேசாமல் போய் சேர்ந்து விட்டான். ஆனால் என் அக்கா அவனுக்கு கழுத்தை நீட்டிய ஒரே பாவத்திற்கு தினம் தினம் தீக்கு ளிக்கிறாளே!'' மீண்டும் அழ ஆரம்பித்தாள் மீரா.

பட்பட்டென்று நெற்றியில் அறைந்து கொண்டான் ராதாகிருஷ்ணன். ''பாவி நானும் பாவி தான். ராதாவின் இந்த நிலைக்கு நானும் ஒரு காரண மாகி விட்டேனே.''

வெடுக்கென நிமிர்ந்தாள் மீரா, ''என்ன நீங்களும் ஒரு காரணமா? அப்படீன்னா நீங்க யாரு அந்த முகிலனோட பிரண்டா, சொந்தமா சொல் லுங்க சார் யார் நீங்க?'' கோபமாய் குரலை உயர்த்தினாள். ''இல்ல மீரா! அந்த முகிலன் யாருன்னே எனக்குத் தெரியாது. அவனை நான் பார்த்தது கூட கிடையாது.'' ''பின்னே'' ஒரு கணம் அமைதியானான். ''கண்ணா! நாம போக இன்னும் எவ்வளவு நேரமாகும்?''

''இன்னும் வேளச்சேரி வரல்ல. எப்படியும் மதுராந்தகம் போய் சேர ஒரு மணி நேரம் ஆகும்.'' என்றான் சாலையில் கவனத்தை செலுத்திய வாறே.

''இந்த நேரம் போதும்.'' என்றவாறு சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். ''மீரா! நான் உங்க அக்காவை முதன் முதலா சந்திச் சது உங்க வீட்டு வாசல்ல தான். அப்போ நான் எம்.பில். படிச்சிட்டிருந்த நேரம். ஒரு முக்கியமான டீச் ஓர்க்குக்காக திண்டிவனம் வரை போக வேண்டியிருந்தது. நான் காரை எடுத்திட்டு கிளம்பும் போது தான் அப்பா வந்து தன்னோட கார் சர்வீசுக்கு விட்டிருக்கிறதா சொல்லி போற வழி யில என்னை என் பிரண்ட் வீட்ல ட்ராப் பண்ணிட்டு போடான்னு சொன் னாங்க. நானும் வந்தேன். அப்போதான் முதன் முறையா உங்க அக்கா வைப் பார்த்தேன்.'' சொல்லும் போதே அவன் முகம் பூவாய் மலர்ந்தது. கண்ணன் தன் அண்ணனை விழி விரிய பார்த்தான்.

''அப்பாவை விட்டுட்டு காரை திருப்பும் போது தான் அவள் வெளியே வந்து என் தந்தையை சிரித்த முகமாய் உள்ளே அழைத்துச் சென் றாள். அந்த முகமும், சிரிப்பும் இன்னமும் என் மனதை விட்டு மறை யவே இல்லை. ஒரு சிலரை பார்த்த உடனே நமக்கு ரொம்ப நாள் பழகிய மாதிரி பீலிங்ஸ் வரும் இல்லையா? எனக்கும் அப்படித்தான் இருந்தது. யூ நோ நான் படிச்சது எல்லாமே ஆண்கள் காலேஜ் தான். பெண் தோழி கள் என்று யாருமே எனக்கு கிடையாது. யாரிடமும் பேசியது கூட இல்லை. ஆனால் உன் அக்காவின் உருவம் ஏனோ மீண்டும் பார்க்க ஆவலைத் தூண் டியது. அன்றிலிருந்து அடிக்கடி அப்பாவை நானே அழைத்துச் செல்ல ஆரம்பித்தேன். ஒரு முறை கூட உங்கள் வீட்டிற்குள் வரமாட்டேன். அப் பாவும் அழைத்ததில்லை.

அப்புறம் உன் அக்கா படித்த கல்லூரியை கண்டுபிடித்து வாரம் இரு முறை எப்படியும் அங்கு ஆஜராகிவிடுவேன். ஆனால் இதில் ஒருமுறை கூட உன் அக்கா என்னை பார்க்கவேயில்லை. என்னை மட்டுமல்ல, அவள் தலைநிமிர்ந்து யாரையும் பார்த்து நான் பார்த்ததில்லை. அந்த



அமைதியும் அடக்கமும் தான் அவ ளிடம் என்னை சரணாகதி அடை யவைத்தது. இந்த நிலையில் என் வீட்டில் எனக்கு பெண் தேட ஆரம் பித்தார்கள். சுபத்ரா அண்ணி தன் தங்கையை எப்படியும் எனக்கு கட்டி வைக்க வேண்டும் என ஒற் றைக்காலில் நின்றார்கள். நான் ராதாவின் படிப்பு முடியும் வரை தள்ளிப் போட்டுக் கொண்டே வந் தேன். என்ன தான் அவளை விரும் பினாலும் குனிந்த தலை நிமிராமல் வீடு வரை செல்லும் ஒரு பெண்ணை வழி மறித்து நான் உன்னை விரும்புகிறேன் என்று சொல்ல எனக்கு மனம் வர வில்லை. அது அவளுக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்திவிடக்கூடாது என்று மிகவும் கவனமாகவே இருந்தேன். படிப்பு முடிந்த பிறகு மெதுவாய் அம்மாவிடம் சொன் னேன். அம்மாவுக்கு வெகு ஆனந் தம். உடனே அப்பாவிடம் சொல்லி அப்பாவும் உன் அப்பாவிடம் வந்து பேசியிருக்கிறார்கள். பட்காலம் கடந்து விட்டது.'' பெருமூச்சு விட்டான்.



''டாக்டர் உங்களுக்கு பிடிச்ச டயலாக் ஒன்று சொல்லுங்க?''

''இன்னிக்கு செத்தா நாளைக்கு பால்.''

-பி.பாலாஜி
கோவிலாம்பூண்டி

''ஏன் என்ன ஆச்சு. மீராவின் அப்பா என்ன சொன்னார்'' கண்ணன் மீராவை விட ஆர்வமாய் கேட்டான். மீராவும் ஆர்வம் கொப்பளிக்க சீட் டின் முனைக்கே வந்து ராதாகிருஷ்ணனின் முகத்தை பார்த்தாள்.

''ப்ச்... நான் தாமதிக்காமல் பெற்றவர்களிடம் சொல்லியிருக்க வேண்டும். என் பொறுமையால் என் வாழ்க்கையே வெறுமையாகி விட் டது. நம் அப்பா கேட்ட போது அனந்தராமன் மாமா உன் அந்தஸ்து என்ன என் அந்தஸ்து என்ன? வேண்டாம்ப்பா. நான் ஏழைக்கேத்த என்னுருண் டையா ஒரு மாப்பிள்ளை பார்த்து முடிவும் பண்ணிட்டேன் பையனை. சர்க்கரை ஆலையில மானேஜரா இருக்கான். பொண்ணு படிப்பு முடியட் டும்னு தான் இருந்தேன். அடுத்த மாசம் கல்யாணம். தேதி கூட குறிச்சாச் சுன்னு சொல்லிட்டாராம்.

அப்பா வந்து சொன்னப்போ நான் அப்படியே நொறுங்கிட்டேன். இயல்பு நிலைக்கு மீளமுடியாம தவிச்சேன். அப்புறம் ராதாவோட கல்யா ணமும் நல்லபடியா முடிஞ்சது. சரி அவளாவது நல்லா இருக்கட்டும்னு முடிவு பண்ணி மேலே ஏதாவது படிக்கலாம்னு முடிவு பண்ணினப்போ அடுத்த அடி ஒரு வருஷம் கூட வாழாம விதவையாகிட்டான்னு அப்பா சொன்னப்போ துடிச்சுப்போயிட்டேன்.

நாம கொஞ்சம் சீக்கிரமா மு... லை

27/05/2011 15:30

ஆளாகியிருக்கமாட்டாளேன்னு எம்மனசாட்சி என்னை கொல்ல ஆரம்பிச்சது. ராதாவை மறக்கவும் முடியாம குற்ற உணர்ச்சியும் சேர்ந்து என்னை வதைத்தது. அதனால தான் கல்யாணமே வேண்டாம்னு ஒரே பிடிவாதமாய் மறுத்துவிட்டேன். என்னால் எப்படி இன்னொரு பெண்ணுடன் மனம் ஒன்றி வாழ முடியும்? இது புரியாத சுபத்ரா அண்ணி அன்று முதல் என்னோடு பேசுவதே இல்லை. அவர்கள் தங்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற கோபம் அவர்களுக்கு. என் வேதனை மற்றவர் கண்களுக்கு தெரியக்கூடாது என்று தான் முழுநேரம் புத்தகத்திற்குள்ளேயே முகம் புதைத்துக் கொள்வேன்.

அப்படியும் அன்று பூஜை நடந்த போது மாடிக்கு வந்த மீராவை பார்த்து அரண்டு போய்விட்டேன். ராதாவோ என்று ஒரு கணம் தடுமாறி விட்டேன். '' கண்ணனின் பார்வை மீராவிடம் மன்னிப்பு கோரியது. அதை கவனியாதது போல் ராதாகிருஷ்ணனைப் பார்த்து ''ஏன் சார் உங்க மனதில் இன்னமும் ராதா இருக்கிறாளா? '' என்றாள்.

'' இது என்ன கேள்வி. ராதா இல்லாமலா என் ராதாவிற்கு என்ன ஆயிற்று என்று கேட்டுக் கொண்டு முதல் ஆளாய் ஓடிவந்திருக்கிறான்?'' என்றான் கண்ணன் புன்முறுவலுடன்.

> **நீதானே எப்போதும்-எந்தன்**
> **கண்களில் வாழுகின்றாய்!**
> **அழுகின்றேன் இப்போது நீ**
> **என் கண்ணீர் ஆகின்றாய்...**


## 9

பத்து நாட்களுக்குள் ராதா துரும்பாய் இளைத்திருந்தாள். கண்கள் மூடியிருக்க உதடுகள் மட்டும் லேசாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. கட்டிலின் ஓரமாய் கண்ணீரோடு நின்ற யசோதாவை கட்டிக் கொண்டாள் மீரா.

'' என்னம்மா இது? ஏம்மா இப்படி உருக்குலைந்து போய் கிடக்கிறாள். என்ன கொடுமை? கடவுளே '' தாயைக் கட்டிக் கொண்டு அரற்றினாள். கண்ணன் மெல்லிய குரலில் அனந்தராமனிடம் எதையோ விசாரித்துக் கொண்டிருக்க, ராதாகிருஷ்ணன் கட்டிலின் அருகே ஆடாமல் அசையாமல் இமைக்கவும் மறந்து உயிரற்ற சடலமாய் நின்றான்.

அவன் கண்களில் நீர் திரண்டு தேங்கி நின்று பார்வையை மசமசப்பாக்கியது. உயிரோவியமாய் நடமாடிய தேவதை இன்று உலர்ந்த சருகாய் வாடிய சரமாய் துவண்டு கிடந்ததை காண அவனால் சகிக்க முடியவில்லை. பிறைநெற்றி வெறுமையாய் காட்சியளித்தது முகத்தில் அறைந்தாற் போலிருந்தது. அதில் துளி குங்குமம் வைத்துவிட அவன் கைகள் துடித்தது. பால் போன்ற நிலவு முகத்தை கையில் ஏந்தி நானிருக்கிறேன்





உனக்கு என ஆறுதல் சொல்ல மனம் தவித்தது.

ராதாவிடம் லேசாய் அசைவு தெரிய அனைவரும் கட்டிலை சூழ்ந்த னர். ''அக்கா நான் மீரா வந்திருக்கிறேன். கண்ணை திற அக்கா. '' மீரா வின் அழுகுரலில் உடனே கண்ணை திறந்தாள் ராதா. தங்கையின் கையைப் பற்றிக் கொண்டாள். ''வந்துட்டாயா? மீரா. நான் இனிமே வேலைக்கு போக மாட்டேன். அவனுங்க அங்கேயே தான் தினமும் கூடிக் கிடக்கிறானுங்க. என்னை ரொம்பவும் அசிங்க அசிங்கமா பேசி என் கையைப் புடிச்சு இழுத்து....'' மேலே பேச முடியாமல் தேம்பி அழுதாள். ராதாகிருஷ்ணனின் கைகள் இறுகி நரம்புகள் முறுக்கேறியது. கண்கள் ரத் தமாய் சிவந்தது. விரைத்த அவன் உடலைக் கண்ட கண்ணன் இதமாய் தோளில் அழுத்தி பொறுமையாய் இருக்கச் சொன்னான்.

''ராதா உங்களால் எழுந்திருக்க முடியுமா? அவனுங்கள எங்களுக்கு அடையாளம் காட்ட முடியுமா? '' பதமாய் கேட்ட கண்ணனை பார்த்து மேலும் மிரண்டாள்.

குழப்பமாய் பயமாய் தங்கையைப் பார்க்க அக்காவை அணைத்துக் கொண்ட மீரா '' அக்கா இவங்க நம்ம சீதாராமன் மாமா பிள்ளைங்க. இது ராதாகிருஷ்ணன். இது கமலக்கண்ணன். இவங்க தான் என்னை கூட் டிட்டு வந்தாங்க. '' என்றாள்.

'' இந்த அறிமுகம் எல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம். ராதா எழுந் திரு. உன்னால முடியும். எழுந்து கார் வரை வா. கார்ல போய் அவ னுங்கள கொஞ்சம் கவனிச்சுட்டு வரலாம். கமான் எழுந்திரு. அவ னுங்கள காட்டு.'' இத்தனை உரி மையாய் முகம் முழுக்க கோபக்கன லாய் நின்ற ராதாகிருஷ்ணனைப் பார்த்து மேலும் பயந்தாள்.



''என்னாங்க இது லேடீஸ் மாதிரி தொடர் பார்த்துட்டு இப்படி அழுவுறீங்க''

''சும்மா இருடி ஓடுறது நம்ம கல்யாண கேசட்''

-பி.பாலாஜி
கோவிலாம்பூண்டி

'' பார்த்தியா இந்த பயம் தான் அவனுங்களுக்கு இத்தனை தைரி யத்தைக் கொடுத்திருக்கு. ஏன் பயப் படுறே? பூனையைப் பாத்திருக்கி றியா? அதை பார்த்தாலே நாய் விரட் டும். ஆனா பூனை நின்று கை, கால் நகங்களை விரித்து சிலிர்த்துக் கொண்டு நாயை முறைத்தால் நாய் வந்த வழியே ஓடிடும். எதுவுமே ஓடும் போது தான் துரத்தும். நின்று திரும்பிப் பார்த்தால் மிரண்டுவி டும். நீ மட்டும் கொஞ்சம் தைரி யமா ''யாருடா நீங்க வேலை வெட்டி இல்லாம அலையுற



பொறம்போக்கு. நீங்க என்னடா என்னப் பத்தி பேசுறீங்க, தைரியம் இருந்தா கிட்ட வாங்கடான்னு'' குரலை உயர்த்தி பேசியிருந்தா எவனா வது உங்கிட்ட நெருங்கியிருப்பானா? உன் பயம் தான் உன்னோட முதல் எதிரி. இனிமே தேவையில்லாம எதற்கும் பயப்படக்கூடாது. எழுந்திரு வா. அவனுங்களை காட்டு.'' மந்திரத்திற்கு கட்டுப்பட்டாற் போல் எழுந் தாள். கண்களில் புது தெளிவு வந்தது. கட்டிலை விட்டு இறங்கும் போது தள்ளாடினாள். நெருங்கிய மீராவை கண்ணன் தடுக்க, சட்டென அவளை தாங்கி நிறுத்தி வைத்தான் ராதாகிருஷ்ணன். ராதாவின் உடல் அதிர்ந்தது. கால்கள் நடக்க முடியாமல் துவள, அவளது கையை தன் தோளில் பற்றிக் கொள்ளச் செய்து கைத்தாங்கலாக காரை நோக்கி அழைத்துச் சென்றான். ''கண்ணா வா. அவனுங்க பொண்ணடை நிமிர்த்திடுவோம். இனிமேல் எந்த பெண்ணையும் வாழ்நாள் முழுக்க கிண்டல் பண்ண முடியாம செய்ய ணும். ''

'' நிச்சயமாய் அதைவிட வேறென்ன வேலை '' என்றவாறு கண்ண னும் பின்னே வர, '' தம்பி நமக்கேம்ப்பா இந்த வம்பு! நம்ம பொண்ணை வீட்டோட வச்சா இனிமே பிரச்சனை வராது. நீங்க போக வேண் டாம்ப்பா. சீதாராமனுக்கு தெரிஞ்சா வருத்தப்படுவான்.''

அமைதியாய் நின்று கொண்டிருந்த அனந்தராமன் பதறி தடுத்தார்.

'' இல்ல மாமா! அவனுங்கள சும்மா விட்டாத்தான் அப்பா கோபப்ப டுவாங்க. நீங்க வீட்ல இருங்க. நாங்க பார்த்திட்டு வந்திடுறோம். '' என்ற வாறே வெளியேறி கார்க்கதவை திறந்து விட்டான். ராதாவை மெதுவாய் உள்ளே அமர வைத்து அவளருகிலேயே ராதாகிருஷ்ணனும் அமர்ந்து கொள்ள கண்ணனிடம் ஓடி வந்தாள் மீரா. '' அக்கா பயப்படுவாளே நானும் வரவா? ''

'' உன் அக்கா பயம் தெளியத்தான் அவளை கூட்டிட்டுப் போறோம். மத்தபடி நாங்க தனியா போய் விசாரிக்க ரொம்ப நேரம் ஆகாது. ராதா கண் முன்னாலே அவனுங்களை புரட்டிப்போடணும். நீ போம்மா. கண்ணா நீ காரெடு. ராதா நீ வழி சொல்லு. '' என்றான் ராதாகிருஷ்ணன்.

ராதாவின் பயம் நன்றாக தெளிந்து விட்டிருக்க ''ரொம்ப தூரமெல் லாம் இல்லை. அதோ அந்த சந்து தான். அது வழியா போனா வரிசையா ஆலமரம் வரும். அங்க தான் சீட்டு விளையாடிட்டு இருப்பாங்க. '' என் றாள்.

இரண்டே நிமிடத்தில் அந்த ஆலமரத்தை அடைந்தது கார். கண்ணா டியை இறக்கி விட்டான் கண்ணன். '' அதோ அவனுங்க தான். '' சொல் லும் போதே குரல் நடுங்கியது. ''ஸ்டெடி ஸ்டெடி ஏன் பயப்படுறே இறங்கி அவனுங்க கிட்ட போ. நாங்க வர்றோம். '' என்றவனை பயமாய் பார்த்தாள்.

''நானா''

'' போம்மா அதான் நாங்க இருக்கோம்ல. தைரியமா போ. '' அவளது கையைப் பற்றி சற்று அழுத்தி தைரியமூட்டி அனுப்பினான். கதவை திறந்து இறங்கி மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.

இருவரும் தயாராய் இருக்க ''இதோ பாருடா ராட்சசரை, லீவு நாள்ல



27/05/2011 15:31

கூட நம்மள பார்க்காம இருக்க முடியல போல. நம்ம முகராசி அப்படி. என்னம்மா நாங்க சொன்னத நல்லா யோசிச்சு பார்த்தியா. பாவம் நீயும் சின்ன வயசு தானே. கரும்புக்காட்டுக்கு போலாமா, இல்ல கம்மாக்க ரைக்கு போலாமா?'' என்றான் பனியனும், லுங்கியுமாய் இருந்தவன்.

'' முதல்ல ஜி.ஹெச்சுக்கு போறியா இல்ல மார்ச்சுவரிக்கு போறியா?'' என்றவாறு முஷ்டியை மடக்கிய ராதாகிருஷ்ணனைப் பார்த்ததும் வாயி லிருந்த பீடியை எடுத்து விட்டான் அவன் '' ஏய் என்னம்மா அடியாள செட்டப் பண்ணி கூட்டி வந்திருக்கியா '' பயமாய் உளறினான்.

'' இங்க பேசுடா பொறம்போக்கு நாயே. ஒரு பொண்ணு தனியா வந்தா கம்மங்காட்டுக்கு கூப்பிடுவியோ? உம் அம்மாவோ, சகோதரியோ புருஷனை இழந்திட்டா அப்படி அனுப்பி வைப்பியா சொல்லுடா நாயே'' முகத்தில் ஓங்கி குத்து விட்டான். மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது. அதற்குள் மற்றவர்கள் ஓட ஆரம்பிக்க கண்ணன் நாலு உதை போட்டு துவைத்து எடுத்து விட்டான். '' உன் கையைப் பிடிச்சது யார் ராதா?'' ராதாவின் விரல் நீட்டிய திசையில் இருந்தவன், '' சாமி தெரியாம தப்பு பண்ணிட்டேன். இனிமே பண்ண மாட்டேன். என்னை விட்டுடுங்க. '' காலில் விழுந்தான்.

'' அதை எப்படி நாங்க நம்ப முடியும்? அதனால ஒரு அடையாளம் பண்ணி வெச்சாத்தான் வேற எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் கையைப் பிடிச்சு இழுக்கத் தோணாது. என்ன கண்ணா நான் சொல்றது சரியா? ''

'' மிகமிக சரி. மார்க் பண்ணிடு. '' கண்ணன் சாதாரணமாக சொல்ல அவன் பயந்து பின்வாங்கினான். கப்பென அவன் கையைப் பற்றி பின்பு றமாய் திருப்பி முறுக்க மலுக்கென்று எலும்பு முறிந்ததில் வீறிட்டு அல றினான் அவன்.

''போ, போய் புத்தூர் கட்டு போடு. இனி எவனையாவது இந்த இடத் தில் பார்த்தேன் ஸ்டெயிட்டா மார்ச்சுவரி தான். ஓடுங்கடா. ''

ராதாகிருஷ்ணனின் அதட்டலில் தடுக்கி விழுந்து எழுந்து ஓடினர். இருவரும் சிரித்துக் கொண்டே காருக்கு திரும்ப, தன் கண் முன்னே

''கபாலி எப்பவும் தொழில் துரோகம் மட்டும் செய்ய மாட்டான் எப்படி?''

''போலீஸ்க்காரங்க வீடு, அமைச்சர்கள் வீடு இங்கெல்லாம் மட்டும் திருடவே மாட்டான். ''

-பி.பாலாஜி
கோவிலாம்பூண்டி





நடந்த சண்டையில் பிரமித்துப் போய் நின்றாள் ராதா. தனக்காகவா இங்கே சண்டை நடக்கிறது? அப்படியானால் நமக்கு ஒன்று என்றால் தட்டிக்கேட் கவும் ஆள் இருக்கிறது என்ற எண்ணமே அவளை தைரியமடைய வைத் தது. பயம் மறைந்து முகத்தில் புன்னகை அரும்பியது. தன்னிடம் அத் தனை வீரமாய் வசனம் பேசியவர்கள் விழுந்தடித்து ஓடியதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

''ம் எப்படி எங்க பைட் ? '' புன்னகையோடு கேட்டவர்களை சந்தோ ஷமாய் நிமிர்ந்து பார்த்து சிரித்தாள். '' நிஜமாவே சூப்பர். நான் சினிமால தான் இந்த மாதிரி சண்டையெல்லாம் பார்த்திருக்கேன். ''

'' ஆனால் இது கதையல்ல நிஜம். சரி காரில் ஏறுங்கள் வீட்டில் எல் லாரும் பதறிப்போய் இருப்பார்கள். அவர்களிடம் போய் சொல்லி அவர் களையும் உங்களைப் போலவே சிரிக்க வைக்கலாம். '' என்றவாறே காரில் ஏறினான் கண்ணன்.

மீண்டும் தன் அருகில் நெருக்கமாய் அமர்ந்து கொண்டு வந்தவனை தயக்கமும், கூச்சமுமாய் பார்த்தாள். வரும்போது இருந்த பயம் இப்போது முற்றிலுமாய் மறைந்து போயிருந்தது. கொஞ்சமாய் விலகி அமர்ந்தாள். அவளது விலகல் உணர்ந்ததும் புன்னகையோடு திரும்பிக் கொண்டான். அதற்குள் வீடு வந்து விட வாசலிலேயே மூவருமாய் பதட்டமாய் நின்றி ருக்க, உற்சாகமாய் இறங்கினர்.

'' தம்பி உங்களுக்கு ஒன்னும் ஆகலையே. கொஞ்ச நேரம் என் உசுரே எங்கிட்ட இல்லப்பா. எதுவும் பிரச்சனை இல்லையே? '' பரபரப்பாய் கேட்டவரை பார்த்து சிரித்தாள் ராதா.

'' எம்ப்பா பயப்படுறீங்க. இவங்க ரொம்ப பலசாலிங்க. நல்ல பைட் பண்ணினாங்க. அந்த பொறுக்கி நாய்ங்க ஓடியே போய்ட்டாங்க. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா. ''

'' ராதாவா இது எப்படி? என்ன மாயம் செய்தீர்கள்? '' வாயைப் பிளந் தாள் மீரா.

'' அதான் ராதாண்ணா. சரி கொஞ்சம் காபி கிடைக்குமா? ''

பரிதாபமாய் கேட்ட கண்ணனை அவசரமாய் உள்ளே அழைத்துச் சென்றார் அனந்தராமன்.

**ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும்**
**உனைச் சேருவேன்**
**வேறாரும் நுழையாமல் மனவாசல்**
**தனை மூடுவேன்!**

10

**“ மா**மா! நான் கிளம்பட்டுமா? '' கண்ணன் புறப்பட ஆயத்தமா னான். ''என்னப்பா அவசரம் இருட் 27/05/2011 15:31 போலாமே. '' என்றாள் யசோதா.

''இல்ல அத்தை எல்லா வேலையும் அப்படியே விட்டுட்டு வந்தேன். மத்த வேலையை கூட அப்பாவும், அண்ணனும் பார்த்துப்பாங்க. ஆனா நாளை மார்னிங் பிளைட்ல கவுதமோட பேரண்ட்ஸ் வர்றாங்க. எப்படியும் நான் இருந்தே ஆகணும். இன்னொரு நாள் டயம் கிடைக்கும் போது வர்றேன்.

நாளைக்கு காலையிலே எல்லாரும் கிளம்பி வந்துடுங்க. அண்ணன் இன்னிக்கு இங்க இருக்கட்டும். நான் போயிட்டு காரை காலையிலே அனுப்பி வைக்கிறேன். ரெடியா இருங்க. மாமா மறுபடியும் சொல்றேன். கண்டிப்பா ராதா அண்ணியையும் அழைச்சிட்டு வாங்க. நாளை மறுநாள் பாரதிக்கு நிச்சயதார்த்தம். அது முடிஞ்ச பிறகு நான் அம்மா அப்பாகிட்ட பேசுறேன். அந்த சமயம் நீங்களும் இருந்தா நல்லா இருக்கும். அண்ணிக்கும் பயம் போய் கொஞ்சம் தைரியம் வரும். இந்தாங்க இந்த செல்போன் உங்ககிட்டேயே இருக்கட்டும். எதுவும் அவசரம்னா உடனே எனக்கு போன் போடுங்க. என் நம்பர் அப்பா நம்பர் எல்லாம் இதில பதிவாகி இருக்கு. அண்ணா எல்லாம் தெளிவா சொல்லித் தருவான். '' என்றவாறே அவர் கையில் அந்த சிறிய செல்போனை திணித்தான்.

'' எனக்கெதுக்கு தம்பி இதெல்லாம்? '' சங்கோஜமாய் மறுத்தார்.

'' என்ன மாமா உங்க வீட்லயும் போன் இல்ல. வெளியே தான போய் பேசறீங்க. இது கையில இருந்தா ஒரு பட்டனைத் தட்டினா போதுமே. மறுக்காதீங்க. உங்க நண்பரோடயும் பேசலாம். அங்கே வந்து வாழப்போகும் உங்க பொண்ணுங்க கூடவும் பேசலாம். '' என்றான். தவிரவும் செல்போன் இல்லாத ஆள் யாரு. அவசியம் தானே.

'' தம்பி இதெல்லாம் சரியா வருமா? '' தடுமாறினார்.

'' கண்டிப்பா எல்லாம் சரியா வரும். நம்புங்க சரி நான் வரட்டுமா?''

அதற்குள் யசோதாவும், அனந்தராமனும் கையில் இரண்டு பையுடன் வந்தனர். '' தம்பி இதுல நம்ம தோட்டத்தில் விளைஞ்ச பழங்களும் யசோதா செய்த ரவா லட்டும் இருக்குது. அப்பாவுக்கு ரொம்ப பிடிக்கும். கார்ல வெக்கட்டுமா? '' '' ஏன் மாமா இதெல்லாம்? '' மறுத்தான்.

'' என் ஆசைக்குத் தம்பி '' '' சரி வையுங்க. நான் அண்ணன் கிட்ட சொல்லிட்டு வர்றேன். '' என்றவாறு முன்னறைக்கு வந்தான். ஜன்னலோரம் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தனர் இருவரும்.

'' பாரு ராதா கணவனை இழந்தா பொட்டு வைக்கக்கூடாதுன்னு யார் சொன்னா பெரியதாய் கூட வேண்டாம், சின்னதாய் வைத்துக் கொள்ள வேண்டும் சரியா. அப்போ தான் வெளியில போகும் போது மத்தவங்க கண்ணுக்கு விகல்பமா தெரியாது. கொஞ்சம் நல்லதா உடுத்திக்கலாம் தப்பில்லை. வளையல் கூட போடாம இருக்கியே, ரொம்ப தப்பு. எங்க பாட்டிக்கு எழுபது வயசாச்சு. ஆனா இன்னும் ரெண்டு வளையல் போட்டிருப்பாங்க. தெரியுமா? இதென்ன கம்மல் கடுகு மாதிரி. முதல்ல இதை மாற்றணும். கொஞ்சம் பெரியதாய் அல்லது சிறிய தொங்கல் போடலாம் என்ன? இன்னும் உன்னை நிறைய மாத்தணும். எங்க வீட்டுக்கு வா. நீயே மாறிடுவே. எங்க பாட்டி, அம்மா, அப்பா எல்லாருக்கும் உன்னை ரொம்ப பிடிக்கும். பாரதி இருக்காளே உன்னை விடவே மாட்டாள்.''

ராதாகிருஷ்ணன் பேசிக்கொண்டே போக, ராதா மறுப்போ, சலிப்போ காட்டாமல் லயித்திருந்தாள். இதில் ஒன்றை தான் சொல்லியிருந்தாலும் அக்கா ருத்ரதாண்டவம் ஆடி இருப்பாள். இன்றானால் மகுடிக்கு கட்டப் பட்ட நாகம் போல் மயங்கிக் கிடக்கிறாளே. '' தன் மீதே கோபம் வந்தது மீராவுக்கு.

'' அண்ணா போதும். அவர்களை ஒரேயடியாக விரட்டாதே. எல்லாம் நம் வீட்டில் வந்து மாற்றிக்கொள்ளலாம். நான் கிளம்புகிறேன். வரட்டுமா?'' என்றான் ராதாவைப் பார்த்து.

அனைவரும் விடை கொடுக்க பார்வையால் மீராவிடம் விடை பெற்று கிளம்பினான்.

இருளைக் கண்டு பயமென்ன மானே
இனிமேல் இங்கு வளர்பிறை தானே
உன்னோடு நான் சேர
தடையும் இல்லை இனி ஒரு பிரிவுமில்லை.

II

'' சொல்லுங்கப்பா உங்க முடிவுல தான் எங்க வாழ்க்கை இருக்கு. அம்மா உங்களையும் சேர்த்து தான் சொல்றேன். எதையும் உங்ககிட்ட மறைக்கல்ல. ஏற்கனவே உங்களுக்கு கொஞ்சம் தெரியுமில்லையா? சரி உங்க முடிவு என்ன? ''

கண்ணனின் வார்த்தைகளை கிரகித்துக் கொள்ள முடியாமல் இருந்தனர் பாட்டியும், பெற்றவர்களும்.

விதவைப் பொண்ணுக்கு வாழ்வு கொடுப்பது நல்ல விஷயம் தான். ஆனால் மற்றவர்கள், உறவினர்கள் இதை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? கூட்டுக் குடும்பத்தில் யாராவது ஒருவர் ஒரு வார்த்தை அந்தப் பெண் மனம் புண்படும் படி பேசிவிட்டால் அதைப் போல் ஒரு பாவம் உண்டா?

கணவனை இழந்தது ஒன்றும் அவள் தவறல்லவே. காலத்தின் கட்டாயம். பாவம் தான் அந்த பெண். நாம் ஏற்றுக்கொண்டால் மட்டும் போதுமா? மற்ற பிள்ளைகள், மருமகன்கள் அவளை எப்படி ஏற்றுக்கொள்வார்களோ தெரியவில்லையே. -இது சரோஜாவின் கவலை.

பாட்டிதான் வாய் திறந்தார். ''இப்ப என்ன கேட்டான் அவன். என் இப்படி பேயறைஞ்ச மாதிரி இருக்கீங்க. அவன் சொன்னதுல எந்தத்தப்பும் இல்லை. பாவம்டா அந்தப்புள்ளை. வாழ வேண்டிய பச்சைமண். உம்பொண்டாட்டி தான் பெண் பி... கேன் யோசிக்கிற. தயங்காம ஒத்து... றாலும் பாட்டி புதுமைப் பெண்ணாகவே தோன்றினார்.

''அதில்லம்மா! சரோஜாவைப் பத்தி எனக்கு தெரியாதா. நான்

27/05/2011 15:32

அதைப் பத்தி கவலைப்படல்லம்மா. நம்ம புள்ளைங்க மருமகங்க எப்படி எடுத்துப்பாங்க. அதுவும் சுபத்ராவைப்பத்தி கேட்கவே வேண்டாம்.'' என்றார் வருத்தமாக.

''அம்மா! நாளை அவர்கள் வந்து பாட்டியோடு தங்கட்டும். அப்பாவின் நண்பர் குடும்பம் என்ற வரையில் மற்றவர்களுக்கு தெரியட்டும். மற்ற விசயங்கள் உமாபதி திருமணம் முடிந்த பிறகு தெரிவித்துக் கொள்ளலாம். அதுவும் ராதாவின் திருமண வாழ்க்கை குறுகிய காலம் மட்டுமே நடந்து முடிந்த சம்பவம்.

அதை நாம் இங்கு மற்றவர்களிடம் சொல்லிக் காட்ட அவசியமில்லை. இவர் எங்கள் குடும்ப நண்பர். இவர் மகள்களைத் தான் என் பிள்ளைக்கு பேசியிருக்கிறோம் என்று சொன்னால் போதும். மற்றபடி நாமே ஏன் விமர்சனம் தேடிக் கொள்ள வேண்டும். என்னப்பா சொல் நீங்க.''- கண்ணனின் வார்த்தையில் இருந்த உண்மையும் கருத்தும் அனைவரையும் தலையசைக்க வைத்தது.

''அதை விட முக்கியம் நீங்க யாரும் தப்பித் தவறிக் கூட அவங்க கடந்த காலத்தைப் பத்தி பேசக்கூடாது. அவங்களே அதை மறக்கணும்னு தான் இங்க வரச் சொல்லியிருக்கோம். அப்படி மறந்தாத்தான் நம்ம அண்ணனோட மனமொத்து அவங்களால வாழ முடியும். அப்பத்தான் அண்ணனும் சந்தோஷமா வாழ்வான். இதை மனசுல வெச்சுக்கங்க. அம்மா இப்போதைக்கு இது நமக்கு மட்டும் தெரிஞ்சா போதும். மத்தவங்களுக்கு ஏன் நம்ம அண்ணன்களுக்கு கூட உமாபதி கல்யாணம் முடிஞ்சப்புறம் சொல்லிக்கலாம். சரியா''- என்றான்.

''சரிப்பா. நீ சொன்னா சரியாத் தான் இருக்கும். சரி நீ போய்ப்படு. மணி நாலாகப்போகுது. காலையில நீ ஏர்போர்ட்டுக்கு போகணுமே கொஞ்ச நேரமாவது படுப்பா. நாளைக்கு நிறைய வேலை இருக்குது. அத்தை நீங்களும் படுங்க.''- என்றவாறு எழுந்தாள் சரோஜா.

அன்னையை நெருங்கி வந்து கண்ணன் தன் தாயின் முகத்தை கைகளால் ஏந்திக் கொண்டான். ''அம்மா உங்கள் முகத்தில் உண்மை

''என்ன மன்னா! எதிரி மன்னனுக்கு காக்காவிடம் ஓலை அனுப்புறீங்க?''

''மண்டு அமைச்சரே! இது புரியலையா? அவனை காக்கா பிடிக்கத்தான்''

-செல்வராஜா
சேலம்





யான சந்தோஷம் இல்லை. ஏன் வழக்கமான புன்னகை கூட இல்லை. ஏம்மா. உங்களுக்கு பிடிக்கவில்லையா. உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் விட்டு விடலாம். ஏன்னா நீங்க எங்களுக்கு முக்கியம் அம்மா. கணவனை இழந்த பெண் என்பதால் உங்கள் மனம் ஏற்கவில்லையா அம்மா''

அவசரமாய் மறுத்தாள் சரோஜா. ''அப்படி இல்லையப்பா. வைத்து வாழப்போறவனுக்கு பிடித்துப் போனால் போதும். ஒரு பெண்ணாய் இருந்து அதை மறுப்பேனா. என் கவலையெல்லாம் உன்னைப் பற்றித் தான்'' -மகனின் கைகளை கவனத்தோடு வைத்து அழுத்திக் கொண்டாள்.

''என்னைப் பற்றியா ஏம்மா? எனக்கென்ன குறை. எனக்கே எனக்குன்னு பிறந்த மீரா இருக்கிறாளே பிறகென்ன.... ஒருவேளை... அம்மா ஒரு வேளை உங்களுக்கு மீராவை பிடிக்கவில்லையோ''- கேட்கும் போதே பதறினான் கண்ணன்.

சரோஜா புன்னகையுடன் ''மீராவைப் பிடிக்காமல் போகுமா? ரொம்ப பிடித்திருக்கிறதப்பா'' என்றாள்.

**நினைக்காத நேரமில்லை**
**இரவும் பகலும் எதிலும்**
**எப்போதும் உன்னை**
**நினைக்காத நேரமில்லை!**

12

அனைவரையும் வழி அனுப்பி வைத்து தங்கி இருப்பவர்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து விட்டு மற்ற வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு பாட்டி வீட்டிற்கு போய் ராதாவுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு அனைவரும் அலுப்பில் படுத்துக் கொள்ள ஒரு சில விளக்குகளை மட்டும் எரியவிட்டு கேட்டை பூட்டிக் கொண்டு மாடியேறினான் ராதாகிருஷ்ணன். அம்மா களைப்பில் சீக்கிரமாகவே படுத்துக் கொண்டார். பி.பி.வேறு. அனைவரும் கிட்டத் தட்ட உறங்கியிருக்க தன் அறைக்கதவை திறந்து விளக்கை போட்டவன் ஆச்சர்யமானான்.

விளக்கின் ஒளிபட்டதும் கண்களை திறந்த கண்ணன் சட்டென எழுந்து அமர்ந்தான். ''டேய் கண்ணா! நீ இங்கேயா இருக்க. கவுதம் கூட போயிட்டேன்னுல்ல நினைச்சோம். ஏண்டா நீ சாப்பிடக் கூட இல்லியாம். அம்மா ரொம்ப நேரம் தேடிட்டே இருந்தாங்க. தலைவலின்னு சொன்னியே. பரவாயில்லையா. நல்லா தூங்கினியா''- பேசிக் கொண்டே உடையை களைந்து இரவு உடைக்கு மாறியவன் தம்பியிடம் இருந்து எந்த பதிலும் வராமல் போகவே தி[illegible] அழுந்தப் பற்றிக் கொண்டு அ[illegible] அமர்ந்தான்.

27/05/2011 15:32

''என்ன கண்ணா இன்னும் தலைவலி போகலியா. கொஞ்சம் தைலம் போட்டு தலையை பிடிச்சு விடவா?'' - பரிவாய் கேட்டதும் உடைந்து போய் அழ ஆரம்பித்தான். பதறிப்போன ராதாகிருஷ்ணன் முதலில் எழுந்து போய் கதவை தாழிட்டு வந்து தம்பியின் தோளைத் தொட்டான். ''கண்ணா. என்னடா ஆச்சு.

உன் கண்ல கண்ணீரா? என்ன இது. சொல்லு கண்ணா. எனக்கு உடம்பெல்லாம் பதறுது. தலைவலி தாங்க முடியலியா? டாக்டருக்கு போன் பண்ணட்டுமா. என்னடா பண்றது சொல்லு கண்ணா.''

''அண்ணா இது நானே தேடிக் கிட்ட தலைவலி. என் ஆயுசு முழுதும் தீரவே தீராது. என்னால தாங்க முடியல அண்ணா. எனக்கு எனக்கு செத்துடலாம் போல இருக்கு அண்ணா.''- தன்னை கட்டிக் கொண்டு தேம்பியவனை பார்த்து அதிர்ந்து போனான் ராதாகிருஷ்ணன்.

என்ன?என்ன வார்த்தை சொல்கிறான்? எதற்கும் அஞ்சாத வீரன். இன்று மனம் உடைந்து அழுது கொண்டு இந்த வார்த்தையை சொல்கிறான் என்றால்? ''ஓ காட் கண்ணா யாரையாவது விரும்புகிறாயா? ஒருவேளை மீராவை விரும்புகிறாயோ?'' அண்ணனின் நேரடித் தாக்குதலில் திணறித்தான் போனான் கண்ணன். அதிர்ச்சியாய் நிமிர்ந்தான். ''நான் நினைத்தது சரிதான். சொல். யூ லவ் மீரா?'' மீண்டும் கேட்டவனிடம் பதில் சொல்ல முடியாமல் தலையை மட்டும் ஆட்டினான்.

''யெஸ்! நாம் மதுராந்தகம் போகும் முன்பே விரும்பினாய் அப்படித்தானே. மறைக்காமல் சொல்''-பதற்றமாய் கேட்டான்.

சற்று தயங்கி, ''ஆமாம் அண்ணா! அவளை பார்த்த உடனே விரும்ப ஆரம்பித்திருக்கிறேன். ஆனால் நான் உணர்ந்தது அன்று தான்.''- என்றான் கண்ணீரை துடைத்தவாறே.

''யூ இடியட். பிறகெப்படி கௌஷிக் ஆசைப்பட்டான் என்பதற்காக அவனுக்கு விட்டுக் கொடுக்க நினைத்தாய்?

நீ இந்த வீட்டு ராஜகுமாரன். நீ முடங்கிப்போனால் அதை நம் வீடு தாங்காது. கண்ணா என்னோட நிலைவேற. அப்போ ராதாவுக்கு என்னை யார்னே தெரியாது. என் மனதை தெரிவிக்கும் முன்னரே அவளுக்கு திருமணம் முடிவாகி விட்டது. அதனால் தான் விட்டு விட்டேன். ஆனால் உனக்கு அப்படி அல்ல. மீராவும் உன்னை விரும்புகிறாள்.''

''அண்ணா''- ஆனந்தமாய் நிமிர்ந்தான். ''ஆமாண்டா! நீ எங்களை விட்டுட்டு வந்தியே அன்றே நான் மீராவின் மனதை தெளிவாய் தெரிந்து கொண்டேன். நீ போய் அரை மணி ஆகியும் உன் கார் போன பாதையை விட்டு அவள் பார்வை விலகவே இல்லை.

அங்கிருந்து புறப்படும் முன் நூறுமுறையாவது அவசரப்படுத்தி இருப்பாள். உன்னைப் பார்க்க துடித்த துடிப்பை நான் நன்றாகவே உணர்ந்து கொண்டேன். வந்து பார்த்தால் இங்கு கௌஷிக் விருப்பப்படி அவனுக்கு மீராவை நிச்சயிக்க ஏற்பாடு நடக்கிறது. நீயும் எதையும் கண்டு கொள்ளாமல் இருந்தாய். சரிநாம் தான் தவறாக கணக்கு போட்டு விட்டோமோ என நினைத்தேன். ஆனால் மீராவின் கண்ணீரே அவள் மனதை சொல்லி விட்டது.



என்னிடம் கூட ஒருவார்த்தை சொல்லாமல் இப்போது இங்கு வந்து அழுகிறாயே. இதைத்தான் கண்கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் என்பார்கள். அது எப்படிடா கண்ணெதிரே மீராவை வைத்துக் கொண்டு அவளை கௌஷிக் விரும்பினான் என்பதற்காக மவுனமாக கொடுக்க முடிந்தது உன்னால்? அவள் மனம் என்ன பாடுபடும் என்று ஒரு கணமாவது சிந்தித்து பார்த்தாயா?''-கோபமாய் கேட்டான்.

''ஆமாம் அண்ணா! மீராவே என்னை வெறுத்து விலகிவிடுவாளோ என்று பயமாய் இருக்கிறது. அவள் என் உயிர் என்பதை உணர்வுகள் எனக்கு வெளிப்படுத்தி விட்டது. நிச்சயமாய் அவளை இழந்து என்னால் வாழ முடியாது. நான் என்ன செய்யட்டும் சொல். எனக்கு பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது. பசி இல்லை, தூக்கம் இல்லை. படுத்தால் அவளின் அமுத முகம் என்னை சித்ரவதை செய்கிறது. என்னால் முடியவில்லை அண்ணா''- மீண்டும் தலையைப் பற்றிக் கொண்டான்.

''முட்டாள்! எத்தனை சுலபமாய் முடிய வேண்டிய காரியத்தை இப்படி சிக்கலாக்கி விட்டாய். உன் மனம் தெரிந்தவுடன் நீ கௌதமிடம் இதமாய் பேசியிருந்தாலே சுலபமாக பிரச்சனை தீர்ந்து போயிருக்கும். கௌதம் இந்த வீட்டு மாப்பிள்ளை என்பதற்கு முன்னே உன் பிரெண்ட் தானே?''

''நிஜம் தான் கௌஷிக்கும் மீராவை விரும்புகிறான் என்று தெரிந்ததும் சொன்னதும் கொஞ்சம் தடுமாறிவிட்டேன் அண்ணா. அவன் மனமும் புண்படும் தானே.''

''இடியட் ம்ாதிரி பேசாதே. யார் வேண்டுமானாலும் மீராவை விரும்பலாம். மீரா யாரை விரும்புகிறாள் என்பது தான் முக்கியம். உன்னை விரும்புபவள் எப்படி கௌஷிக்கை மணப்பாள்? நிச்சயமாய் அவனை மணக்க அவள் சம்மதிக்கப் போவதில்லை.''-உறுதியாய் கூறினான் ராதாகிருஷ்ணன்.

''நீ ஒன்றும் கவலைப்படாதே. நான் கௌஷிக் கிட்ட பேசுறேன். எனக்கு என்னவோ கௌஷிக் மீராவ ரொம்ப சின்சியரா லவ் பண்ற மாதிரி தெரியல்ல. அழகான பொண்ணு பார்த்த உடனே பிடிச்சுப்போச்சு என்பதால் கட்டி வையுங்க என்றிருக்கிறான். அவன் பெற்றோர் சம்மதிச்சதால் கல்யாண ஏற்பாடு நடந்திருக்கு. அதோட கௌஷிக் ரொம்ப ஜோவியல் டைப்பாவும் தெரியறான். ஒருவேளை உன்னோட மனசு தெரிஞ்சவுடன் அவனே கூட ஈஸியா விலகிவிடுவான். எதுவா இருந்தாலும் காலையில பேசிக்கலாம். சாப்பாடு எல்லாம் இருக்கு கண்ணா.

கொஞ்சமா சாப்பிடுறியா. வா கீழே போலாம். நான் பரிமாறிடுறேன் வா''- தம்பியின் கைபற்றி எழுப்பினான்.

''இல்லண்ணா. எனக்கு பசியில்ல. நீ ரொம்ப டயர்டா இருப்ப. படுத்துக்கோ. நான் என்னோட ரூமுக்கு போறேன். இன்னும் நாலு நாள்ல உனக்கு கல்யாணம். உன்னே [illegible] பண்ணிட்டேன். ஸாரி அண் [illegible]

''அதெல்லாம் விடு. முதல்ல நீ போய் தூங்கு. காலையில முதல் வேலையா மீராகிட்ட பேசு. பாவம்டா அவள். இன்னிக்கெல்லாம் அழு



27/05/2011 15:32

திட்டே தான் இருந்திருக்கா. நாளைக்கு அவ பழைய மாதிரி கலகலப்பா வளைய வருவா. அது உன்னோட கையில தான் இருக்கு. நிம்மதியா தூங்கு குட்நைட்" என்றவாறே அவனது அறைவரை கூடவே வந்து தம்பியை படுக்க வைத்துவிட்டு இரவு விளக்கை எரியவிட்டு அறைக்கதவை சாத்திவிட்டு தன் அறைக்கு வந்து படுக்கையில் விழுந்தவன் உடனே உறங்க ஆரம்பித்தான்.

கண்ணனின் இமைகள் ஒன்று சேர மறுத்தது. சற்று நேரத்துக்கு ஒருமுறை எப்போது விடியும் என கடிகாரத்தை பார்த்துக் கொண்டே இருந்தான். மாரி மீரா தானாக இந்த முடிவை எடுத்திருக்கக்கூடாது. அப்படியே எடுத்து விட்டாலும் உன்னிடம் என் நிலையை சொல்லியிருக்க வேண்டும். தவறெல்லாம் என்னுடையது தான் என்று பேசி அவளை சமாதானப்படுத்த வேண்டும் என்ற நினைப்போடு படுக்கையில் புரண்டான்.

ஆனால் விடிந்தது முதல் அவன் மீராவை பார்க்கக் கூட முடியாமல் ஏன் பாட்டி வீட்டு பக்கமே போக முடியாமல் வேலை வேலை என பம்பரமாக சுழல வைத்தது நேரம். தந்தையின் வேலை உமாபதியின் வேலை என மொத்தமாய் தன் தலையில் விழ மீராவைப் பற்றி நினைக்கக்கூட நேரமின்றி பறந்து கொண்டே இருந்தான் ராதாவின் கல்யாணம் வரை.

எந்நாளும் தனிமையே எனது
நிலைமையோ கேட்ட கவிதையோ
கனவோ இரு கண்ணும் என்
நெஞ்சம் நீக்கி ஆடுமோ?

18

உறவினர்கள் கூடி வாழ்த்த சிறப்பாகவே ராதாவின் திருமணம் நடந்து முடிந்தது. தங்க நிற கல்யாண பட்டுச்சேலையில் தங்க சிலையாக ராதா ஜொலிக்க அவளுக்காகவே அத்தனை பொருத்தமாய் இருந்தான் மணமகன் ராதாகிருஷ்ணன். கண்களில் துளிர்த்த நீரை துடைத்து விட்டு நண்பனை கட்டிக் கொண்டார் அனந்தராமன்.

சரோஜாவும் யசோதாவும் ஒருவரை ஒருவர் அன்பாய் அணைத்துக் கொண்டனர். அண்ணன், தம்பி ஐவரும் ஒவ்வொருவராக வந்து ராதாகிருஷ்ணனை கட்டி அணைத்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். மருமகள் அனைவரும் ராதாவை தோளோடு அணைத்து முத்தமிட்டு வாழ்த்தினர். சுபத்ரா கூட இனிமையாய் பேசினாள். அனைவரையும் உபசரித்து அறிமுகம் செய்து வைத்தாள்.

கௌதமும் கௌஷிக்கும் நகைப்பெட்டியை கொடுத்து கைகுலுக்கினர். ராதா மனம் நிறைய கண்களில் நன்றியோடு ராதாகிருஷ்ணனை பார்த்தாள். "பீ ஹேப்பியோ" கண் சிமிட்டி சிரித்தான். உறவினர்கள் கூட்டமும் கும்மாளமும் கொண்டாட பாரதி இருவரையும் அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.



நடப்பதற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல் ஓரமாய் நின்று கொண்டிருந்தாள் மீரா. இனி அக்கா இந்த வீட்டில் இந்த உறவுகளில் ஓர் அங்கம். மனம் கவர்ந்த கணவனுடன் சந்தோஷமாக வாழ்வாள். இதுபோதும் தன் கடமை முடிந்தது. இனி தனக்கு இந்த வீட்டில் என்ன வேலை. பாட்டியை ராதா தான் கவனித்துக் கொண்டிருக்கிறாள். வந்த வேலை முடிந்து விட்டது. இனி தன் வழியைப் பார்த்துக் கொண்டு இனம் புவனைத் தவிர வேறு என்ன கவலை?

எப்படியும் கண்ணன் தன்னிடம் பேசவருவான் என இத்தனை நாள் காத்திருந்து ஏமாந்தது தான் மிச்சம். கண்ணன் மனதில் நாம் இருக்கிறோம் என்று கொஞ்சமாய் ஒட்டிக் கொண்டிருந்த நம்பிக்கையும் தேடி வந்த சுபத்ராவின் தங்கை ராதிகாவை பார்த்ததும் சுத்தமாய் பொசுங்கிப் போனது.

"இதுதான் என் தங்கை. நிறைய படிச்சிருக்கா." என எல்லோரிடமும் அறிமுகப்படுத்திய போது கூட சாதாரணமாய்த் தான் இருந்தாள். ஆனால் ஓரமாய் ஒதுங்கி நின்ற தன்னை கவனியாமல் தன் தங்கையிடம் இருந்தாள் சுபத்ரா.

"பாருடி. வந்தவுடனே மூத்தவர் மீன் பண்ணிட்ட... அதோ அதுதான் கண்ணன். கடைசி ஆளு. இவரையாவது உனக்கு கட்டி வைக்கணும்னு அத்தை மாமாகிட்ட ஜாடையா பேசி வச்சிருக்கேன். நல்லா பாத்துக்கோ" என கண்ணனை காட்டியதோடு மட்டுமின்றி அவனையும் அழைத்து தங்கையிடம் அறிமுகம் செய்ய அந்தக் காட்சியை காணப்பிடிக்காமல் ஒதுங்கிப்போய் வேண்டியமட்டும் அழுது ஓய்ந்திருந்தாள்.

இனியும் தேவையற்ற ஆசைகளை மனதில் வளர்த்துக் கொண்டு பைத்தியமாகி அலையக் கூடாது முடிவுடன் விலகி தன் அறைக்கு சென்று தனது சூட்கேஸை எடுத்து துணிகளை அடுக்க ஆரம்பித்தாள். வந்த அன்று இனிய சொர்க்கமாய் தெரிந்த வீடும் உறவுகளும் ஏனோ இன்று வெறுமையாக பட்டது. அவர்களின் உற்சாக ஆரவாரம் நாராசமாய் கேட்டது. நாளை உமாபதியின் திருமணம். அனைவரும் பிஸியாக இருக்கும் நேரம் தான் நாம் இந்த வீட்டை விட்டு கிளம்பும் தருணம். அதுவரை யார்

"பெரிய திரைக்கும், சின்னத்திரைக்கும் என்னடா வித்தியாசம்?"

"பெரிய திரை துணியில இருக்கும் சின்னத்திரை கண்ணாடியில இருக்கும்."

-பி.பாலாஜி
கோவிலாம் பூண்டி



27/05/2011 15:32

கண்ணிலும் படாமல் ஒதுங்கியிருப்பதே நலம். பெட்டியை மூடி கட்டிலுக்கு அடியில் தள்ளினாள்.

புடவையை மாற்ற கூட மனமில்லாமல் கட்டிலில் அமர்ந்து ஜன்னல் வழியே பார்வையை வெளியே வீசினாள். அத்தனை கூட்டத்திலும் கண்ணன் மட்டும் கம்பீரமாய் தெரிந்தான். தன் கண்கள் அவனைத் தவிர வேறு யாரையுமே பார்க்காதோ. என் புத்தி ஏன் இப்படி மழுங்கி போய் விட்டது. எத்தனை ஒதுக்கியும் இன்னும் அவனைத்தானே நாடுகிறது என் மனம். மஞ்சளும் குங்குமுமாய் ஜொலித்த அக்காவை அனைவரும் கேலி செய்து கொண்டிருந்தனர்.

கௌஷிக்கின் அருகில் இழைந்து கொண்டிருப்பது யார்? அட இது அந்தப் பெண் ராதிகாதானே. இவளுக்கு கண்ணன் மட்டும் போதாதாமா. கண்ணனை விட இந்த கௌஷிக்கிடம் என்ன இருக்கிறது என்று இப்படி இழைகிறாள். எப்படி கண்ணனுக்கு இவள் பொருத்தமாவாள்? ச்சே. யார் எப்படி யாரோடு போனால் நமக்கென்ன. எழுந்து பட்டென ஜன்னலை மூடினாள்.

ஏனோ மூச்சு திணறுவது போல் இருந்தது. இப்படியே இருந்து யோசித்துக் கொண்டிருந்தால் நிச்சயம் பைத்தியம் பிடித்துவிடும். அறைக் கதவை சாத்தி தாழிட்டுவிட்டு வெளியேறி பின்கட்டிற்கு சென்றாள். சுற்றுப்புற இரைச்சல் கொஞ்சம் குறைந்தது என்றாலும் ஸ்பீக்கரில் பாடல்கள் அலறிக் கொண்டு தான் இருந்தது.

மாட்டுத் தொழுவத்தை பெருக்கி சுத்தம் செய்து கொண்டிருந்தாள் சரசு. பிறந்து ஒரு வாரமே ஆன வெள்ளை நிற கன்றுக்குட்டி துள்ளிப் பாய்ந்து கொண்டிருந்தது. அதுவேறு எங்கும் தொலைவில் சென்று விடாமல் இருக்க ''ம்மா..ஆ'' என எச்சரிக்கை குரல் எழுப்பிக் கொண்டிருந்தது அதன் தாய்.

மற்ற பசுக்கள் அமைதியாய் படுத்திருந்து அசைபோட்டுக் கொண்டிருக்க அவற்றை ரசித்துக் கொண்டே அந்த குட்டை சுவரில் அமர்ந்து கொண்டாள் மீரா. மனிதர்கள் இல்லாத இடம் நிம்மதியைத் தர அமைதியாய் உட்கார்ந்திருந்த மீராவிடம்.

''ஏம்மா! கல்யாணக் களையையே உங்க முகத்துல காணோமே. மாப்பிள்ளை அங்க இருக்கும் போது இந்த சாணிவாடையில ஏம்மா வந்து உட்கார்ந்திருக்கீங்க.''- பம்மிய வயிற்றோடு மூச்சு வாங்கியவாறே கேட்டாள் சரசு.

அதை கவனியாதது போல், ''ஏன் சரசு! உனக்கு இது எத்தினிமாசம். ஒன்பதா.''-என்றாள் மீரா.

பூரித்த முகமாய் தன் வயிற்றை வருடியவாறே, ''இல்லம்மா அடுத்த வாரம் தான் ஒன்பதுமாசம் பொறக்குது. இது எட்டுமாசம்''- என்ற சரசுவின் முகம் தாய்மையின் பூரிப்பில் மின்னியது.

''தடுப்பு ஊசியெல்லாம் சரியா போட்டுக்கிறியா. செக்கப் போறியா? குழந்தை ஆரோக்கியமா இருக்குதா''

''அதெல்லாம் சரியா போய் டாக்டரம்மாவ பார்த்துட்டு வந்திடுவேம்மா. முன்னெல்லாம் தர்ம ஆசுபத்திரிக்குத் தான் போயிட்டு வருவேன். அப்புறம் நம்ம அம்மாதான். நம்ம வூட்டுக்கு வர்ற டாக்டரம்மாகிட்டயே காட்டிக்க சொன்னாங்க. அந்த டாக்டரம்மாவும் நல்லா பார்க்கிறாங்கம்மா. வேலைக்காரிதானேன்னு முகம் சுளிக்கிறதே இல்லை. நம்ம அம்மாவும் என்னை அதிக வேலை செய்ய உடுறதே இல்லை. இதுக்கு முன்னே நின்னது எல்லாமே கலைஞ்சு போயிடுச்சில்ல. அதான் இதாவது நல்ல படியா பொறக்கணும்னு அம்மா வேலை செய்யாமலே கூலியும் சாப்பாடும் தர்றாங்கம்மா. தெய்வந்தான் அம்மா உருவத்துல வந்திருக்கும்மா.

இப்பக்கூட சம்பளம் வாங்கிட்டு போகத்தான் வந்தேன். அம்மா ரொம்ப வேலையா இருக்காங்களே. சரி சும்மா ஏன் இருக்கணும்னு தான் இத்த பெருக்கி சுத்தப்படுத்திட்டு இருக்கேன். அம்மா பார்த்தா சத்தம் போடுவாங்க''- என்றவாறே கூடையில் சாணியை அள்ளி ஓரமாய் இருந்த உரக்கிடங்கில் கொட்டிவிட்டு வந்தாள் சரசு.

''சரசு! நீ என்ன சொல்ற. இது உன்னோட முதல் குழந்தை இல்லையா''-

ஆச்சர்யமாய் கேட்டாள் மீரா.

''இல்லீங்க. இது நாலாவதும்மா.''

''அப்போ மத்ததெல்லாம்?''- தவிப்பாய் கேட்டாள் மீரா.

''அதெல்லாம் மூணாமாசம் நாலாம் மாசத்திலேயே கலைஞ்சு போச்சும்மா. அப்புறம் ரெண்டு மூணு வருசமா குழந்தையே இல்லாம கடைசியாக மாரியாத்தா கோயில்ல தொட்டில் கட்டி வேண்டுனப்புறம் தாம்மா இது உண்டாச்சு. இதாவது எனக்கு முழுசா கிடைக்கணும்னு தான் தினமும் சாமிய வேண்டிக்கிறேன்''- கண்கள் கலங்க, புடவை தலைப்பை உதறி முகத்தில் அரும்பி இருந்த வியர்வையை துடைத்துக் கொண்டாள்.

''ஸாரி சரசு. உன் மனசை கஷ்டப்படுத்திட்டேனோ. ஸாரி. ஆமா உன் வீட்டுக்கார் என்ன வேலை பார்க்கிறார். அவர் சம்பாதிச்சு உன்னை உட்கார வெச்சு சாப்பாடு போடலாமே. இத்தனை கருச்சிதைவை தாங்கின உன் உடம்பு ரொம்ப வீக்கா இருக்குமே. உன்னை பத்திரமா பாத்துக்க வேண்டாமா. அப்படி என்ன வேலை செய்யுறாரு''.

''அடப்போங்கம்மா. அந்த ஆளாவது வேலை செய்து என்னை காப்பாத்துறதாவது. முன்னெல்லாம் இங்கதாம்மா வேலை பார்த்தாரு. சம்பாதிக்கிறதையெல்லாம் குடிச்சே அழிச்சிடுவான் பாவி. ஒருநாள் தண்ணிய போட்டுட்டு வந்து என்னை அடிச்சத பார்த்துட்டு நம்ம கண்ணன் அய்யாதான் அவரை அடிச்சு விரட்டினாரு. எனக்கு தேவையான எல்லா உதவியும் செய்தாரு. எப்படியோதான் பொழைச்சேம்மா. அதிலிருந்து இந்த பக்கமே வர்றதில்ல எம்புருஷன் ஊரை சுத்திட்டு வந்து பொழுதானா குடிச்சுபுட்டு வந்து கூத்தடிப்பாரு. நானும் எனக்கு கிடைக்கிற சாப்பாட்டுல அவருக்குமா கொடுத்துட்டு ஏதோ காலத்தை கடத்திட்டு வர்றேன். எம்புள்ளை பொறந்தபிறகாவது திருந்துடுவாரான்னு பார்க்கணும். ரெண்டுநாளா வீட்டு பக்க[illegible] மருந்து வாங்கணும். அதான் அம்[illegible] வந்தேன்.''





27/05/2011 15:32

''சரி சரசு. நீ போய் அத்தைய பார்த்திட்டு வீட்டுக்கு போ. நான் கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டு போறேன்''- என்றாள் மீரா.

''ஏம்மா. அக்கா கல்யாணம் நடந்து விருந்து அமர்க்களப்படுது. நீங்க என்னன்னா மாட்டுத் தொழுவத்தில வந்து உட்கார்ந்திட்டு இருக்கீங்களே. அடுத்த கல்யாணப் பொண்ணு நீங்க. இப்படி ஒதுங்கி போய் உட்கார்ந்திருந்தா பார்க்கிறவங்க எதுனா தப்பா நினைச்சுக்க போறாங்க. போங்கம்மா. போய் ஆளோட சேர்ந்து கலகலப்பா இருங்க''- உண்மையான அக்கறையோடு சொன்னாள் சரசு.

அவள் கூறுவதிலும் உண்மை இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டவளாய் எழுந்து நின்றாள் மீரா. ''சரிநீயும் வா சரசு. சாப்பிட்டு விட்டு அத்தையைப் பார். வயிற்றுப்பிள்ளைக்காரி ரொம்ப நேரம் பசியோட இருக்கக்கூடாது. வா''

''நீங்க போயிட்டு இருங்கம்மா. நான் கன்னுக்குட்டிய கட்டிட்டு வர்றேன்''- என்றவாறு கன்றுக்குட்டியை பிடிக்க சென்றாள் சரசு.

''சீக்கிரமா வா''- என்றவாறு அடுக்களையை சுற்றி வீட்டின் முன்புறம் வந்தாள் மீரா. கூட்டம் கொஞ்சம் கலைந்து போயிருக்க யாரையும் நிமிர்ந்து நோக்க மனமின்றி தலைகுனிந்தவாறே நடந்தவளை அந்த சிரிப்பொலி நிறுத்தியது. அடுத்தவரின் கவனத்தை திருப்புமே என்ற அக்கறையின்றி சற்றுபலமாகவே வந்த சிரிப்பொலிஎங்கிருந்து வருகிறது என தலையை திருப்பினாள் மீரா.

பாட்டி வீட்டின் முன் படர்ந்து விரிந்திருந்த ஜாதிமல்லிக் கொடியின் நிழலில் அவர்கள் இருவரும் நின்று தன்னை மறந்து உலகை மறந்து பேசிக்கொண்டிருந்தனர். கௌஷிக் ஏதோ சொல்ல ராதிகா விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள் ''ஹய்யோ! கௌஷிக். என்னால முடியல. சிரிச்சு சிரிச்சு வயிறே புண்ணாகிப் போச்சு. எப்படி கௌஷிக். எப்படி இவ்வளவு ஜாலியா பேசுறீங்க. யூ நோ. எங்க காலேஜ்ல கூட பசங்க பேசுவானுங்க. ஆனா அதில ஜொள் லிட்டர் கணக்குல வடியும். பட் நீங்க ஒரு ஜெண்டில்மேன் தெரியுமா. ஐ லைக் யூ. பேசாம நானும் உங்களோட லண்டன் வந்திடவா. லண்டன் மைட்ரீம் பிளேஸ். லண்டன்ல தான் என்னோட மேற்படிப்பை தொடரணும்னு அப்பாகிட்ட பிடிவாதம் பண்ணிட்டு இருக்கேன். ஆனா அப்பா படிச்சது.போதும்னு சொல்றாங்க''-என்றாள் கொஞ்சலாய்.

''நோ. நோ. கற்றது கையளவு தான். கல்லாதது உலகளவு. ஸோ நீங்க எவ்வளவு வேண்டுமானாலும் படிக்கலாமே. உங்க அப்பா பர்மிஷன் கொடுத்தா நீங்க தாராளமா எங்கூட லண்டன் வரலாம். பேமிலி ப்ரெண்ட் ஆகிட்டோம். இதை கூட செய்ய மாட்டேனா.தவிரவும் நீங்க லண்டன் வந்தா எம்பிரண்ட்ஸ் எல்லாம் வெந்துடுவாங்க. கௌஷிக்கு இத்தனை அழகான பிரெண்டான்னு.''

கௌஷிக் விளையாட்டாய் சொல்ல அவன் தோளில் செல்லமாய் தட்டியவாறே குலுங்கிச் சிரித்தாள் ராதிகா. பார்த்துக் கொண்டிருந்த மீரா கடுப்பேறி திரும்பி நடக்க அங்கே முகம் முழுக்க கோபத்தால் சிவக்க கண்ணன் நின்று கொண்டிருந்தான்.



அதற்கு சற்று தூரத்தில் சுபத்ராவும் நின்று தன் தங்கையை கோபமாய் முறைத்துக் கொண்டிருக்க, இதனால் தனக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பது போல் அவ்விடத்தை விட்டு அகன்றாள் மீரா.

கண்ணுக்குள் நீதான்
கண்ணீரில் நீதான்
கண்மூடி பார்த்தால்
நெஞ்சுக்குள் நீதான்!

## 14

வெகு அலட்சியமான ஒரு பார்வையை தன் மீது வீசி விட்டு தன்னை கடந்து போன மீராவைப் பார்த்து பதறிய தன் இதயத்தை கட்டுப்படுத்த இயலாமல் திணறினான் கண்ணன்.

மீரா.. மீரா... ஏன் என்னைக் கண்டால் இப்படி வெறுத்து ஒதுங்கி போய்விடுகிறாய். உன்னிடம் நான் பேச வேண்டும் மீரா. நிறைய பேச வேண்டும். என் மனம் முழுவதும் நீதான் நிறைந்திருக்கிறாய் என்று சொல்ல வேண்டும். என் மனதை உன்னிடம் சொல்லாமல் உன் மனதையும் புரியாமல் நான் செய்த தவறுக்கு உன்னிடம் மன்னிப்பு கேட்டாக வேண்டும்.

நீ என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வேன். ஆனால் பேசாமல் மட்டும் என்னைக் கொல்லாதே. ப்ளீஸ் மீரா. ஒரு முறை நின்று திரும்பிப்பாரேன். என் கண்களில் என் வேதனை தெரியவில்லையா? ஆயிரம் கதைகளை மௌனமாய் பேசிய நம் கண்கள் இப்போது ஏன் சந்திக்க மறுக்கிறது. புரிந்து கொள் மீரா. என்னை புரிந்து கொள். எல்லாம் எல்லாம் இதோ இந்த கௌஷிக்கால் வந்தவினை. உன்னை என்னிடம் இருந்து பிரித்ததுடன் நில்லாமல் உன் கண்முன்னே இன்னொருத்தியோடு என்ன கும்மாளம். இடியட். கண்ணனின் கோபம் முழுக்க கௌஷிக்கின்

''ரெயில்வேயில வேலை பார்க்கிறவரை லவ் பண்றியே கிரீன் சிக்னல் கிடைச்சிதா கல்யாணத்துக்கு!''

''நீவேற அவர் டிராக் மாறிட்டாருடி''



கோவி

மீது திரும்பியது.
இவன் புத்தி ஏன் இப்படி அலைகிறது? இவளும் இவள் மேக் அப்
பும் பனியனும் ஜீன்ஸ் பேண்ட்டுமாய் நின்ற ராதிகாவை வெறுப்பாய்
பார்த்தான். மிகுந்த ஆத்திரத்தோடு ''மிஸ்டர் கௌஷிக். ஒன்மினிட்''
என்று சற்று உரக்கவே அழைத்தான்.
''ஓ.யா. மிஸ் ராதிகா நாம அப்புறம் பார்க்கலாம்''- என்றவாறு அவ
ளிடம் இருந்து விலகி தன்னிடம் வந்தவனை பற்றி இழுக்காத குறையாய்
உள்ளே அழைத்து இழுத்துச் சென்றான் கண்ணன்.
அதற்காகவே காத்திருந்தாற்போல் தங்கையிடம் வந்த சுபத்ரா.
''ஏண்டி! அறிவில்ல உனக்கு அவன் கிட்ட உனக்கு என்ன பேச்சு? அது
வும் கண்ணன் கண் முன்னாடியே. போச்சு எல்லாம் போச்சு. அவர் முகத்
தில எத்தனை கோபம். இனிமே எப்படி உன் கல்யாணப் பேச்சை எடுப்
பேன். என் நினைப்புல மண் அள்ளிப் போட்டுட்டியே. இன்னொருத்தியை
மணக்க ஆசை வைத்திருப்பவனுடன் வெட்கம் இல்லாம தொட்டுப்
பேசுவ.'' சீறினாள்.
அலட்சியமாய் உதட்டை சுளித்தாள் ராதிகா. ''இப்ப ஏன் நீ டென்ஷ
னாகிற. நான் என்ன பெரிய தப்பு பண்ணிட்டேன். ஒரு ஆம்பிளை கூட
நின்னு பேசுனா அது தப்பா. அதுவும் கௌஷிக்கும் என்னை மாதிரி படிச்
சவர்.ஸோ ஒரே வேவ்லைன். ஈஸியா ஒட்டிக்கிட்டோம்.''
''ச்சீ! வாயை மூடுடி. இங்க வேணாம். என் அறைக்கு வா''- தங்கை
யின் கையைப் பற்றி தரதரவென இழுத்துச் சென்றாள் சுபத்ரா.
அறைக்குள் நுழைந்த உடன் முதல்வேலையாய் கதவை சாத்தினாள்.
''கைய விடுக்கா முதல்ல'' - கையை உதறினாள் ராதிகா.
''இதோ பாருடி. நீ படிச்சது போதும். இனியாவது நான் சொல்றதைக்
கேளு. இப்படி கண்டவனோடு பேசுறத நிறுத்திடு. வர்ற வரனெல்லாம் நீ
ஊர் சுத்தறத பார்த்து தான் தட்டிப் போச்சு. அதனால தான் அப்பா நீ இந்த
வீட்டுக்கு வந்து கௌரவமான வாழ்க்கை வாழணும்னு ஆசைப்படுறார்.
ஏற்கனவே ஒரு முறை கைநழுவிப் போன வாய்ப்பு. இப்போ தான்
அத்தை மாமாகிட்ட பேசி சம்மதம் வாங்கியிருக்கேன். அவங்களும் கண்
ணனுக்கு பிடிச்சிருந்தா எங்களுக்கு சம்மதம்ன்னு சொல்லிட்டாங்க. அத
னால தான் உன்னை இங்கே வரவழைச்சு கண்ணனிடம் அறிமுகப்படுத்தி
வெச்சேன். இந்த கல்யாணத்தை சாக்காவைச்சு நீங்க நன்றாக பழக
ணும்னு நினைச்சேன். ஆனா நீ கண்ணனை விட்டுவிட்டு அந்த கௌஷிக்
கோட போய் ஒட்டிட்டு நிக்கிற. அவன் அந்தப் பொண்ணு மீராவுக்குன்னு
நிச்சயிக்கலாம்னு பெரியவங்க நினைச்சிருக்காங்க. இந்தநிலையில அவ
னோட பேசிட்டு இருக்கியே. உன்னைப்பத்தி இந்தவீட்டுல எல்லாரும்
என்ன நினைப்பாங்க. அதுவும் கண்ணன் நேர்லயே பார்த்திட்டாரே. இனி
அவரை எப்படித்தான் சமாளிக்கப்போறேனோ''-பதறினாள் சுபத்ரா.
''ச்சு! சும்மா அலட்டிக்காதே அக்கா. என்ன சும்மா கண்ணன் கண்
ணன்னு பூச்சி காட்டுற. ஐடோண்ட்லைக் கண்ணன். எப்பப்பாரு உர்
ருன்னு முகத்தில ஒரு சிரிப்பு இல்லாம முறைச்சிட்டே இருக்காரு. நமக்கு



அதெல்லாம் சரிப்படாது. எனக்கு எப்பவுமே ஜாலியா கலகலப்பா சிரிச்ச
முகத்தோட கனமான பர்ஸோட உள்ள ஆம்பிளையைத் தான் பிடிக்கும்.
நீயும் அப்பாவும் ஆசைப்படுறதால ஒரு உம்மணாம் மூஞ்சி தலை
யில கட்டுறதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன். கௌஷிக்கை பாரேன்.
என்ன கலர். என்ன அழகு. எத்தனை சிரிப்பு. எவ்வளோ பெரிய மேல்தட்
டுவர்க்கம். அவங்க பேமிலில எல்லோரும் எவ்வளோ ஜாலியா இருக்காங்க
பாரு. ஆனா உங்க வீட்டுல உள்ள கட்டுப்பாடு அப்பப்பா ஏதோ ஆர்மி
யில இருக்கிற மாதிரி இருக்கு.''- அலட்சியமாய் தோளைக் குலுக்கினாள்
ராதிகா.
''வாயை மூடுடி. இந்த குடும்பத்தைப் பத்தி என்னடி தெரியும்
உனக்கு. இது கோவில்டி. அத்தையும் மாமாவும் தெய்வம்'' என்றாள்
சுபத்ரா மனம் நெகிழ்ந்தவாறே.
''கோவில்ல சாமிதான் கும்பிட முடியும். குடும்பமெல்லாம் நடத்த
முடியாது. நீ வேணா இங்க பூசை செய்துட்டு இரு. என்னை விட்டுடு.
எனக்கு கௌஷிக்கைத் தான் பிடிச்சிருக்கு. அவரோட லண்டன் போறதா
டிஸைட் பண்ணிட்டேன்.''
''அடிக்கழுதை! அவன் ஏற்கனவே இன்னொருத்தி மேல ஆசைப்
பட்டவன்''-சுபத்ரா பதறினாள்.
''ஸோவாட்? எத்தனையோ கல்யாணம் தாலிகட்டுற நேரத்தில கூட
மாறிப் போயிருக்கு. இது அட்வான்ஸாவே மாறட்டும். ஒரு டீ டேஸ்
கொடு. அந்த கௌஷிக் கட்டுனா இந்த ராதிகாவைத் தான் கட்டுவேன்னு
ஒத்தைக்கால்ல நிக்கிற மாதிரி செய்திடுறேன். அப்போ தெரியும் நான்
யாருன்னு''-கர்வமாய் கூறியவளை இடைவெட்டியது அந்தக்குரல்.
''நீ யாருன்னு இப்பவே தெரிஞ்சது. ரொம்ப நல்லதாப் போச்சு''-என்
றவாறே அறையினுள் வந்தான் ஜானகிராமன்.
திடுக்கிட்டு போன இருவரும் சிலையாய் நிற்க. சுபத்ரா மூச்சுக்கு திண
றினாள். என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறி சட்டென கணவனின்
காலில் விழுந்தாள்.
''என்னை மன்னிச்சிடுங்க. இவ இப்படி இருப்பாள் என்று சத்திய
மாய் நினைக்கலை. தெரிஞ்சிருந்தா சத்தியமாய் இவளை நம் வீட்டிற்கு
கொண்டு வர முயற்சி செய்திருக்க மாட்டேன்.
இவ எனக்கு ஒரே தங்கை. உலகம் புரியாதவள். நம் வீட்டில் வந்து
வாழ்ந்தால் நாம் பார்த்துக் கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தில் தான்
நான் ஆசைப்பட்டேன். ஆனால் அது இப்படி ஆகும்னு நினைக்க
வில்லை. தயவு செய்து மற்றவர்களிடம் சொல்லி விடாதீர்கள். அவள்
வாழ வேண்டிய பெண் அல்லவா''- கண்ணீர் விட்டு கதறினாள்.
சட்டென நகர்ந்து கொண்டான் ஜானகிராமன். உன் தங்கையை மறுத்
ததற்காக எங்கள் அம்மாவை மட்டுமின்றி இந்த குடும்பத்தில் அத்தனை
பேரிடமும் உன் வெறுப் [illegible]
யின் யோக்யதையை உ [illegible]
திற்காகத் தான் இந்த முறை கண்ணனுக்காக உன் தங்கையை நீ கேட்ட



27/05/2011 15:33

போது நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் நடந்தது வேறு''

அவன் கோபமாக வெளியேற முகம் முழுக்க அவமானத்தில் சிவக்க ராதிகா எரிதணலாய் நின்றாள்.

# 15

**முத்துமணி மாலை ஒன்னு**
**தினந்தோறும் கோர்த்து வெச்சேன்**
**பொத்தி பொத்தி மனசுக்குள்ள**
**பூப்போல காத்து வெச்சேன்!**

''இப்போ நான் என்ன தப்பு செய்திட்டேன்னு இவ்ளோ கோபப் படுறீங்க கண்ணன்? அந்தப் பொண்ணு மேல ஏதோ படிக்கணும். லன் டன்லதான் படிக்கப்போறேன். உங்களோட வரலாமான்னு சாதாரணமா கத்தான் கேட்டது. நானும் மறுக்கலை. சரிவாங்கன்னு சொன்னேன். இதுல எந்த தப்பும் இல்லியே? நான் எப்பவும் ஜாலியா பேசுவேன் பழகு வேன். அதுக்காக என்னை பொம்பளை பொறுக்கின்னு நினைச்சிடா தீங்க. இப்படி விசாரிக்கிறது எனக்கு ரொம்ப அவமானமா இருக்கு'' கௌஷிக் கோபமாய் கூற ராதாகிருஷ்ணன் அவன் தோள்பற்றி சமாதா னம் செய்தான்.

''இல்ல கௌஷிக். வீடு முழுக்க ரிலேசன்ஸ் இருக்கறாங்க நீங்க இந் த பொண்ணு கூட நின்று பேசி சிரிச்சா தப்பா எடுத்துக்குவாங்க இல்லியா? அதான் கண்ணன் கொஞ்சம் கோபப்பட்டான். மற்றபடி உங்களை தப்பா நினைக்கவில்லை நாங்கள்''

மொட்டைமாடி சுற்றுசுவரில் சாய்ந்து நின்ற கண்ணன் விருட்டென எழுந்து வந்தான். ''நீ என்னண்ணா பூசி மெழுகிட்டு இருக்க. பாரு கௌஷிக் நீ செய்தது தப்புதான்.

பொண்ணுங்கள பார்த்தா உடனே பல்லை இளித்துக் கொண்டு போய்விடுகிறானே. இவன் மீராவை மணக்கணும்னு ஆசைப்பட்டது உண்மைதானான்னு எல்லாருக்கும் சந்தேகம் வராதா? மீரா முகத்தில் சந் தோஷமே இல்லை.''

கண்கலங்க கண்ணன் முடிக்க கௌஷிக் ஏதோ புரிந்தாற்போல் மெல்ல பின்வாங்கினான்.

''வெயிட் .... கண்ணன் யூ லவ் மீரா?'' சாதாரணமாய் கேட்பது - போலவே, கௌஷிக் கேட்டாலும் மின்சாரத்தை தீண்டியது போல் அதிர்ந் தனர் அண்ணனும் தம்பியும்.

அதை அலட்சியம் செய்தவனாய், ''என்னோட கேள்விக்கு பதில் சொல்லுங்க. நீங்க மீராவை விரும்புறீங்கதானே. நிச்சயமாய் விரும்பு றீங்க. என்கிட்ட மறைக்க வேண்டாம்..'' என கண்ணனின் கண்களை நேருக்கு நேராய் பார்த்துக் கேட்டான் கௌஷிக்.

தடுமாறிய கண்ணன் பேச முடியாமல் திணற, ''யெஸ் எனக்கு புரி



யுது. உங்களுக்கு ராதிகா கூட நான் பேசியதில் கோபமில்லை. உங்கள் மனம் கவர்ந்த மீரா மனம்புண்படும்படி நான் இன்னொரு பெண்ணிடம் பேசினேன் என்று தான் கோபம். வார்த்தைக்கு வார்த்தை மீரா என்கிறீர் களே. இந்த உரிமையே உங்கள் மனதை தெளிவாக சொல்கிறதே? என் சார் நீங்கள் செய்வது மட்டும் சரியா? நான் மணக்க விரும்பி என் பெற் றோரிடம் தெரிவித்து இதற்கு அனைவரும் சம்மதித்த பெண்ணை நீங் கள் விரும்பலாமா? ம்?'' புன்னகை முகமாக அழுத்தமாகவே கேட்டான் கௌஷிக்.

''மிஸ்டர் கௌஷிக்! ஒரு திருத்தம். உங்களுக்காக நிச்சயம் செய்யப் போகும் பெண்ணை அவன் விரும்பவில்லை. அவன் விரும்பிய பெண்ணை நீங்கள் விரும்பிய ஒரே காரணத்திற்காக உங்களுக்கு விட்டுத் தந்துவிட்டு தவிக்கிறான் அதை தெரிந்து கொள்ளுங்கள்'' கண்டிப்புடன் பேசினான் ராதாகிருஷ்ணன்

''ஓஹோ! உங்கள் தம்பி தன் ஆசைப்படி ஒரு பெண்ணை விரும்பு வார். அவள் சலித்தபின் என் தலையில் கட்டிவிடுவீர்கள். இதற்கு தியா கம் என்ற பெயர் வேறா? வெரிகுட். என் நெற்றியில் என்ன இளிச்சவா யன் என்று எழுதியிருக்கிறதா? இப்போதல்லவா தெரிகிறது. மீரா ஏன் என் முகத்தை கூட பார்க்காமல் ஓடி மறைகிறாள் என்று ஆண்களை கண் டாலே வெறுத்து ஒதுங்குவது போல் நாடகம் போடுகிறாளாக்கும்'' ஏளத் தானமாய் கௌஷிக் சொல்ல கண் ணன் பாய்ந்து வந்து கௌஷிக்கின் சட்டையைக் கொத்தமாய் பற்றி னான்.

''அவளை விரும்பியது நான். என்னை என்ன வேண்டுமானாலும் சொல். அவளைப்பற்றி ஏதாவது பேசினால் நான் மனிதனாக இருக்க மாட்டேன்.'' கர்ஜனையாய் இருந் தது அவன் குரல்.

ஆனால் அதை அலட்சியம் செய்தவனாய், ''ரொம்ப நன்றாக இருக்கிறது. உங்களை விரும்பா மலா என்னை ஒதுக்குகிறாள். மிஸ் டர் கண்ணன் நான் ஒன்றும் முட் டாள் இல்லை. இந்த மாதிரி சில் லியா பேசி ஏமாற்ற வேறு யாராவது ஏமாளி இருப்பான். நான் கிளம்புகி றேன். என் திருமணப்பேச்சு முறிந்து விட்டது. இனி எனக்கும் மீராவிற் [illegible]



''என்னங்க வேலைக்காரி இப்படி உரசிட்டு போறா நீங்கப்பாட்டுக்கு நிக்கிறீங்க?''

''அவ திரும்ப வரட்டும் நான் உரசிடுறேன்.''

-பி.பாலாஜி
கோவிலாம்பூண்டி

டும். நான் போகிறேன்.'' பதிலுக்கு காத்திராமல் தடதட என படிகளில்
இறங்கிப் போனான் கௌஷிக்.

நிலமை மோசமானதை உணர்ந்த ராதாகிருஷ்ணன் ''கண்ணா! பார
தியை பற்றி யோசிக்கவில்லையே நாம். சீக்கிரம் வா'' என கண்ணனின்
கைகளைப் பற்றி இழுத்தவாறே கீழே இறங்கி வர ஜானகிராமன் எதிரில்
வந்தான். ''டேய் கண்ணா! உன்னை எங்கே எல்லாம் தேடுவது. உன்னி
டம் முக்கியமான விஷயம் பேசவேண்டும்.'' என தொடங்கியவன் தம்
பிகளின் முகத்தில் தெரிந்த கலவரத்தை கண்டு திடுக்கிட்டான். ''என்
னடா! ஏன் உங்க ரெண்டுபேர் முகமும் இருண்டு போய் கிடக்கிறது. எது
வும் பிரச்சனையா சொல்லுங்கடா'' என்றான் பதற்றமாய்.

''அண்ணா! அதெல்லாம் அப்புறம் பொறுமையாய் சொல்கிறோம்.
கௌஷிக் கோபித்துக் கொண்டு போகிறான். முதலில் அவனை சமாதா
னப்படுத்த வேண்டும். சீக்கிரம் வா'' என்றவாறே ராதாகிருஷ்ணன் புயல்
வேகத்தில் முன்னே செல்ல மற்றவர்கள் இருவரும் அவனை பதட்டத்
தோடு பின் தொடர்ந்தனர்.

கையில் பெட்டியோடும் முகம் முழுக்க அவமானமும் ஏமாற்றமு
மாய் அறையைவிட்டு வெளியேறிய ராதிகாவின் கண்களில் இந்த காட்சி
தெளிவாகப்பட, அவளது முகம் பூரித்தது. வெளியேறும் எண்ணத்தை
கைவிட்டு பெட்டியை அறையினுள் தள்ளிவிட்டு அங்கே சோர்ந்து
போய் அமர்ந்திருந்த சுபத்ராவை சைகையால் அழைத்தாள். ''என்னடி''
என்றவாறே எழுந்துவந்தவளிடம் ''இங்கே ஏதோ ஒரு இன்ட்ரஸ்டிங்
டிராமா நடக்கப்போகுதுன்னு நினைக்கிறேன். வா'' என்றவாறு அவர்
கள் மூவரும் சென்ற இடத்தை நோக்கி மனம் கறுவியவாறே நடக்க
ஆரம்பித்தாள் ராதிகா.

''அப்படியென்ன உங்களுக்கு மீராமேல் அத்தனை அக்கறை? அவ
ளைப் பற்றி யாரும் ஒரு வார்த்தை சொன்னால் இப்படி சீறுகிறீர்களே.
ஏன்'' ராதிகா விடாமல் கேட்க, உஷ்ணமாய் நிமிர்ந்தான் கண்ணன்.


''ஏன்னா அவள் என்...'' கண்கள் மீராவிடம் சென்றது. மீராவின்
கண்கள் வேதனையையும் மீறி ஆவலாய் மின்னியது. என்ன சொல்லப்
போகிறீர்கள் கண்ணன்?'' அலைபாய்ந்த கண்களை தாண்டி வாயில்
கைவைத்தபடி கண்களில் நீர் சுரக்க நின்ற அனந்தராமனை பார்த்தான்.
சட்டென கோபம் தணிந்து, ''ஏன்னா அவ எங்க அண்ணியோட தங்கை''
என்றான் மெல்ல.

''ஓ/ஷட். ஏண்டா'' என்றான் ராதாகிருஷ்ணன் கோபமாய். அவ
னைப் பார்த்து. இயலாமையாய் கைகளை விரித்தான் கண்ணன். கண்
கள் கலங்க பல்லைகடித்து கட்டுப்படுத்தினான். மீரா வெறுப்போடு
தலையை திருப்பிக் கொண்டாள்.

''அப்போ! நான் யாரு. நானும் உங்க அண்ணியோட தங்கைதானே.
வேறு ஏதேனும் காரணம் சொல்லுங்க கண்ணன் அத்தான்!''

ராதிகாவும் விடுவதாக இல்லை. என்ன இந்தப் பெண் அடுத்தவ
ரின் மனதை புண்ணாக்கி குதறிப்பார்ப்பதில் இவளுக்கு அப்படியென்ன
இன்பம்? சீதாராமன் முகம் வெறுப்பாய் மாற. ''ஏன் இப்படி





ஆளாளுக்கு பேசி பிரச்சினையை பெரிசாக்குறீங்க? வாயை மூடுங்க. எம்பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியும். அவளை யாரும் விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை. இது வீடு. கோர்ட் இல்லை. எல்லாரும் அவங்க அவங்க வேலையைப் பாருங்க. போங்க...'' பெண்கள் அனைவரும் அவசரமாய் விலக கண்ணன் தலையைப் பற்றிக் கொண்டு அன்னையின் அருகில் அமர்ந்தான்.

''நடந்ததை விட்டுவிட்டு இனி நடக்கப் போவதை சரி பண்ணிடலாம்மா'' என்று ராதாகிருஷ்ணன் பேச்சை தொடங்கினான்.

நீ எங்கே என் நினைவுகள்
அங்கே நீ ஒரு நாள்
வரும் வரைக்கும் நான்
இருப்பேன் நதிக்கரையில்...

## 16

**கா**ற்று சிலுசிலுவென வீசிக் கொண்டிருந்தது. கூடவே இதமான ஜாதிமல்லியின் நறுமணமும் நாசியைத் தீண்ட இனிமையாய் அவற்றை ரசித்துக் கொண்டே அம்மா தந்த காபியை துளிதுளியாய் ருசித்துக் கொண்டிருந்தாள் மீரா. எத்தனை நாட்களாயிற்று இத்தனை பொறுமையாய் ரசனையாய் காபி அருந்தி.

''அம்மாடி! தலை அவிழ்த்து உலர விடும்மா. ஜலதோஷம் பிடிச்சிக்கப்போகுது. சீக்கிரம் கிளம்பணுமே. நீ என்ன ஹாயா உட்கார்ந்திட்ட. எழுந்திரும்மா. ராதா மூணுவாட்டி போன் பண்ணிட்டா'' என்றவாறு வந்தாள் யசோதா.

''அம்மா! நான் தான் நேற்று நைட்டே சொல்லிட்டேனே. நீங்களும் அப்பாவும் போயிட்டு வாங்கம்மா. எனக்கு இன்னிக்கு ஒரு நாள்தானே லீவு. பிளீஸ்மா. நான் கொஞ்சம் ரிலாக்ஸா இருக்கணும். துணிங்கள எல்லாம் அயர்ன் பண்ணணும். நிறைய வேலை இருக்கும்மா. அடுத்தமுறை பார்க்கலாம். இப்போ நீங்க போயிட்டு வாங்க..'' கொஞ்சலாய் சொன்ன மீராவை முறைத்தாள் அம்மா.

''போனமுறையும் இப்படித்தான் சொன்னே. சரின்னு விட்டேன். உனக்காகத்தானே ஞாயிற்றுகிழமையில போகலாம்னு முடிவு பண்ணினோம். பாவம்டி அக்கா. உன்னை பார்க்கணும்னு ரொம்ப ஆசைப்படுறா. புள்ளைதாச்சி பொண்ணு ஆசைபட்டா உடனே நிறைவேத்தணும். வாம்மா போலாம். அவளை எங்கும் அலையக் கூடாதுன்னு டாக்டரம்மா சொல்லிட்டாங்களாம். டாக்டரே வீட்டுக்கு வந்துதான் பார்த்துட்டு போறாங்களாம். அதனால தான் இங்கே வரமுடியாம தவிக்கிறா. நாம அப்பப்போ போய் பார்க்க வேண்டாமா''

''அய்யோ! அம்மா. நீங்க போங்கம்மா. நான் அடுத்தவாட்டி வர்றேன். அக்காகிட்ட உடம்பை பத்திரமா பார்த்துக்க சொல்லுங்க. எனக்கு



ஹாஸ்பிடல்ல வேலை இருக்குதுன்னு சொல்லுங்க. அப்பா இப்ப வந்திடுவாங்க. ம் சீக்கிரம்..'' என தாயை கிளப்பினாள்.

காரை எடுத்துக் கொண்டு வந்த அப்பா, ''என்னம்மா...! இப்பவும் நீ வரலையா'' என்றார் சாந்தமாய், ''இல்லப்பா! நெக்ஸ்ட் டைம் வர்றேம்பா'' என்றாள் பார்வையை வேறெங்கோ திருப்பி.

''ம்.. சரிம்மா. உன் விருப்பம் போல் செய்யும்மா. பத்திரமா இரு. நாங்க இருட்டுமுன் வந்திடுவோம். யசோதா ரெடியா. கார் வந்திடுச்சி பார்'' என்றவாறே உள்ளே நுழைந்தார்.

''நான் ரெடிங்க. இவதான் பிடிவாதமா இருக்கா. போனவாட்டியே இவ வரலைனு சொன்னதும் ராதா எப்படி வருத்தப்பட்டா? இவ என்னன்னா...'' என்ற மனைவியை அதட்டினார்.

''வரட்டும். பொறுமையா வரட்டும். அவளை எதற்கும் கட்டாயப்படுத்தாதே. அவ இன்னும் எதையும் மறக்கல்லன்னு நினைக்கிறேன். அவளை அமைதியா இருக்கவிடு. நேரம் வரும்போது எல்லாம் நல்லபடியா நடக்கும். நீ சும்மா ஏதாவது பேசி அவளை சங்கடப்படுத்தாதே. வா நாமபோவோம் ''என்றவாறு அம்மா செய்து வைத்த பலகாரங்கள் அடங்கிய பைகளை எடுத்து காரில் வைத்தார். ''மீரா! பாத்தும்மா. கதவை பூட்டிட்டு இரு. சரியா...'' மெல்லிய குரலில் சொல்லிவிட்டு மனைவியோடு காரில் ஏறி அமர்ந்தார். இருவரும் கையசைத்துவிடைபெற கார் புறப்பட்டது.

கார் தெருமுனையை தாண்டும் வரை நின்றவள் திரும்பி வீட்டுக்குள் நுழைந்து கேட்டை மூடினாள். தலையை சுற்றியிருந்த டவலை உருவி தலை முடியை உலர்த்த ஆரம்பித்தாள். கைகளால் கோதிவிட்டவாறே மீண்டும் ஜாதிமல்லிக்கொடி அருகே உள்ள திண்ணையில் அமர்ந்து கொண்டாள். தந்தையை நினைக்கையில் மனம் நெகிழ்ந்தது. அப்பா! எத்தனை அன்பான அனுசரணையான அப்பா! அப்பாவும் சேர்ந்து தன்னை சந்தேகித்திருந்தால் எப்போதோ மரித்திருப்பாள் மீரா. ஆனால் அப்பா ஒரு வார்த்தை கூட தவறாய் கேட்கவில்லையே. மனைவியிடம் கண்டிப்பாய் கூறிவிட்டார். ''எக்காரணம் கொண்டும் மீராவிடம் எதையும் கேட்டுவைக்காதே. அவள் அமைதியாய் இருக்கட்டும். தொந்தரவு செய்ய வேண்



''கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்ன செய்யலாம்?''
''கூழை ஸ்ட்ரா போட்டு குடிங்க!''

-பி.பாலாஜி
கோவிலாம்பூண்டி

27/05/2011 15:34

டாம்'' என்று சொல்லிவிட்டார். யசோதாவும் ஒன்றும் மறுக்கவில்லை. பத்துநாள் பொறுத்திருந்து பார்த்தவள் தன் மகளின் ஒதுக்கமும் அமைதியும் மௌனமும் பயத்தை தர அவள் விரும்பிப் படித்த நர்ஸ் வேலைக்கு அனுப்ப சம்மதித்தார். நம்பாமல் பார்த்த மீராவை தலையை வருடிவிட்டு, ''நீ எப்பவும் கலகலப்பா இருக்கணும்மா. இப்படி இடிஞ்சுபோயிடக்கூடாதும்மா. புது சூழல்ல நாலு பேரோட பழகினா வேலை செய்தா உன் மனமும் மாறும்னுதான் அப்பா இந்த வேலையை உனக்கு வாங்கித்தந்திருக்கேன். ஸ்ரீரங்கா நர்ஸிங்ஹோம்ல நம்ம டாக்டரம்மாகிட்ட கேட்ட உடனே சம்மதம்னு சொல்லிட்டாங்க. காலையில கிளம்பும்மா. சாயந்திரம் ஆறு மணிக்கா அப்பா வந்து கூப்பிட்டுக்கிறேன். போறியாம்மா..'' என்றவரைக் கட்டிக் கொண்டு அழுதே விட்டாள் மீரா.

மறுநாளே வேலையில் சேர்ந்து இதோ முழுதாய் ஆறு மாதம் ஓடிவிட்டது. இந்த ஆறு மாதங்களில் நான்கு முறை அக்கா அத்தானோடு கண்ணனும் வந்தான். ஆனால் ஒரு முறை கூட வீட்டில தங்காமல் ஹாஸ்பிடலில் தஞ்சம் புகுந்து கொண்டாள் மீரா. சலிக்காமல் உழைத்தாள். டாக்டர்களிடமும் நோயாளிகளிடமும் நல்ல மதிப்பைப் பெற்றுக் கொண்டாள். இன்று எதற்கெடுத்தாலும் மீரா எங்கே என்று அனைவரும் தேடும் அளவிற்கு ஹாஸ்பிடலில் மீரா பிரபலம்.

இதில் அப்பாவிற்கும் பெருமைதான். ஆனால் மகள் தன் நண்பனின் வீட்டுபக்கம் வரமறுக்கிறாள் என்பதுதான் உறுத்தியது. இருந்தாலும் கௌஷிக்கின் பேச்சு நினைவுவர அமைதியாகி விடுவார்.

கௌஷிக்கும் தான் என்னவெல்லாம் பேசிவிட்டான்.

''அண்ணா! எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம். பிராடு பண்றாங்கண்ணா. உன் மைத்துனன் கண்ணன் பெரிய கில்லாடி. அவர் லவ் பண்ற மீராவை எனக்கு விட்டுக்கொடுக்க முன் வந்தாராம் காமெடியா இல்ல? அதுவும் இவர்தான் மீராவை லவ் பண்றாராம். அவ பண்ணலியாம் நிச்சயமான இத்தனை நாள்ல ஒரு நிமிஷமாவது என்கிட்ட பேசினாளா? எப்பவும் மாட்டு தொழுவம் கன்றுக்குட்டி இல்ல பாட்டுவீடு இப்படியேதானே அடைஞ்சுகிடக்கிறா. அப்போ என்னை பிடிக்கலதானே அவளுக்கு? என்னை பிடிக்காதவளை கட்டிட்டு நான் அவஸ்தை படணுமா? ஒரு பொண்ணு கூட சாதாரணமா நின்று பேசினாலே அத்தனை தப்பாக எடுத்துக்கிறாங்க. இது மட்டும் சரியா? என்னால முடியாது. ஒவ்வொரு முறை அவளைப் பார்க்கும் போதும் கண்ணனின் காதலியாகத்தான் எனக்கு தெரிவாள் ஸோ. அவள் எனக்கு வேண்டாம். இந்த கண்ணனே அவளைக் கட்டிக் கொள்ளட்டும்'' என்று கூறிவிட்டான்.

''டேய் கௌஷிக். உனக்கு என்ன பைத்தியமா புடிச்சிருக்கு? மீராவை ஆசைப்பட்டுத்தானே நிச்சயம் பண்ணலாம்னு சொன்னே! நீ விரும்பிய ஒரு பெண்ணை எப்படிடா உன்னால சந்தேகப்பட முடியுது?'' கௌதம் பதிலுக்கு எகிற, ''நோ. நோ.. எனக்கு அந்த மாதிரியெல்லாம் எண்ணம் எதுவும் கிடையாது. அழகா இருந்தா பார்த்ததும் புடிச்சது. அம்மாகிட்ட சொன்னேன். மேரேஜ் பண்ணலாம்னு சம்மதிச்சாங்க! ஆனா அதுக்காக இன்னொருத்தர் லவ் பண்ணின பெண்ணையெல்லாம் கட்



டிக்க முடியுமா? உடனே அப்பாவுக்கு போன் போட்டு விஷயத்தை சொல்லிவிட்டேன். உமாபதியோட மேரேஜ் முடியட்டும்னு தான் வெயிட் பண்ணினேன். டிக்கெட் எடுத்துட்டேன். இன்னும் திரீ ஹவர்ஸ்ல பிளைட். நான் கிளம்பணும். உங்கிட்ட சொல்லாம போகக் கூடாதுன்னுதான் சொல்றேன் பை'' என்றவாறு லக்கேஜை எடுத்துக் கொண்டு கிளம்பினான் கௌஷிக்.

''ஐயோ! எம் பொண்ணு கல்யாணம்'' சரோஜா பதறினாள்.

''ஆன்ட்டி! நான் மீராவுடன் எனக்கு கல்யாணம் தான் வேண்டாம்னு சொன்னேன். அண்ணன் கௌதம் கல்யாணம் நிச்சயமாய் சொன்ன தேதியில் நடக்கும். அதில எந்த மாற்றமும் இல்லை.'' என்றதும் தான் நிம்மதியானார்.

''கண்ணா இன்னும் ஏன் வீண் விவாதம்? பேசாம மீராவை நீயே கட்டிக்கடா! மீராதான் உனக்கு ஏத்த பொண்ணு. மீராவும் ஒத்துப்பா என்னா அவளுக்கும் உன்னை பிடிக்கும். இல்ல மீரா?'' தம்பியின் காதலை எப்படியாவது வெளிப்படுத்த வேண்டும் என்று அவன் கேட்ட கேள்வி மீராவை சிலிர்த்தெழ வைத்தது.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் எல்லோரும்? நான் என்ன விளையாட்டு பொருளா? எனக்கு வேண்டாம்! நீ பிடி. நீ வெச்சிக்கோ என ஆளாளுக்கு பந்தாடுகிறீர்கள். என்னைப்பற்றி யாராவது கவலைப்பட்டீர்களா? என் விருப்பம் என்னன்னு யாரும் கேட்டீர்களா? ஒரு பெண்ணை அவள் மனதை பற்றி கொஞ்சமும் யோசிக்காமல் நீங்கள்லாம் ஆளுக்குஆள் பேசுகிறீர்கள். அப்பா! எல்லோரும் என்னை இப்படி சித்ரவதை பண்றாங்களே? வேண்டாம்ப்பா. என்னால தாங்கமுடியலப்பா. நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு போங்கப்பா. எனக்கு கல்யாணமே வேண்டாம். நான் எந்த ஆளையும் பார்க்க விரும்பவில்லை. என் மனசில யாரும் இல்லை. எனக்கு... எனக்கு..'' அதற்குமேல் பேச முடியாமல் மயங்கி சரிந்தது இன்னும் நெஞ்சை அடைத்தது.

பெருமூச்சோடு எழுந்தாள் மீரா. ம்ஹூம். இப்படி சும்மா உட்கார்ந்

''அடிக்கடி மனசு மாறிக்கிட்டே இருக்குது டாக்டர்''

''தப்பு...ஒரு இடத்திலே நிலையா இருக்கணும்''

''சரிங்க டாக்டர்... இனி நம்ம நர்ஸ் நமீதாகிட்டேயே மனசை நிலையா வைச்சுக்கிறேன்''

-செல்வராஜா



தால் இப்படித்தான் தேவையில்லாத நினைவுகள் எழும்பும். நினைவு
களை புறந்தள்ளிவிட்டு அயன்பாக்ஸை எடுத்து பிளக்கை சொருகி
னாள். கொடியில் கிடந்த துவைத்த துணிகளை எடுத்துபோட்டு விட்டு
ஸ்விட்சை போட கை நீட்டியபோது செல்போன் சிணுசிணுத்தது. அட!
இதை அப்பா கையில் எடுத்துப்போகவில்லையா? யார் என்று தெரிய
வில்லையே. யோசனையாய் மேசை மீதிருந்த செல்போனைப் பார்த்
தாள். கண்ணன் ஆசையாய் தந்தது. அப்பா திருப்பிக் கொடுத்த போது
திட்டவட்டமாய் வாங்க மறுத்துவிட்டான். மாமா இது உங்க பொண்ணு
கூட பேசத்தான் உங்ககிட்ட தந்தேன். அண்ணி கூட பேசுவீங்க. தயவு
செய்து இதைக்கூட மறுத்திடாதீங்க என்று சொல்லிவிட்டான். அப்பா
வும் இதில்தான் தினமும் ராதாவிடம் மணிக்கணக்கில் பேசுகிறார்.

ஆனால் இது ராதாவின் எண் அல்லவே. அவள் போன் செய்தால்
அவள் பெயர்தான் வரும். இது ஏதோ புதிய எண், யாராக இருக்கும்.
எடுப்பதா வேண்டாமா? மீரா யோசித்துக் கொண்டே இருக்க மூன்றா
வது முறையாய் அடிக்கத் தொடங்கியது.

எடுத்து பச்சைநிற பட்டனை அழுத்தி மெல்லியகுரலில் ''ஹலோ''
என்றவள் எதிர்முனையில் கேட்ட குரலில் சில்லிட்டாள். உடல் முழுவ
தும் மின்சாரம் தீண்டியது போல் நடுங்கியது. கால்கள் இரண்டும்
தொய்ந்து போக சட்டென மயங்கி கீழே விழுந்து விடாதிருக்க சுவரில்
சாய்ந்து கொண்டாள்.

## 17

**நீ தரும் சோதனை நான்**
**படும் வேதனை போதும்**
**என்னை மன்னிக்க மாட்டாயா**
**உன் மனமிரங்கி..!**

ஹலோ என்ற ஒற்றைச் சொல் செவியில் மோதியதுமே அது மீரா
என்று கண்டுகொண்ட கண்ணன் மூச்சுவிட திணறினான். எத்தனை
மாதங்களாக கேட்க ஏங்கிய குரல். தேனாய் பாய்ந்த அந்த மெல்லிய குர
லில் உடல் முழுக்க உற்சாக ஊற்று பீறிட்டது.

''ஹலோ! மீரா தானே. ஓ தேங்க் காட். மீரா. என் மீரா. எப்படியிருக்
கிறாய் மீரா. இங்கு ஒருவன் உன் நினைவால் பித்துபிடித்து அலைகி
றேனே? என்னை நினைவிருக்கிறதா மீரா? என்னை பார்க்கவே கூடாது
என்று முடிவு செய்துவிட்டாயா? எனக்கு ஏன் இத்தனை பெரிய தண்ட
னையைக் கொடுத்தாய் மீரா? பேசு மீரா. தயவு செய்து போனை வைத்து
விடாதே. நான் உன்னிடம் பேசியே ஆக வேண்டும். இப்போது விட்டால்
பிறகு எப்போதுமே பேச முடியாத இடத்திற்கு போய்விடுவேன். நான்
சொல்வது நிச்சயம்'' கண்ணனின் குரலில் நேசம் படபடப்பு ஆவேசம்
உறுதி என எல்லாம் கலந்திருந்தது.



கையிலிருந்து போன் நழுவிடாமல் இருக்க இருகரங்களாலும் சேர்த்து
பிடித்துக் கொண்டாள் மீரா. சுவரோடு சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.
என்ன பேசுகிறான்? பணிய வைக்கப் பார்க்கிறானோ. போனை வைத்து
விடலாமா? என்ற எண்ணம் தோன்றும் போதே அவசரமாய் மறுத்தான்
கண்ணன். ''போனை வைத்துவிடாதே மீரா. நான் ஒன்றும் உன்னை கட்
டாயப்படுத்தவில்லை உண்மையைச் சொல்கிறேன். நீ என்னுடன் பேச
மாட்டாய் என்று தெரியும். ஆனால் நான் பேசுவதை மட்டும் கேட்டுவி
டேன். ப்ளீஸ் ப்ளீஸ் மீரா. முதலில் என்னை மன்னித்துவிடு. ஐ லவ் யூ
மீரா. ஐ லவ் யூ இந்த வார்த்தையை எப்போதோ சொல்லியிருக்க வேண்
டும். ஆனால் அதற்கு அவகாசமே இல்லாமல் ஏதேதோ நடந்துவிட்டது.
எது நடந்திருந்தாலும் நான் உன்னை இழந்திருக்கக் கூடாது. ஆனால் உன்
மனம் புரியாமல் என் மனதையும் உன்னிடம் சொல்வதற்கு முன்பே
கௌஷிக் முந்திக் கொண்டான். ஆனால் நான் உன்னிடம் பேசியிருக்க
வேண்டும். நான் பேசாததுதான் நமது இத்தனை துன்பத்திற்கும் காரணம்.
என்னை மன்னிப்பாயா மீரா? என்னை மன்னிப்பாயா மீரா'' தழுதழுத்
தான் கண்ணன்.

மீராவிற்கு உலகமே தலைகீழாய் சுற்றுவது போலிருந்தது. என்ன பிதற்
றுகிறான் இவன். இந்த வார்த்தையை ஆறேழு மாதங்களுக்கு முன் சொல்
லிருந்தால் பூரித்துப் போயிருந்திருப்பாள். வானில் மிதந்திருப்பாள். நாணத்
தில் சிவந்திருப்பாள். ஆனால் இப்போது.... இந்த வார்த்தையை அன்று
உறவினர் கூட்டத்தின் முன் சொல்லியிருக்கலாமே?

மீண்டும் மீண்டும் சூடுபட்டுக் கொள்ள நான் என்ன அத்தனை
ரோஷங்கெட்டவளா? மீராவினுள் கோபம் கிளர்ந்தெழ, ''எனக்கு நிறைய
வேலை இருக்கு. போனை வெச்சடறேன்...'' என்றவாறு செல்லை ஆப்
செய்தாள். மனம் குமுறியது. வெகுநாட்களுக்கு பிறகு கேட்ட கண்ணனின்
குரல் காதினுள் குறுகுறுத்தது. மனம் படபடத்து. இது என்ன புதுவித
தவிப்பு. அவன் குரலைக் கேட்டதும் கோபமும் வெறுப்பும் தானே வர
வேண்டும்? ஏன் என் மனக்குளம் அலைபாய்கிறது? ஒரு வேளை, இன்
னும் என் மனம் கண்ணனைத் தான் விரும்புகிறதோ? அதிலென்ன சந்
தேகம்? என அடித்துக் கூறியது உள்மனம். அப்படியானால் இத்தனை
நாளாய் என்னை நானே ஏமாற்றிக் கொண்டிருந்தேனோ? ஏன் மனமே
இப்படி மானம் கெட்டுப்போகிறாய்? அவன் தன் சகோதரி திருமணத்
தை முன்னிறுத்தி அவன் உன்னை இன்னொருவனுக்காக விட்டுக்
கொடுக்க துணிந்தவன். அதெப்படி என்னைக் கேளாமல் அவன் இந்த
காரியம் செய்யலாம்? அலட்சியமா ஆணவமா? வார்த்தையால் சொன்
னால்தான் காதலா? அப்படியானால் ஆயிரம் கதை சொன்ன விழிகள்
வெற்று நாடகமா? இல்லை அவன் தகுதிக்கு நான் ஏற்றவள் அல்ல என்று
நினைத்துவிட்டானா?

இருக்காது அப்படி மட் [illegible] கண்ணன் மீது எத்தனை
கோபம் இருந்தபோதும் இந் [illegible]
கண்ணன் தன்னை விரும்பியது நிஜம். [illegible]
டாள் மீரா. மீண்டும் செல்போன் சிணுசிணுத்தது. ஆர்வமும் கோபமும்

27/05/2011 15:35

போட்டிபோட போனை கையிலெடுத்தாள். இம்முறை அழைத்தது ராதா.

''என்னடி இவ்ளோ நேரம் மணியடிக்குது. தூங்கிட்டியா'' என்றாள் ராதா.

''கொஞ்சம் பிஸியா இருந்தேன். எப்படிக்கா இருக்கே?''

''எல்லாம் அங்கே இருந்தே கேளு. ஏண்டி உன்னைப் பார்க்காம நான் எவ்வளவு வேதனைப்படுறேன்னு தெரியாதா உனக்கு? என்னைத் தான் உடம்பு ரொம்ப வீக்கா இருக்குன்னு வீட்டை விட்டு அனுப்ப மாட்டேங்கிறாங்க. நீ வந்து என்னை பார்த்திட்டு போலாமில்ல. என்னை கூட மறந்திட்டே இல்லை'' ராதாவின் குரல் கம்மியது.

''அக்கா பிளீஸ்! எமோஷனல் ஆகாதே. தினமும் நீ எப்படி இருக்கன்னு போன்ல நீ பேசும்போதே கேட்டுக்கிறேனே. உன்னைப் பார்க்காம எனக்கும் கஷ்டமாத்தான் இருக்கு. ஆனா நான் எப்படி அந்த வீட்டுக்கு வரமுடியும்?''

''போடி இவளே. நீ இத்தனை தயங்கவோ ஒதுக்கவோ இங்க யார் என்னடி தப்பு செய்தாங்க? ஏதோ கௌஷிக் முட்டாள்தனமா குழப்பம் உண்டாக்கிட்டு போயிட்டான். அதைக் கூட இங்க யாரும் பெரிசா எடுத்துக்கல தெரியுமா? உங்க அத்தானுக்கு கண்ணனுக்கு உன்னைத்தான் முடிக்க ஆசை. ஆனா அப்பாதான் உன் மனசு புரியாம இனிமே எதையும் பேசமாட்டேன்னுட்டார். ஏண்டி உனக்கு கண்ணனை பிடிக்கலியா? அந்த டாக்டர் மாப்பிள்ளையைத் தான் பிடிச்சிருக்கா? '' ராதா வெகுளியாய் கேட்க மீரா குழம்பிப் போனாள்.

''எந்த டாக்டர்மாப்பிள்ளை'' குழப்பமாகவே கேட்டாள்.

''ஏய்! அதான்டி. அந்த டாக்டரம்மாவோட தம்பியாம். அவரும் நீ வேலை செய்யிற ஹாஸ்பிடல்லதான் டாக்டரா இருக்காராம். அப்பா ஏதோ பேர் சொன்னாரே''

''யாரு. டாக்டர் சஞ்சய்யா?'' மீரா கேட்க, ''ம்! ஆமாம்டி. அப்பா கிட்ட அந்த டாக்டரம்மா கேட்டாங்களாம். அப்புறம் பார்க்கலாம்னு சொல்லிட்டு எங்கிட்ட வந்து சொன்னாங்க. உங்கத்தான் உடனே உனக்கு போன் பண்ணி கேட்கச் சொன்னாங்க. சொல்லுடி உனக்கு அந்த மாப்

''நம்ம பையன் லவ் பன்றான் போலிருக்குங்க!''

''எப்படி சொல்றே?''

''பத்துக்குள்ள ஒரு நம்பர் சொல்ல சொன்னேன் பத்துமான்னு சொல்றான்.''

-பி.பாலாஜி
கோவிலாம் பூண்டி





பிள்ளையை பிடிச்சிருக்கா'' என்றாள் கேலியாய்.

''ச்சீ! '' அவசரமாய் மறுத்தாள் மீரா'' நான் அந்த டாக்டர் முகத்தை கூட சரியா பார்த்ததில்லை. என்னைப் போய்... இப்படி கேட்கிறே? எனக்கு கல்யாணம் பண்ற ஐடியாவே இல்லை.''

''அப்படிச் சொல்லாதடி. அப்பா உன்னை நினைக்க ரொம்ப கவலைப்படுறார். ஏன் எங்க கண்ணனுக்கு என்ன குறைச்சல்? ராஜாவாட்டம் இருக்காரே? சரின்னு சொல்லுடி. உனக்குத் தெரியுமா அந்த கௌஷிக் பய கூட அந்த ராதிகாவையே கல்யாணம் பண்ணிக்கப் போறானாம். அவனே அப்படி பண்ணும்போது நீ ஏண்டி கல்யாணமே வேணாங்றே? சரி, சரி.. நீ உடனே கிளம்பிவா. உன்கிட்ட நிறைய பேசணும். இது எனக்கு அஞ்சாம்மாசமில்லே. நாளைக்கு எங்க அத்தைவீட்ல எனக்கு பூ முடிக்கப் போறாங்க. பிளீஸ். நீயும் வாடி. எனக்கு உன்னைப் பார்க்கணும் போல இருக்குடி'' அக்காவின் குரலுக்கு நடுவே'' அண்ணி ஜூஸ்'' என ஒரு குரல் ஊடுருவியது.

''என்ன கண்ணா இது? நான் வந்து குடிக்கமாட்டேனா. நீங்க ஏன் இதையெல்லாம் பண்றீங்க? எனக்கு கஷ்டமா இருக்கு'' அக்கா தன் கையில் போன் இருப்பதை மறந்து பேசிக் கொண்டிருந்தாள்.

''ஏன் அண்ணி! இந்த சிம்பிள் வேலையைக் கூட நான் செய்யக்கூடாதா? நீங்க அறையைவிட்டு கீழே இறங்கக்கூடாதுன்னு அம்மாவோட ஸ்டிரிக்ட் ஆர்டர். ஸோ, முதல்ல ஜூஸைக் குடிங்க'' கண்ணனின் அக்கறையான குரலில் மீராவிற்கு கண்கள் கலங்கின.

''சரி, நான் போன் பேசிட்டு குடிச்சிடுறேனே'' என்ற ராதாவிடம், ''நோ, நோ முதல்ல ஜூஸ் அப்புறம் போன். ஆமா போன்ல யாரு. குடுங்க நான் பேசுறேன். நீங்க ஜூஸ்சாப்பிடுங்க'' செல்போன் கைமாறுவதை உணர்ந்தாள் மீரா. உள்ளம் தடதடவென்றது ''மீராகிட்ட தான் பேசிட்டு இருந்தேன். நாளைக்கு லீவு போட்டுட்டு வரச் சொல்லுங்க கண்ணன். எனக்கு அவளைப் பார்க்கணும் போல இருக்கு'' என ராதாவின் குரல் தேய்ந்தது.

ஒரு சில வினாடி நிசப்தமாக இருந்தது. பிறகு கொஞ்சம் கரகரப்பான குரலில் கண்ணன் குரல் கேட்க மீரா தன்னைக் கட்டுப்படுத்த வெகு சிரமப்பட்டாள், ''மீரா. அண்ணி ரொம்ப வீக்கா இருக்காங்க. நாங்க எத்தனை பூஸ்ட் கொடுத்தாலும் உடம்பு தேறமாட்டேங்குது. அவங்களோட எனர்ஜி நீங்கதானாமே? நாளைக்கு அண்ணிக்கு பூ முடிக்கிற விசேஷம். பிளீஸ் அண்ணியை தவிக்கவிடாம வந்திடுங்களேன் பிளீஸ் எங்களுக்கு எங்க அண்ணி ரொம்ப முக்கியம். கண்டிப்பா வந்திடுங்க'' என இயல்பாய் பேசியவன் குரலை குறைத்து'' நான் இங்கிருப்பது உங்களுக்கு சிரமம் என்றால் நான் வேண்டுமானால் நாளை ஏதேனும் வெளியூர் சென்று விடுகிறேன். என்மீதுள்ள கோபத்தில் உன் அக்காவை காயப்படுத்த வேண்டாம். அவங்க மேல உனக்கும் அக்கறை இருக்குமென்று நினைக்கிறேன். என்ன வருகிறாயா?'' கண்ணனின் கேள்விக்கு இயல்பாய் தலையசைத்தும் என்றாள் மீரா

அதற்குள் போன் தொடர்பு அறுந்தது. போனை வைத்துவிட்டு மீரா

27/05/2011 15:35

என்ற பதட்டத்தில் போனைப் பார்க்க சார்ஜ் சுத்தமாய் இறங்கி லோ பேட்டரி என முனகிவிட்டு போன் ஆப்பாகிவிட்டது. ஒ ஷிட் கோபமாய் முனகியவாறே அவசரமாய் சார்ஜரை தேடி சொருகி போனை மாட்டினாள். மீண்டும் போன் பண்ணுவாரோ என எதிர்பார்த்து ஏமாந்து போனாள். ஒரு வேளை நான் ''ம்'' என்று சொன்னது அவர் காதில் கேட்டிருக்காதோ. என்னைப் பற்றி என்ன நினைத்தாரோ நானே கட் பண்ணியதாய் நினைத்திருப்பாரோ.

ஏனோ கண்ணனின் பேச்சும் குரலும் நினைவும் மீராவை ஆட்டிப்படைத்தன. இத்தனை நாளாய் தன் மனத்திற்கு போட்டு வைத்திருந்த திரை விலகிவிட மனதிற்குள் கண்ணன் அழுத்தமாய் பதிந்து போயிருப்பதை உணர்ந்தாள் மீரா. தன் மனதில் கண்ணன் நிரந்தரமாய் குடியேறிவிட்டதால் தான் மற்ற ஒருவரையும் ஏற்க இந்த மனம் மறுக்கிறதோ? எத்தனை குறும்பாய் பேசும் கண்ணன் இன்று எத்தனை வலியோடு பேசினார். எல்லாம் என்னால்தானே? என் கோபத்தால் தானே? முதன் முறையாய் தன் மீதே கோபம் கொண்டாள் மீரா. மீண்டும் செல்போன் சிணுங்க ஆவலாய் எடுத்தாள்.

## 18

**கண்ணன் முகம் கண்ட கண்கள்**
**மன்னர் முகம் காண்பதில்லை!**
**கண்ணனுக்கு தந்த உள்ளம்**
**இன்னொருவர் கொள்வதில்லை!!**

''அம்மாடி! நான் அப்பா பேசுறேம்மா! அக்கா எல்லாம் சொன்னாளா? நீ உடனே கிளம்பி வர்றியாம்மா'' என்ற அப்பாவின் குரலில் மனம் ஏமாற்றமடைந்தது. சட்டென சுதாரித்து ''இல்ல.. நான் காலையில ஹாஸ்பிடல் போயி லீவு சொல்லிட்டு நேரே அங்கே வந்திடுறேன்'' என்றாள்.

'இல்லம்மா! நாளைக்கு விசேஷம்றதால இன்னிக்கு தங்கி விசேஷம் முடிஞ்சப்புறம் போகலாம்னு எல்லோரும் சொல்றாங்க. அக்காவும் ரொம்ப ஆசைப்படுறா. நீ அங்கே தனியா இருப்பியேன்னு நான் பயப்படுறேன். மாப்பிள்ளை காரை எடுத்துட்டு வர்றாராம். நீ கிளம்பி இரும்மா. மாப்பிள்ளை கூட ஹாஸ்பிடலுக்கு போயி லீவு சொல்லிட்டு வா. இல்லேன்னா ஒரு போன் பண்ணி சொல்லிட்டு வாம்மா. சீக்கிரமா நல்லதா ரெண்டு துணிமணிங்க எடுத்து வெச்சிகிட்டு கிளம்பு. மாப்பிள்ளை புறப்படுகிறார்''

''அப்பா! இன்னிக்கே வரணுமா? நாளைக்கு காலையில வர்றேனே? பிளீஸ்பா. அக்காகிட்ட சொல்லுங்க. நானே வந்திடுறேன். கார் எல்லாம் வேணாம்'' பேசிக் கொண்டிருந்த போது ராதாகிருஷ்ணன் குறுக்கிட்டான்.

''ஏன் மீரா. யார் என்ன சொன்னாலும் கேட்கவே கூடாதுன்னு முடிவு



பண்ணிட்டியா? குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்காதே. இந்த பிடிவாதத்தால் எத்தனை பேர் மனம் காயம்பட்டு கிடக்கிறது என்று தெரியுமா உனக்கு? நமக்காக மட்டும் வாழறது இல்ல வாழ்க்கை. மற்றவர்களுக்காகவும் வாழ வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை முழுமையடையும். இதுவரை எத்தனை முறை உன்னிடம் பேச முயற்சித்தேன். ஏன் அப்படி ஓடி ஒளிந்தாய்? நீ ஒன்றும் கோழை அல்ல. குழந்தையும் அல்ல. எதையும் நேருக்கு நேரா பேஸ் பண்ணு. நான் உன்னை கூப்பிட வரமாட்டேன். உனக்கு எப்போது விருப்பமோ அப்போது வா. உன் விருப்பம் போல் செய்'' இணைப்பை துண்டித்து விட்டான்.

''இப்போ எங்க அவகிட்ட அவ்னோ கோபப்படுறீங்க. நாளைக்காவது வர்றேன்னு சொன்னாளாம். நீங்க பேசி கெடுத்திட்டீங்க. நாளைக்கும் வரமாட்டாள்'' அலுப்போடு சொன்ன மனைவியை மென்மையாய் அணைத்து நெற்றியில் முத்தமிட்டான் ராதாகிருஷ்ணன்.

''வருவாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவாள்''

''எப்படி? '' ஆச்சரியமாய் முகம் உயர்த்தி விழிகளை மலர்த்தினாள்.

''வருவாள் பாரேன். இந்த பூ முகம் இன்னும் கொஞ்சநேரத்தில் மலர்ந்து சிரிப்பதை பார்க்கத்தானே போகிறேன்? வா சாப்பிடலாம்'' என மனைவியை சாப்பிட அழைத்துப் போனான்.

''ஹேய் மீரா. என்னப்பா இன்னிக்கு லீவ்தானே உனக்கு? ஹாஸ்பிடல் வந்திருக்கே? கையில வேற பேக். ஊருக்கு எங்கேயும் போறியா என்ன?'' சக நர்ஸ் ஜெயஸ்ரீ கேட்க ''ஆமாம்டி அக்கா வீட்ல விசேஷம். கண்டிப்பா வரணும்னு ஒரே போன். அதான் லீவு சொல்லிட்டு போலாம்னு கிளம்பி வந்தேன். மேம் மாடியில இருக்காங்களா'' என்றாள் மீரா.

''அடடா! மேம் இப்பத்தான் பேமிலியோட வெளியே கிளம்பிப் போனாங்க. நீ ஒன்று செய். டாக்டர் சார் பர்ஸ்ட் புளோர்ல இருக்கார். அவர்கிட்ட சொல்லிட்டு போயேன். நான் இந்தரூம் பேஷண்ட்க்கு ட்ரிப்ஸ் மாத்தணும். வரட்டுமா. ஆ... அப்புறம் சீக்கிரம் வந்துடு. நீ இல்லேன்னா பேஷண்ட்களுக்கும் கஷ்டம். டாக்டர்களுக்கும் கஷ்டம். குறிப்பா சஞ்சய்க்கு ரொம்ப கஷ்டம் பை'' கண் சிமிட்டி விட்டு போனாள் ஜெயஸ்ரீ.

ச்சே! நம்மை சுற்றி நடப்பதை இத்தனை பேர் கவனித்திருக்கிறார்கள். ஆனால் நான் சதா கண்ணன் நினைப்பில் உழன்டு கொண்டிருந்ததால் பூனை கண்ணை மூடிய கதையாக இருந்திருக்கிறேன். தன்னையே கடிந்து கொண்டவாறே மாடி படியேறினாள். வழக்கத்திற்கு மாறாக கால்கள் பின்னிக் கொண்டன. இங்கு வேலையில் சேர்ந்து ஆறுமாத காலத்தில் இந்த சஞ்சயை நேருக்கு நேராய் பார்த்தது கூட இல்லை. எப்போதும் அனுராதாவின் அருகிலேயே தரைத் தளத்திலேயே நின்று கொள்வதால் அவனைப் பார்க்கும் அவசியமும் இருந்திருக்க வில்லை. எப்போதேனும் எதிர்பட்டால் குட்மார்னிங் குட் ஈவினிங் சொல்வதோடு சரி. எப்படி பெண் கேட்கும் அளவிற்கு போனா[illegible] புதி கவே இருந்தது. டாக்ரம்மா தன்னி[illegible]வி லையே? கால்கள் தானாகவே சஞ்சய் அறை வாசலை அடைந்தது.


27/05/2011 15:35

யாரிடமோ உற்சாகமாய் பேசிக் கொண்டிருந்த அந்த இளம் டாக்டர் சஞ்சய் மீராவைப் பார்த்ததும் வியந்து அவசரமாய் போனை கட் பண்ணி விட்டு, ''ஹாய் மீரா, கம்...கம். வாட் எ சர்ப்ரைஸ். இப்போ தான் உங்களைப் பற்றி நினைத்தேன். நேரிலே வந்துநிக்கிறீங்களே? பிளீஸ் சிட்டவுன்'' தனக்கு எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டினான். ''பரவால்ல டாக்டர். நான் கொஞ்சம் அவசரமா ஊருக்கு போகணும். ஒரு ரெண்டு நாள் லீவ் வேணும்'' நேராய் பார்ப்பதை தவிர்த்தாள் மீரா.

''வொய் மீரா. ஏதேனும் பிராப்ளமா'' உண்மையான பதட்டமாய் கேட்டான். ''இல்ல டாக்டர் அக்கா வீட்ல ஒரு பங்க்ஷன். நான் கண்டிப்பா போகணும்..''

''ஓ.கே. போயிட்டு சீக்கிரமா வந்திடுங்க. நீங்க இதுவரை லீவே எடுத்ததில்லையே? ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் உங்களை பார்க்கா விட்டாலே வேலை ஓடுவதில்லை. இன்னும் டூடேஸ்ஸ எப்படி ஓட்டுவது. கஷ்டம் மீரா'' - சஞ்சய் இயல்பாய் பேசிக்கொண்டே போக கலக்கமாய் நிமிர்ந்தாள். எதையும் முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். வளரவிட்டால் ஆபத்து ''ஸார்!'' என்றாள் தயக்கமாய்.

''எஸ் மீரா. டெல்மீ. '' என்றான் உற்சாகமாய்.

''தேவையற்ற எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டாம் ஸார். அப்பாவிடம் பேசிய விஷயத்தை பற்றி சொல்கிறேன். எனக்கு அதில் இஷ்டம் இல்லை.''

சஞ்சய் முகத்தில் இருந்த மொத்த உற்சாகமும் வடிந்துவிட, ''ஏன் மீரா! என்னை பிடிக்கவில்லையா'' கேட்கும் போதே நாக்கு உலர்ந்து விட அவசரமாய் மேஜை மீதிருந்த நீரை எடுத்து பருகினான். மீரா தரையிலிருந்த பார்வையை எடுக்காமலே நின்றாள்.

''சொல்லுங்கள் மீரா. ஏன் என்னை பிடிக்கவில்லை. நான் அழகா இல்லையா. படித்திருக்கிறேன். எந்த கெட்ட பழக்கமும் பழகவில்லை. இதோ இந்த ஆறுமாடிக்கட்டிடத்திற்கும் சொந்தக்காரன். கார் பங்களா பணம் சொத்து என என்ன இல்லை என்னிடம். ஏன் என்னை பிடிக்காமல் போனது. டெல்மீ மீரா'' படபடத்தான் சஞ்சய்.

நிமிர்ந்து பார்த்தாள் மீரா ''எல்லாம் உங்களிடம் இருக்கலாம் ஆனால் என் மனதில் நீங்கள் இல்லையே சார். எனக்கு உங்களை மட்டுமல்ல வேறு எந்த ஆணையும் பிடிக்காது.''

''அதான் ஏன்'' என்றான் பிடிவாதமாய்.

''ஏன்னா! எம்மனசில கண்ணன் இருக்கார் சார். அவரைத்தவிர வேற யார்க்கும் இடமில்லை. ஸாரி ஸார்'' என்றவளை கையை உயர்த்தி தடுத்தான் சஞ்சய்.

''கண்ணனா? யார் கொஞ்சம் உயரமாய்.. ஹேண்ட்ஸமாய் அன்று வந்தாரே அவரா? அவரை பார்க்கவிரும்பவில்லை என்று அனுப்பிவிட்டாயே. உண்மையைச் சொல்வதென்றால் அதன் பிறகு தானே என் மனம் உன்னை நேசிக்க ஆரம்பித்தது. '' என்றான்.

ஆனந்தமாய் அதிர்ந்தாள் மீரா. '' என்ன? கண்ணன் வந்தாரா. எப்போது? எப்படி. என்னிடம் யாரும் சொல்லவில்லையே. நான் அவரைப்



பார்க்க விரும்பவில்லையென்று யார் சொன்னது? '' படபடப்பாய் கேட்டாள்.

''அக்காதான் சொன்னாள். அதன்பிறகு கூட இரண்டு முறை வந்தாரே. போன்கூட செய்தார் என்று நினைக்கிறேன். அக்காதான் அவன் சரியில்லை. இவன் தொல்லை தாங்காமல்தான் மீரா இங்கு வேலைக்கு வந்திருக்கிறாள். இனி இவன் வந்தால் உள்ளே விடாதே'' என என்னிடம் எச்சரித்தாள். உன்னிடம் சொன்னால் நீ வருத்தப்படுவாய் என்று சொல்லவேண்டாம் என்றாள். ஏன் மீரா உனக்கும் அவருக்கும் ஏதாவது பிரச்னையா'' உண்மையான அக்கறையோடு சஞ்சய் கேட்கவும் அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

''எனக்கே தெரியாம என்னைச் சுற்றி என்னவெல்லாமோ நடந்திருக்கு ஸார். நான் தான் எதையும் புரிஞ்சுக்காம யார் மனதையும் புரிந்து கொள்ளாமல் கண்மூடித்தனமாய் இருந்திருக்கிறேன். ஸார் என் மனசிலே எப்பவுமே கண்ணன் தான் இருக்கார். என்னையறியாமல் நான் உங்களை காயப்படுத்தியிருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்.'' கைகளை கூப்பினாள்.

''ஓ.! மீரா பிளீஸ். இப்படியெல்லாம் பேசாதீங்க. வீட்ல வரன் பார்த்தாங்க. எனக்கு அமைதியான சின்ஸியரான உன்னை ரொம்ப பிடித்திருந்ததால் உன்னை பெண்கேட்கும்படி சொன்னேன். மற்றபடி உன் மனதில் ஒருவர் இருப்பது எனக்கு தெரியாது மீரா. ரியலி ஐ'ம் வெரி ஸாரி. ஓ.கே. நீங்க கிளம்புங்க. அப்புறம் ஒரு விஷயம் உங்களுக்குள்ள எந்த பிரச்னை என்றாலும் நேருக்குநேராய் பேசிவிடுங்கள். சில நிமிட பேச்சு எந்த பிரச்னையையும் சால்வ் பண்ணிவிடும். விலகியிருந்து ஏன் உங்கள் மனங்களை நீங்களே ரணமாக்கிக் கொள்கிறீர்கள். ஓ.கே. மீரா. கிளம்புங்கள். பெஸ்ட் ஆப்லக்'' புன்னகையோடு கூறியவனை கண்களில் கண்ணீரோடு கைகூப்பி நன்றி உரைத்துவிட்டு கிளம்பினாள்.

பேருந்து நிறுத்தத்தை அடைந்து காலியான பேருந்தில் ஏறி ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து கொண்டாள். மனம் ஓலமிட்டது.

'கண்ணா என்னைத் தேடி நீங்கள் வீடுவந்த போதெல்லாம் உங்கள்

''தினமும் அரைமூடி 'டானிக்' சாப்பிடுங்க''

''டாக்டர் அரை மூடாமல் டானிக்கைச் சாப்பிடக் கூடாதா?''

-எம். அசோ[illegible]
அரவக்குறி[illegible]



27/05/2011 15:36

கண்ணில் படாமல் மறைந்து கொண்டேனே. அப்படியும் என் மீது கோபம் கொள்ளாமல் என்னை தேடி ஹாஸ்பிடலுக்கே வந்தீர்களா. போன் செய்தீர்களா? கடவுளே! எதையும் உணர்ந்து கொள்ளாமல் இத்தனை நாள் நானும் தவித்து உங்களையும் தவிக்கவிட்டேனே. எத்தனை பெரிய பாவிநான். என்னை மன்னிப்பீர்களா கண்ணன், நாளை நான் வருகிறேன் என்றால் வெளியூர் போய்விடுவதாகச் சொன்னீர்களே. இதோ இப்போதே கிளம்பிவிட்டேன் கண்ணா. எனக்கு உங்களைப் பார்க்க வேண்டும். உடனே பார்க்க வேண்டும். பேசவேண்டும்.'

பேருந்து நிறைந்து விட்டிருக்க நடத்துநர் காது கிழியும்படி விசில் கொடுத்தார். பேருந்து புறப்பட்டது மீரா கைப்பையிலிருந்த செல்லை எடுத்து உயிர்ப்பித்தாள். காலையில் பேசினாரே கண்ணன் அந்த நம்பருக்கு போன் பண்ணி பேசினால் என்ன? இன்கமிங்காலில் அந்த நம்பரை எடுத்து டயல் செய்தாள். நீங்கள் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர் எண் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது என்றபதில்தான் வந்தது.

மீண்டும் மீண்டும் முயற்சித்து சோர்ந்து போனாள். பேசாமல் அக்காவின் போனில் பேசலாமா? எப்படி பேசுவது? கண்ணனிடம் பேச வேண்டும் என்று எப்படிச் சொல்ல முடியும்? பேருந்து கூடுவாஞ்சேரி தாண்டி போய்க் கொண்டிருந்தது. தாம்பரத்தில் இறங்கு வேறு பஸ்ஸில் மாற வேண்டும். உடனே பஸ் கிடைக்குமோ என்னவோ. பேசாமல் அத்தானை வரச்சொல்லியிருக்கலாமோ? அத்தான் நினைவுவந்தவுடன் நிமிர்ந்தாள். பேசாமல் அத்தான் போனில் பேசினால் என்ன? அத்தான் மறைமுகமாகப் பேசியதைப் பார்த்தால் நிச்சயமாய் அத்தானுக்கு எல்லா விஷயமும் தெரிந்திருக்க வேண்டும். நான் போன் செய்தால் நான்கேட்காமலேயே கண்ணனிடம் கொடுப்பார். இன்னும் சில நிமிடங்களில் தாம்பரம் பஸ்ஸ்டாண்ட் வந்துவிடுமே. சரி இறங்கி போரூர் பஸ்ஸில் ஏறியபிறகு போன் பண்ணிக் கொள்ளலாம். முடிவுடன் செல்லை கைப்பையினுள் வைத்த விநாடி அது சிணுங்கியது. யார்? ஆவலுடன் எடுத்துப் பார்த்தாள். நீண்ட எண்கள் பெயரில்லாமல் வர போன் ஆன் செய்து ''ஹலோ'' என்றாள்.

''ஹலோ மீரா நான் கௌஷிக் பேசுகிறேன்.

லண்டன்ல இருந்து'' என்ற குரல் கேட்டதும் சுறுசுறுவென கோபம் ஏறியது. இவனா? இவனுக்கு எப்படி இந்த எண் கிடைத்தது. போன் என்னிடம் உள்ளதாக இவனிடம் யார் சொன்னது. என்னிடம் பேச என்ன இருக்கிறது. தறிகெட்டு ஓடிய மனதை இழுத்து பிடித்தாள் மீரா.



''மெகா சீரியல் டைரக்டரை பொண்ணுக்கு நிச்சயம் பண்ணினீங்களே! எப்போ கல்யாணம்?''

''ஒரு வருடம் கழிச்சு''

-செல்வராஜா
சேலம்



''உனக்கு யார்'' என தொடங்கும் போதே கௌஷிக் குறுக்கிட்டான். ''இந்த போன் நம்பர் இது இந்த நிமிஷம் உன் கையில் இருப்பது எல்லாம் எனக்கு தெரியும். உபயம் மிஸ்டர் ராதாகிருஷ்ணன். மீரா நான் ஐ.எஸ்.டி.யில் பேசுகிறேன். ஸோ இந்த மாதிரி சின்னவிஷயங்களை விட்டுவிடுவோம். நான் உங்களிடம் முக்கியமான விஷயம் நிறைய பேச வேண்டியது இருக்கு. கொஞ்சம் கோபப்படாம நிதானமா நான் பேசுறதை கேளுங்க நான் எல்லாம் சொன்னபிறகு நீங்க உங்க முடிவைச் சொன்னாப்போதும் சரியா. ஏன் மீரா நீங்க இப்படிப் பண்ணினீங்க.'' எனத் தொடங்கியவன் பேசபேச மீராவின் இதயம் பன்மடங்கு துடிக்க ஆரம்பித்தது. ஊற்றெடுத்த கண்ணீரை அடக்க முடியாமல் கர்ச்சீப்பால் வாயை மூடிக்கொண்டாள். பதில் பேச வார்த்தை வராமல் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது.

**திசையறியாமல் நானே - இங்கு**
**தினசரி வாடினேனே - இந்த**
**பறவையின் வேடந்தாங்கல் - உந்தன்**
**மனமென்னும் வீடு தானே!**

## 19

''ஏம்மா! பஸ் நின்னு பத்து நிமிஷமாச்சு. இறங்கும்மா. அப்படி என்னதான் பேசுவீங்களோ சுற்றுப்புறம் மறந்து'' நடத்துநர் முணுமுணுத்துவிட்டு போக அவசரமாய் பையை கையிலெடுத்துக் கொண்டு இறங்கினாள். கால்கள் இரண்டும் நடுங்க சற்று தள்ளி போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டாள். காதோடு வைத்திருந்த போனில் கௌஷிக் இன்னமும் பேசிக்கொண்டிருந்தான்.

''இப்ப எல்லாம் புரிஞ்சுதா. கண்ணன் பாவம் மீரா. இப்போ ரொம்ப மோசமான நிலைமைல இருக்காராம். இராதாகிருஷ்ணன் எங்கிட்ட சொல்லிவருத்தப்பட்டார். எங்கேயாவது வெளிநாட்டுல போய் செட்டிலாய்டுறேன்னு சொல்றாராம். ப்ளீஸ் மீரா. கண்ணன் அந்த வீட்டுக்கு செல்லப்பிள்ளை. அவர் போயிட்டா அவங்க அம்மாவால அதைத் தாங்க முடியுமா? அந்தத் தாயோட வேதனை உங்களை விடுமா. நீங்க உடனே கிளம்புங்க. கண்ணனை பாருங்க. எல்லாம் நல்லபடியா நடக்கட்டும். போறீங்களா?''

''நான் தாம்பரம் வரை வந்துட்டேன். அடுத்த பஸ்ல ஏறிப்போக வேண்டியதுதான். ஸாரி கௌஷிக் உங்களை நான் ரொம்ப தப்பா நினைச்சுட்டேன். வெரி ஸாரி''

''இட்ஸ் ஓ.கே. மத்தவங்க பார்வையில் நான் வில்லனாவே இருக்கிறேன். உங்க கல்யாணம் முடியறவரை! அதோட உங்களையும் கண்ணனையும் கூட தப்பா நினைக்க வாய்[illegible] தே

படுற மாதிரி பேசி எல்லார் கோபத்தையும் எம்மேல திருப்பிட்டு கிளம்பி வந்திட்டேன். அப்பவும் திரும்ப திரும்ப சொன்னேனே உங்களுக்கு கண்ணன்தான் மாப்பிள்ளைன்னு அப்பவே புரிஞ்சிருக்க வேண்டாமா? முதலிலே தெரியாமல் போய்விட்டது. பிறகுதான் கண்ணனின் பார்வையும் உங்களுடைய ஒதுக்கமும் புரிந்து போயிற்று. எப்படி விலகுவது என்று யோசித்தபோதுதான் ராதிகா கிடைத்தாள். அவளையும் என் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொண்டேன்.

பாவம் அவளுக்கு ஏராளமான டோஸ் கிடைத்திருக்கிறது. எனக்காக ஏற்றுக் கொண்டிருக்கிறாள். அவளும் இப்போது இங்குதான் பிஹெச்டி பண்ணிக் கொண்டிருக்கிறாள். படிப்பு முடிந்தவுடன் திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்துள்ளோம். அங்கிருந்து கிளம்பி பின்பு ராதாகிருஷ்ணன் ஸாரிடம் மட்டும் போன் செய்து உண்மையைச் சொல்லி அங்குள்ள நிலவரங்களை தெரிந்து கொண்டேன். நான் ஒன்று நினைக்க அங்கு பிரச்சனை வேறுவிதமாகிப் போய்விட்டதில் எனக்கு ரொம்பவும் வருத்தம். என்னால் ஏற்பட்ட பிரச்சனையை எப்படி தீர்ப்பதுன்னு மூளையை கசக்கினேன். இன்றுதான் ராதாகிருஷ்ணன் போன் செய்து இந்த நம்பரைக் கொடுத்து உங்களிடம் பேசச்சொன்னார். மீரா, கண்ணன் மீது எந்த தவறும் இல்லை. பாவம் அவர் உங்களை விரும்பியதை உங்களிடமும் சொல்லமுடியாமல் உங்களை மறக்கவும் முடியாமல் பட்டபாடு எனக்கு நன்றாகவே தெரியும். இனியும் அவரை வதைக்க வேண்டாம். சரியா மீரா''

''எனக்கு இப்போதான் எல்லாமே புரிந்தது கௌஷிக்.

அதனாலதான் கிளம்பிட்டேன். அவருக்கு போன் பண்ணினாலும் லைன் கிடைக்கல்ல''

''ஏன் போன் பண்றீங்க. சஸ்பென்ஸா போய் அவர் முன்னால நில்லுங்க. உங்க கண்ணன் எத்தனை சந்தோஷப்பட்டார்னு எனக்கு போன் பண்ணுங்க. சரியா? போனை வெச்சிடவா. ஹேப்பி மேரீட் லைப். அட்வான்ஸ் காங்கிராட்ஸ் பை. '' என்றவாறு போனை வைத்தான் மனம் முழுக்க சந்தோஷம் அலையடித்தது. எத்தனை சின்ன விஷயம் அதை பேசிதீர்க்காமல் ஊதி ஊதி இத்தனை பெரிதாகிவிட்டதே. எதையும் யோசிக்காமல் என் கோபத்தால் இத்தனை இன்பநாட்களை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். போரூர் செல்லும் பேருந்து வர கண்ணனின் நினைவுகளோடு உற்சாகமாய் ஓடி ஏறினாள்.

லட்சுமி பேலஸ் மாலை விளக்கொளியில் ஜொலித்துக் கொண்டிருந்தது. முதன்முறையாய் பார்த்தபோது எப்படி பிரமித்து நின்றாளோ அப்படியே இன்னும் நின்று கொண்டிருந்தாள் மீரா. நாணமும் தயக்கமும், ஆர்வமும் போட்டிபோட நின்றவளை சரசுதான் எதிர்கொண்டாள்.

''அய். சின்னம்மா வந்துட்டாங்க. வாங்க சின்னம்மா. சுகமா இருக்கீங்களா? ஏம்மா இத்தினிநா வராம இருந்திட்டீங்க. ராதாம்மா ரொம்ப ஏங்கிபோயிட்டாக பாவம். உள்ளார வாங்க. உங்களைப் பார்த்ததும் துள்ளிக் குதிக்கப் போறாங்க.'' உண்மையான அன்போடு கையிலிருந்த பையை வாங்கிக்கொண்டாள் சரசு.



''சரசு குழந்தை நல்லபடியா பொறந்ததா. என்ன குழந்தை உம்புருஷன் ஒழுங்கா இருக்காரா'' அக்கறையாய் கேட்டாள்.

''ஆம்பளபுள்ள பொறந்திருக்கும்மா. என் ராசா பொறந்த நேரம் எம்புருஷன் பொட்டிப்பாம்பா அடங்கிட்டாரே. எப்பவும் குழந்தையோடத்தான் இருக்காரு. இருட்டிப்போச்சல்ல. அதான் வீட்டுக்கு போவாம்னு கிளம்பினேன். '' என்றாள் சரசு.

'' நீ போ சரசு. நான் உள்ளே போறேன்.''

''அதெப்டிம்மா உங்களை உள்ளார கூட்டிட்டு போக வேணாமா அவரு வந்துதான் உன்னை கூட்டிட்டு போவாரு. நீங்க வாங்கம்மா'' என்றவாறு அழைத்துச் செல்ல மீராவிற்கு கொஞ்சம் தெம்பாகத்தான் இருந்தது. நேரிடையாக யாரையும் எதிர் கொள்வதைவிட சரசு அருகிலிருந்தால் பரவாயில்லைதான்.

''ஆமா! சரசு. நாளைக்கு பூ முடிக்கிறதுக்கு நிறையபேர் வர்றாங்களா'' பேச்சுக் கொடுத்தாள்.

''இல்லிங்கம்மா, சும்மா வீட்டாளுங்க மட்டும்தான். பாரதியம்மா மாப்பிள்ளையோட வந்திருக்காங்க. உங்க அம்மா, அப்பா இப்ப நீங்க. பெரியம்மாதான் இப்பவே எல்லாரையும் கூட்டி செஞ்சா கண்ணு பட்டுடும்னு சொல்லிட்டாங்க. அதோட ராதாம்மாவும் ரொம்ப இளைச்சுப் போயி தெரியறாங்களா. கூட்டம் சேர்ந்தா ரொம்ப களைச்சுப் போயிடுமாம். அதனால பெரிய வளைகாப்புக்கு ஊரையே கூட்டிக்கலாம்னு சொல்லிட்டாங்க.. ராதா அம்மாவும் ரொம்பத்தான் கஷ்டப்பட்டுப் போயிட்டாங்க. எது சாப்பிட்டாலும் ஒரே வாந்திதான் பாவம் இப்படித்தான் ஒரு பத்துநாளா ஆகாரம் உள்ளே இறங்குது. '' பேசிக் கொண்டே வர விளையாடிக் கொண்டிருந்த வாண்டுகள் மீராவைக் கண்டு கொண்டன.


''ஹேய்! மீரா ஆன்ட்டி வந்தாச்சு. மீரா ஆன்ட்டி வந்தாச்சு'' என குதூகலிக்க அவர்களின் குரல் மற்றவர்களை திசைதிருப்பியது. அனைவருமே உற்சாகமாய் வரவேற்க மீராவிற்கு கூசியது. யாரும் சிறு அலட்சியமும் முகச்சுளிப்பும் இன்றி அவள் வரவை ஆவலாக எதிர்பார்த்திருந்ததைப் போல் வரவேற்க நெஞ்சம் விம்மியது.

''தலைவர் கட்சிக் கூட்டத்திலே இடைத்தேர்தல் நடத்தினாரே யார் வெற்றி பெற்றார்கள்?

''மகளிர் அணி மாலதியின் இடைதான் பெஸ்ட்ன்னுட்டார்!''

-எஸ். சீனிவாச

சென்





''ஐய்யோ எமன்...எமன்...''
''டாக்டரை பார்த்தெல்லாம் அப்படி சத்தம் போடக் கூடாது...?''
-கே.பிரசன்ன குமார்
குடந்தை

''என்ன மீரா! இங்கே ராதான்னு ஒரு அக்கா இருப்பதை மறந்துவிட்டாயா?'' என்றாள் சிவசங்கரி.

''என்னை கூட பார்க்கணும்னு தோணலியா'' சரோஜா

''என் கல்யாணத்துக்கு கூட வரல்ல இல்ல. உம்பேச்சுக்காய்'' கேலியாய் பாரதி.

''எங்களைத் தான் மறந்துவிட்டாய். ராதாவையுமா மறந்து விட்டாய்'' சுபத்ரா.

''உங்க ஊருக்கு போனதும் எல்லாமே மறந்திடுமோ. அப்பா.. பரீட்சைக்கு படிக்கிற யாரும் உங்க ஊருக்கு வரக்கூடாது.'' இது உமாபதி.

''மீ. மீரா.. வந்திட்டியா. எத்தினி நாளாச்சு'' கண்களில் மின்னிய நீரோடு தாயின் கை பற்றிக் கொண்டு மெதுவாக வந்த ராதாவை ஓடிச்சென்று அணைத்துக் கொண்டாள். '' ஸாரிக்கா. ஸாரி. வெரி ஸாரி. உன்னை வந்து பார்க்காதது எத்தனை பெரியதப்பு. என்னை மன்னிச்சிடுக்கா. நான் அப்படி இருந்திருக்கக் கூடாது.'' விம்மியவளை தோள் அணைத்து சமாதானம் செய்தாள் ராதா.

மீராவிற்கு பின்னால் நின்று மனைவியைப் பார்த்து பார்வையாலே, ''எப்படி? நான் சொன்னது நடந்ததா'' என்றான் ராதா கிருஷ்ணன். சந்தோஷமாய் தலையசைத்து பார்வையால் நன்றி கூறினாள்.

''மாமா எங்கே? அப்பாவையும் காணோம்.'' தேடினாள் மீரா. ''சரி. சரி.வா . ஏதாவது சாப்பிடு. அப்பாவும் மாமாவும் வெளியே போயிருக்காங்க. நீ வா'' தங்கையின் கை பற்றிக் கொண்டு நடந்தவளை அதட்டினான் உமாபதி.

''ஏன் அண்ணி! உங்க தங்கையைப் பார்த்ததும் டாக்டர் சொன்னதெல்லாம் மறந்திடுச்சா. மெதுவா நடங்க. முதல்ல இப்படி உட்காருங்க. ரொம்பவும் உடம்பை வருத்திக்கக் கூடாதுன்னு டாக்டர் சொன்னாங்கல்ல'' என்றவாறே சோபாவில் அமரவைத்தான். அதற்குள் சுபத்ரா காபி டிபனோடு வர அவர்களோடு அமர்ந்து கொண்டாள் மீரா. பொதுவான கேலி கிண்டலாய் பேச்சு நகர மீராவின் கண்கள் அலைபாய்ந்தது. கண்ணா எல்லோரும் இங்கிருக்க நீங்கள் மட்டும் எங்கே சென்றுவிட்டீர்கள் கண்ணா. உங்கள் மீரா வந்திருக்கிறேன். உங்களைத் தேடி. உங்கள் இல்லத்திற்கே வந்திருக்கிறேன். இதை உங்கள் உள்மனம் உங்களுக்கு தெரிவிக்கவில்லையா. எங்கிருக்கிறீர்கள் கண்ணா. நான் உங்களைப் பார்க்க வேண்டும். நிறைய பேசவேண்டும். உங்களை பிரிந்த நாள் முதலாய் உங்களை மட்டும் நினைத்திருந்த பொழுதுகளை கதைகதையாய் சொல்ல வேண்டும் உங்கள் மார்பில் சாய்ந்து என் துயரம் தீர அழுது தீர்க்க வேண்டும். இனி ஒருபொழுதும் உங்களை பிரிந்திராமல் நிழலாய் உடன்வர வேண்டும். என் கண்ணா என் மனதில் ஒன்று நினைத்தால் உடனே கண்டுபிடித்துவிடுவீர்களே டெலிபதிபோல், இப்போது என் மனக்குரல் உங்கள் காதுகளை எட்டவில்லையா? எட்டாத தூரத்திற்கு சென்று விட்டீர்களா கண்ணன். ஒருவேளை.. ஒருவேளை நான் வருகிறேன் என்று தெரிந்ததும் வெளியூர் சென்றிருப்பானோ.

இந்த எண்ணம் தோன்றியவுடன் மனதில் உள்ள அத்தனை மகிழ்ச்சியும் உற்சாகமும் வடிந்து போயிற்று. இத்தனை ஆசைப்பட்டு ஓடிவந்தும் கண்ணனை பார்க்க முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது. பேசபவர்களிடம் மெதுவாய் தலையை மட்டும் ஆட்டி பதிலளித்துக் கொண்டிருந்தாள். ராதாவின் கைகளில் மருதாணியால் கோலம் போட்டுக் கொண்டிருந்த பாரதி

''என்ன மீரா! நான் இத்தனை வாட்டி கேட்கிறேன். காதில் விழலையா. எங்கே போயிட்டீங்க. கனவுலகத்திற்கா'' என்றாள் குறும்பாய்.

''ஆமாம் மீரா இங்கேயே இல்லை. ரொம்ப முக்கியமானவரை தேடுகிறாள். ஆனால் மீரா நீ தேடும் நபர் இங்கில்லை.'' என்றான் ராதாகிருஷ்ணன்.

## 20

**காவியம் போல வாழ்ந்திருப்போம்**
**ஆயிரம் நிலவை பார்த்திருப்போம்**
**காண்போமே எந்நாளும் திருநாள்**

திக்கென நிமிர்ந்தாள் மீரா.'' என்ன அத்தான் சொல்றீங்க. நான்.. நான் யாரை.. தேடுகிறேன்'' வாய் குழறியது.

''உன் அப்பாவைத்தானே தேடுகிறாய். உன் அப்பா தன் நண்பரோடு வெளிவேலையாக போயிருக்கிறார்கள். அதைத்தான் சொன்னேன். நீ யாரையென்று நினைத்தாய்? ''கண்களில் குறும்பு மின்ன கேலியாய் கேட்டான் ராதாகிருஷ்ணன்.

ஒரு நிம்மதி பெருமூச்சோடு அடுத்த பதிலை யோசித்தாள். ''பாட்டி.. பாட்டியைக் காணோமே. பாட்டியைத் தான் தேடினேன்.'' சட்டென அவள் கூறவும் இல்லாடிதான் எ... கிற மீரா நீ அவங்ககிட்ட கூட ...

27/05/2011 15:36

ரொம்ப கோபம். மேல் மாடியில பர்ஸ்ட் ரூம்ல போய்ப்பார். நீ போனதி லிருந்து அந்த அறையிலதான் ஜெயில் மாதிரி அடைப்பட்டு கிடக்கிறார் கள். எப்போதும் உன் நினைப்புதான். உன் பெயர்தான். எங்களையெல் லாம் மறந்துவிட்டார். மீரா வருவாளா வந்துட்டாளான்னு உன் புராணம் தான் எப்போதும். நீ வந்தால் வந்தவுடன் கூப்பிடுகிறோம் என்றோம் போம்மா போய்ப்பார். அந்த சிறைப்பறவையை வெளிய வரச்சொல்'' என்றான் சோகமாய்.

மீரா குழப்பமாய் பார்த்தாள். ''பாட்டி ஏன் மாடிக்குப் போனார்கள். அவர்களுக்கு மூட்டுவலி உண்டே. அதுவும் தாத்தா வீட்டில் தானே இருப் பார்கள். இப்போது என்ன புதிதாய்.. அதுவும் மாடியில்.''

சந்தேகமாகக் கேட்டாள்.

''எங்களுக்கு என்னம்மா தெரியும். நீயாச்சு. உம்பாட்டியாச்சு நீயே கேளேன். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று. மதியம் சாப்பிடக் கூட வர வில்லை. பிளீஸ் போய் கூட்டிட்டு வர்றியா.'' மீண்டும் அவனே பேச மற் றவர்களை திரும்பிப் பார்த்தாள் மீரா. அனைவரும் புன்னகை முகமாய் இயல்பாய் இருக்க. மெல்ல எழுந்தாள். அத்தான் சொல்வது உண்மையா? கேலியா? பாட்டி எங்கேயென்று கேட்டுவிட்டு போய்ப் பார்க்காமல் இருந் தால் நன்றாயிராதே. தயங்கி நின்றாள்.

''போம்மா! பாட்டி மேலே வெயிட்டிங். ச்சே பாட்டி வெயிட்டிங். போ. போய் கையோட அழைச்சிட்டுவா'' மீண்டும் துரிதப்படுத்தி னான். 'ம்' அரைமனதாய் தலையாட்டிவிட்டு மெல்ல படியேறினாள் மீரா. மாடியேறிச் செல்லும்வரை பார்த்துவிட்டு உள் அறையை நோக்கி மெல்ல குரல் கொடுத்தான். ''பாட்டி பிளீஸ்கம்.'' லட்சுமி அம்மாள் மெல்ல வெளியே வந்தாள்'' ஏண்டா படவா! என்னை உள்ளே போகச் சொல் லிட்டு மீராவை ஏண்டா மாடிக்கு போகச் சொல்றே.''

''எல்லாம் காரணமாகத்தான் இன்னும் பத்து நிமிஷத்தில ம்ஹீம் மீரா போகிற வேகத்தைப் பார்த்தால் பத்து நிமிஷமில்ல இன்னும் அரை மணி நேரத்தில எல்லாம் சரியாகிடும். அப்புறம் சொல்கிறேன்.'' என்றான் ரக சியமாய்.

''என்னங்க ரகசியம்! எங்கிட்ட மட்டும் சொல்லுங்க பிளீஸ்'' என்ற ராதாவிடம் ''நோ டார்லிங். இன்னும் கொஞ்சநேரம்'' என்றான்.

''என்கிட்டயேயாவது சொல்லுடா. அவளை ஏன் கண்ணன் ரூமுக்கு போகச் சொன்னாய்'' என்ற அன்னையை ''உஷ்'' என வாயில் ஒற்றை விரலை வைத்து அடக்கினான். ''யாரும் பேசக்கூடாது'' என்றான் அடிக் குரலில். அனைவரும் வாயில் கைவைத்துக் கொள்ள பாரதியும் ராதாகி ருஷ்ணனும் ஒருவரையொருவர் அர்த்தமாய் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மாடி அமைதியாய் இருந்தது. அனைவரும் கீழே இருக்கும் போது இந்தப் பாட்டிக்கு மாடியில் என்ன வேலை? யோசனையாய் முதல் அறைக்கு வந்தாள் கதவு லேசாய் திறந்திருக்க அதை நன்றாக திறந்து உள்ளே நுழைந்தவள் அப்படியே நின்றுவிட்டாள். அவள் நினைத்து வந் ததைப் போல் பாட்டி இல்லை. கண்ணன் இருந்தான். அவள் தேடிவந்த



சொர்க்கம் கட்டிலில் இருந்தது. இரண்டு தலையணைகளை வைத்து அதன் மேல் தன் இரு கைகளையும் தலைக்கு அடியில் வைத்துக் கொண்டு நேராய் படுத்திருந்தான் கண்ணன். கண் கள் மூடியிருந்தது. தூங்குகி றாரோ. இந்த நேரம் படுக்கமாட் டாரே. உடம்புக்கு எதுவும். பத றிப்போய் கட்டிலருகே சென் றாள் மீரா. உடம்பில் லேசாய் சல னம் தெரிந்தது என்றாலும் கண் களைத் திறக்காமல் படுத்திருந் தான்.



''கபாலியோட பசங்க நாகரிகமா கொள்ளை அடிக்கிறாங்க...''

''எப்படி?''

''ஒருத்தன் மெட்ரிக் ஸ்கூல் நடத்துறான் ...இன்னொருத்தன் தனியார் ஆஸ்பிட்டல் நடத்தறான்''

-கே.பிரசன்ன குமார்
குடந்தை

பனியனும் லுங்கியுமாய் படுத்திருந்த கண்ணன் மெலிந்தி ருந்தான். எப்போதும் பளபளப் போடு இருக்கும் கன்னம் முள்பு தராய் காட்சியளித்தது. தலை கலைந்து காய்ந்து போய்க்கிடந் தது. முகம் சோர்வையாய் இருந் தது. வீட்டில் இத்தனைபேர் இருக்கும்போது இப்படி ஒதுங்கி விளக்கு வைக்கும் நேரம் அறையில் லைட் போடாமல் படுத்திருக்கிறாரே. இப்படியா நொந்துவிட்டார் என் கண்ணன். அப்படியானால் அத்தான் சொன்னது என் கண்ணனைத்தானா?

ஆறுமாதமாய் இந்த சிறையில்தான் இருக்கிறீர்களா கண்ணன்? எத் தனை துடிப்பான இளைஞன். என்னால் முடங்கிவிட்டீர்களா கண்ணன். கண்களில் நீர்நிறைந்து பார்வையை மறைத்தது. கையெட்டும் தூரத்தில் இருந்த ஸ்விட்சைப் போட்டாள். அறையெங்கும் வெளிச்சம் பரவியது. கண்களைச் சுருக்கினான் கண்ணன். ''யாரது. லைட்டை ஆப் பண்ணிட்டு போங்க.'' என்று புரண்டு படுத்தான். அதற்கு மேலும் தாங்காமல் கட்டி லில் அமர்ந்து அவனது தோள் பற்றி திருப்பினாள் மீரா. நெற்றியில் கலைந் திருந்த முடியை ஒதுக்கிவிட்டு அழுத்தமாய் முத்தமிட்டாள். தன் நெற்றி யில் விழுந்த சூடான முத்தத்தில் கண்ணன் சிரமமாய் கண்களைத் திறந் தான். தனக்கு வெகு அருகில் மீரா அமர்ந்திருக்க ஒருகணம் பிரமித்துப் போனான். கனவில்லையே! சுற்றுமுற்றும் திரும்பிப்பார்த்தான். இது கன வல்ல நிஜம். சட்டென எழுந்து அமர்ந்தான். ''மீ...மீரா'' என்றான் ''வந் துவிட்டாயா மீரா. நிஜம்தானே. இது கனவில்லையே.'' அப்படியே அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் மீரா.

''கண்ணன்! வந்துவிட்டேன் கண்...

27/05/2011 15:37

மல் சென்றேனே. எப்படிப்பட்ட பாவி நான். என் கண்ணனை இந்த நிலையில் தள்ளிவிட்டேனே. என்னை மன்னிப்பீர்களா கண்ணன்'' தேம்பியவளை அணைத்து தேற்றினான். நானும் அப்படி செய்திருக்கக் கூடாது மீரா. நான்தான் தவறு செய்தேன். பாவம் நீ என்ன செய்வாய். நீ எத்தனை அழுதாய். உன் கண்ணீருக்கு காரணம் நான்தானே. நீதான் என்னை மன்னிக்க வேண்டும் மீரா. ''நானும் உன்னிடம் எல்லாவற்றையும் பேசிவிட எத்தனையோ முயற்சித்தேன். ஒன்று கூட வில்லை. என்மீதே எனக்கு கோபம். அதனால் தான் எனக்கு நானே இந்ததண்டனையை கொடுத்துக் கொண்டேன். காலை உன்குரலைக் கேட்டபின்புதான் ஏதோ கொஞ்சம் தெம்புவந்தது. அதிலும் நீ போனைகட் பண்ணியதும் வெகுவாய் துடித்துப்போனேன்''

''இல்லை கண்ணா! நான் கட் பண்ணவில்லை. சார்ஜ் சுத்தமாய் இறங்கிவிட்டது. மீண்டும் பண்ணுவீர்கள் என எதிர்பார்த்தேன். பிறகு நானே ட்ரை பண்ணினேன். ஸ்விட்ச் ஆப் என்று தான் வந்தது.''

''ஓ. ஸாரிடா, நான்தான் நிறைய போன்கால் வந்து டிஸ்டர்ப் பண்ணியதால் ஆப் செய்து விட்டேன்''. என்றவனை இறுக்கிக் கொண்டாள்.

''நீங்கள் ஹாஸ்பிடல் வந்தது கூட எனக்கு இன்றுதான் தெரியும் கண்ணன். ஸாரிப்பா, அந்த மேம் ஏன் எங்கிட்ட சொல்லவில்லை என்றே தெரியாது''

''அவங்க தம்பிக்காக உன்னை பேசி வைத்துவிட்டதாகவும் இப்படி வந்து பார்ப்பது அநாகரீகம் என்றும் சொல்லிவிட்டார்கள் மீரா. ஆனாலும் இது உண்மையா என தெரிந்து கொள்ள போன்கூட செய்தேன். அதையும் அவர் அனுமதிக்கவில்லை. எல்லாம் விதிதானோ'' பெருமூச்சுவிட்டான்.

''மீரா. மீரா. இப்போது என் மனம் புரிந்துவிட்டது தானே. இனி என்னை விட்டு போகமாட்டாயே. நீ இல்லாமல் இந்த கண்ணனால் வாழ முடியாது மீரா'' குரல் கம்ம, மெல்ல தலையை உயர்த்தினாள். கன்னங்களை வருடினாள். நெற்றியில் கண்களில் கன்னங்களில் மெல்ல முத்தமிட்டாள். பரிவோடு தாயாய் மாறி தன் மடியில் அவனை சாய்த்துக் கொண்டாள் மீரா'' இல்லை கண்ணன். இனி ஒரு போதும் உங்களை விட்டு பிரியமாட்டேன் மரணம் வரை ''சட்டென அவள் வாயை மூடினான்.'' ''அப்போதும் பிரியமாட்டேன். உன்னுடனே நானும் வருவேன்.'' என்றாள் கண்களில் நேசம் மின்ன.

''ஓ.கே.ஓ.கே. நீங்களா வெளியேவர்றீங்களா. இல்லே நாங்க உள்ளே வரட்டுமா. வரலாமில்ல நாங்க'' என்ற குரலில் இருவரும் பதறி எழுந்து விலகி நிற்க, ராதாகிருஷ்ணனும் பாரதியும் கௌதமும் உள்ளே வந்தனர் கண்களில் முறைப்போடு. மீராவும் கண்ணனும் குழப்பமாய் பார்க்க. ''இத்தனை அன்பை வைத்துக் கொண்டுதான் மாதக்கணக்காய் கண்ணா மூச்சு ஆடினீர்களாக்கும். வாருங்கள் கீழே. எல்லோரும் உங்களை விசாரிக்க தயாராக இருக்கிறார்கள்.'' என்றாள் பாரதி கண்களை உருட்டி மிரட்டியவாறு.



''ஐயோ பாரதி! அப்படி கண்களை உருட்டாதே, பாவம் மீரா பயந்துபோய் மீண்டும் ஓடிவிடப் போகிறார்கள்,'' என்றான் கௌதம்,

''நீங்கவேற. கொஞ்சம் மிரட்டி பார்க்கலாம்னு பார்த்தா. இப்படி பேசி சிரிக்க வெச்சிட்டீங்களே, உங்களை சாத்தினால் என்ன?'' என பாரதி சிரித்துக் கொண்டே கௌதமை அடிக்க விரட்ட அவன் மாடிப்படிகளில் தாவி இறங்கினான். பின்னாலேயே பாரதியும் ஓட, ''சீக்கிரமா கீழே வாங்க. கண்ணா முதல்ல சட்டைய மாட்டிட்டு வா'' என்றவாறே வெளியேறினான் ராதாகிருஷ்ணன். ஹேங்கரில் கிடந்த சட்டையை எடுத்து அவசரமாய் மாட்டிக் கொண்டே மீராவுடன் கீழே இறங்க, ''நூறுவருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணுந்தான் பேரு விளங்க இங்கு வாழணும்.'' என பாட்டுபாடி வரவேற்றனர் உமாபதியும் ராதாகிருஷ்ணனும்.



''புலவரை எதுக்கு எதிரி மன்னனிடம் அனுப்புகிறார் நம் மன்னர்?'' எதிரி மன்னரைப் பாடியே நம் புலவர் கொன்று விடுவாராம்!

எம். அசோக்ராஜா
அரவக்குறிச்சிபட்டி

அனந்தராமன் ஆச்சர்யமாகவும் சீதாராமன் ஆனந்தமாகவும் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரும் வேகமாக வந்து தந்தையரின் பாதம் தொட்டு வணங்க மனமார ஆசீர்வதித்தனர். ''சீதாராமா. இது போதும்டா, என் இரண்டு பெண்களையும் உன் வீட்டுக்கே கொடுத்ததில் எனக்கு வெகுதிருப்திடா, இனிமே எனக்கு என்னடா, நிம்மதியா கண்ணை மூடுவேன்'' என்றதும்.

''என்னமாமா இது? இப்பவே கண்ணை மூடிட்டா எப்படி. உங்க பேரன் பேத்திகளை யார் பார்த்துக் கொள்வதாம். வருடத்திற்கு ஒன்றாக இருவரும் பெற்றுத்தருகிறோம். நீங்களும் அத்தையும் அவர்களை சீராட்டி பாராட்டி வளர்க்க வேண்டிய பொறுப்பு. வேண்டுமானால் அப்பாவையும் கூட்டுச் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்றான் கண்ணன்.

''ஆமாம், ஆமாம், அப்பாவையும் ஆபீஸிற்கு வரவிடாமல் வீட்டிலேயே இருக்கச் சொல்லி விடலாம்'' ஒத்துபாடினான் உமாபதி.

''இல்லடா தம்பி! பாவம் அம்மா. வீட்லவே கிடந்து வாழ்நாளை கழிச்சிட்டாங்க. இனிமேலாவது அவங்களையும் அப்பாவையும் வெளிநாட்டுக்கு ஹனிமூனுக்கு அனுப்பிடலாம் ''என்றான் ராதாகிருஷ்ணன்

'' உதைவாங்கப் போறடா நீ. சம்பந்திங்க முன்னாடி என்ன பேச்சு இது'' சரோஜா வெட்கத்தோடு அத [illegible] பாரதி

யது.

''இத்தனை கேலியும் கிண்டலும் எங்கேப்பா போச்சு இத்தினி நாளா. அப்பா எப்படி பயந்துட்டேன் தெரியுமா.'' நெகிழ்ந்தார் சீதாராமன்.

''மீராதாம்ப்பா இதையெல்லாம் கொண்டு போயிட்டா. ஆனா இப்போ வட்டியும் முதலுமா திருப்பித் தந்துட்டா இல்ல மீரா'' கண்சிமிட்ட மீராவை வெட்கம் பிடுங்கித் தின்ன ராதாவை கட்டிக் கொண்டாள்.

''கூடப்பொறந்தவ நான், எங்கிட்ட கூட ஒருவார்த்தை சொல்லவில்லையே நீ. இப்போது மட்டும் நான் வேண்டுமாக்கும். போய் கண்ணனையே கட்டிக் கொள்.'' என ராதா தன் பங்குக்கு மீராவை தள்ளிவிட, ''ஐ'ம்ரெடி'' என்றவாறு கண்ணன் மீராவை ஏந்திக் கொண்டான். அனைவரும் சத்தமாய் சிரிக்க பாட்டி வந்தார்.

''என்னடா இங்க சத்தம். இது என்ன வீடா சினிமா கொட்டகையா,'' என்றார் மிரட்டலாய்.

''ஐயோ பாட்டி! இத்தனை நாள் பண்டரிபாய் மாதிரி இருந்திட்டு இன்னிக்கு என்ன வடிவுக்கரசி மாதிரி பேசுறீங்க'' பதட்டத்தோடு கேட்டான் உமாபதி.

''பின்னே என்னடா! வீட்டுக்கு மூத்தவநான். எனக்கு இங்க என்ன மரியாதை இருக்கு'' என்றார் பாட்டி.

''தெய்வமே! எங்க குல தெய்வமே நீங்கதானே'' என்றவாறு கண்ணன் மீராவை இழுத்துக்கொண்டு பாட்டியின் காலில் விழ முகம் முழுக்க சிரித்து அவர்களை ஆசிர்வதித்து எழுப்பினார் பாட்டி.

''ஏண்டி பெண்ணே! உன் மனசு எப்பவோ எனக்கு தெரியும். யாருகிட்டயும் பேசாம போனியே. எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நானே எல்லாத்தையும் நடத்தியிருப்பேனே'' என்றார்.

''பாட்டீ'' அனைவரும் கோரஸாய் குரல் கொடுக்க, ''ஆமாண்டா, அன்னிக்கு அந்த லண்டன்காரப் பயலைக் காட்டி இவ அப்பன் இதுதாம்மா மாப்பிள்ளை பிடிச்சிருக்கான்னு கேட்டதுக்கு இவ யாரைப் பார்த்துக் கொண்டு தலையாட்டினாள் தெரியுமா?'' கேள்வியாய் பாட்டி நிறுத்த. ''யாரை?'' ஆர்வமாய் அனைவரும் நெருங்கினர்.

''நம்ம கண்ணனைத் தாண்டா விழியெடுக்காம பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்கு அப்பவே தெரிஞ்சுபோச்சு. உங்களுக்குத் தான் இப்போ தெரிஞ்சிருக்கு'' என்றார் கர்வமாய்.

''என்ன சொல்லு பாரதி. ஓல்டு ஈஸ் கோல்டு தான்'' என்றான் கௌதம் பாராட்டாய். ''கௌஷிக் ரியலி கிரேட். அவன் மட்டும் அந்த நாடகம் போடவில்லையென்றால்.. அய்யோ நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருக்கிறது.''

''நிச்சயமாய் என்னைச் சுற்றி எல்லோருமே நல்லவர்களாய் நிறைந்திருக்க நான்தான் எல்லோரையும் நோகடித்து விட்டேன்'' என்றாள் மீரா குற்ற உணர்வோடு.

''அதெல்லாமில்லை இந்த பெரிய மனுஷன் யாரைக் கேட்டு உன்னை விட்டுக் கொடுத்தானாம். அவனுக்கு இந்த பனிஷ்மெண்ட் தேவைதான். ஆனா உங்க ரெண்டு பேருக்கும் ஜோடி பொருத்தம் சூப்பர் தான். ஏன்னா ரெண்டுமே மரமண்டைங்கதான்'' என ராதாகிருஷ்ணன் சொன்னதும் சிலிர்த்துக் கொண்டு வந்தாள் மீரா.

''நாங்க மரமண்டைங்களா. யார் சொன்னது?''

''நான்தான் சொன்னேன். பின்னே அன்று நானும் கௌஷிக்கும் எத்தனை மறைமுகமாய் சொன்னோம். கண்ணா நீயே மீராவைகட்டிக்க மீரா தான் உனக்கேத்த பொண்ணுன்னு நானும் உங்க மனசுக்கு பிடிச்ச மாப்பிள்ளைன்னு கௌஷிக்கும் எத்தினிவாட்டி சொன்னோம். புரிந்ததா உங்கள் இருவருக்கும். அப்போ மரமண்டைங்க தானே'' தோளை குலுக்கியவாறு இராதாகிருஷ்ணன் சொல்ல ''கிட்ட வா. முட்டிப்பார்த்திடலாம்'' என்றவாறே கண்ணன் நெருங்க. ''ராதா என் தலையைக் காப்பாற்று'' என்றவாறு மனைவியிடம் தஞ்சம் புகுந்து கொண்டவனைப் பார்த்து அனைவரும் கலகலத்து சிரிக்க மாலை தென்றலோடு புதுவசந்தமும் அவர்களோடு இணைந்து கொண்டது.



''உங்க எம்.டி.யைப் பார்க்க இன்னும் எவ்வளவு நேரம் காத்திருக்கணும் சார்?''
''செகண்ட்ஸ் கணக்கில் காத்திருந்தால் போதும் 36000 செகண்ட்ஸ் வெயிட் பண்ணினால் போதும்!

-எம். அசோக் ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி



''உங்க வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காங்க தானே?''
''உனக்கு எப்படித் தெரிந்தது?''
''உனக்கு பதில் உன் மனைவி சமைக்கிறாளே?''

-எம். அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி





27/05/2011 15:37